103 வேலன் வாசகம்




103
1.61.

வே

ஆ

103/6

Editor
Srimathi V. T. Lakshmi, M.A., L. T.,
Author
வித்துவான் T. S. தேவசேனாபதி தேசிகர்,
தலைமைத் தமிழாசிரியர்,
ஸ்ரீ வேங்கடேஸ்வர உயர் நிலைப்பள்ளி, வேலூர்.


அகில இந்தியப் பதிப்பகம்
வேலூர் — பெங்களூர்.



பதிப்புரிமை]


[விலை ரூ. 1-25

TB
031(6)
N60

அகில இந்தியப் பதிப்பகம்

வேலூர் — பெங்களூர்

86839

ர்ளை-1.

# முன்னுரை

இவ்வாசக வரிசையில் இது ஆறும் புத்தகம். சிறுவர்களும், சிறுமியர்களும் படிப்படியாகத் தேர்ச்சி பெற ஒன்று முதல் ஆறும் வகுப்பு வரை இவ்வாசக வரிசை தயாரிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வெளியான அரசியலார் பாடத்திட்டப் படி இப் புத்தகத்தில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அனுபவமுள்ள ஆசிரியர்களது கருத்துக்களின்படியே இவ் வாசக வரிசைகள் தயாரிக்சப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் புதிய சொற்கள். பயிற்சி வினுக்கள், இலக்கணப் பாடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

சிறுவர்கள் உவந்து மௌனமாக வாசிக்கவும், நடிக்கவும், சம்பாஷிக்கவும் ஏற்ற பாடங்கள் இதன்கண் தரப் பட்டுள்ளன. சிலபாடங்களைப் பார்த்தெழுதியும், சொல்லி எழுதியும், சிறுவர்கள் தேர்ச்சி யுறுவார்கள் என நம்பப் படுகிறது. பள்ளி ஆசிரியர்களும், தமிழ் அன்பர்களும் தங்கள் பள்ளிகளில் இவ்வாசக வரிசையைப் பாட புத்தகமாக வைத்து ஆதரவு தந்து மேலும் இப்பணியில் எம்மை ஊக்குவிப்பார்கள் என்று நம்புகிறோம்.

இந்நூலில் தங்கள் பாடங்களைச் சேர்த்துக்கொள்ள இசைவு தந்த உரிமையாளர்களுக்கு எமது நன்றி.

பதிப்பாசிரியர் தற்சமயம் Chief Inspector of Approved Schools and Vigilance Service, Madras, ஆக இருந்த போதிலும் இப்புத்தகம் அவ்வுத்தியோக முறையில் பதிப்பிக்கப்பட்டதல்ல.

**11–10–60** **ஆசிரியர்.**

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | மாணவர்க்கு அறவுரை | ... | 1 |
| 2. | அணுக்கள் | ... | 7 |
| 3. | குடை பிறந்த கதை | ... | 14 |
| 4. | நிலக்கரி | ... | 21 |
| 5. | பரணர் வரலாறு | ... | 27 |
| 6. | ரூபாய் (தன்வரலாறு) | ... | 31 |
| 7. | ஸ்ரீ ஆண்டாள் | ... | 37 |
| 8. | நாட்டின் முன்னேற்றத்திட்டம் | ... | 44 |
| 9. | குகன் (நாடகம்) | ... | 51 |
| 10. | தமிழ்ப் பெரியார் திரு. வி. க. | ... | 59 |
| 11. | வீமனும் பகாசுரனும் | ... | 65 |
| 12. | ஏழைகளின் துணைவி: ஸ்ரீமதி ஐடா ஸ்கட்டர் | ... | 73 |
| 13. | இயற்கை கற்பிக்கும் பாடம் | ... | 81 |
| 14. | அறிவுடையொருவனை அரசனும் விரும்பும் | ... | 85 |
| 15. | பொங்கல் விழா | ... | 92 |
| 16. | தமிழ் கேட்ட மன்னன் (நாடகம்) | ... | 96 |
| 17. | காண்ட்லா | ... | 105 |
| 18. | ஆர்க்கி | ... | 109 |

# செய்யுட் பகுதி

## I. வாழ்த்து

1. கடவுள் வாழ்த்து ... 114
2. கலைமகள் வாழ்த்து ... 114
3. ஏசு நாமம் ... 115
4. தமிழ் வாழ்த்து ... 115

## II. நீதிப் பகுதி

1. நீதிநெறி விளக்கம் ... 116
2. திருக்குறள் ... 118
3. நான்மணிக் கடிகை ... 121
4. குசேலோ பாக்கியானம் ... 123
5. ஆசாரக் கோவை ... 127

## III. பல்சுவைப் பகுதி

1. மழைக்குறி ... 129
2. பண்ணைத் தலைவன் ... 129
3. அறுவடை செய்தல் ... 129
4. மலைவளம் ... 130
5. பறவைகள் கண்ணியில் விழுதல் ... 131
6. வருணனை ... 132
7. மேலாடையின் மேன்மை ... 133
8. பழக்கமும் பிறவிக்குணமும் ... 134
9. சிறியோர் தன்மை ... 134
10. சங்கொலி ... 136

# நாட்டு வணக்கம்

ஜன கண மனஅதி நாயக ஜயஹே
    பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
    த்ராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
    உச்சல ஜலதி தரங்கா

தவசுப நாமே ஜாகே
    தவசுப ஆசிஷ மாங்கே
    காயே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜய ஹே
    பாரத பாக்ய விதாதா
    ஜயஹே! ஜயஹே! ஜயஹே!
    ஜய ஜய ஜய ஜயஹே!

—கவிஞர் இரவீந்திரநாத தாகூர்

# வேலன் தமிழ் வாசகம்

## ஆறும் வகுப்பு

## மாணவர்க்கு அறவுரை

Srimathi. V. T. Lakshmi.

ஆண்டவன் அருளால், நல்ல பெற்றோரை அடைந்து, இளமையும் எழிலும் பெற்று, சிறந்த பள்ளியில் கல்விப் பயிற்சி யடைய முன்வந்திருக்கும் என் அருமை மாணவர்களே! வருங்காலத்தில் நம் நாட்டு மக்களாய் விளங்கப்போகும் குழந்தைகளே! உங்களைக் காணும்பொழுது, என்னுள்ளத்தில் மட்டற்ற மகிழ்ச்சி பொங்கி வழிகின்றது. அம்மகிழ்ச்சி மிகுதியினால் உங்களுக்குச் சில அறவுரைகளைக் கூற விரும்புகிறேன். அவற்றைக் கடைப்பிடித்து நீங்கள் நடப்பீர்களானால், எதிர் காலத்தில் உங்கள் வாழ்க்கை மிகச் சிறந்து விளங்கும் என்பதற்கு ஐயமே இல்லை.

மாணவ மணிகளே! பள்ளியில் பயிலும் உங்களுக்கு முக்கியம் கடவுள் "பக்தி," பெற்றோர்களிடத்தில் அன்பு, பெரியோர்களுக்குக் கீழ்ப்படிதல், ஆசிரியர்களுக்கு அடங்கி, அவர் கூறும் பாடங்களை ஊக்கத்துடன் கேட்டுப் பயில்வது, அவர்களுடைய ஆணையின்படி நடப்பது, மற்றும் நல்ல நண்பர்களுடன் சேர்ந்திருத்தல்—இவை போன்றவை மிக

அவசியம். இதுவன்றி நல்லொழுக்கம், அடக்கம், ஊக்கம், உறுதி, தாய்மொழிப் பற்று, தாய்நாட்டுப் பற்று முதலியவை உங்களுக்கு இன்றியமையாதவை. இன்று இளைஞராக இருக்கும் நீங்களே எதிர் காலத்தில் முடிசூடா மன்னர்களாகவும், மதிநலமிக்க அமைச்சர்களாகவும், நாட்டை நன்முறையில் ஆளும் அரசியல் தலைவர்களாகவும், நாட்டின் சுதந்திரத் தைக் காக்கும் வீரம் மிக்க படைத்தலைவர்களாவும் ஆக வேண்டியவர்கள். இன்று பள்ளியில் பயிலும் சிறுவர்களாகிய நீங்களே நாளை மக்கள் குரலைச் சட்ட சபையிலும் எதிரொலிப்பவர்களாக ஆகக் கூடும். நம் நாட்டின் பெரியோர்கள் சொல்வது போல, நீங்கள் நம் நாட்டின் விலைமதிக்க முடியாத மாணிக்கத் தூண்கள். இவ்வளவு பொறுப்பு வாய்ந்த சிறுவர்களாகிய நீங்கள் எத்தகைய பண்புடையவர்களாக விளங்க வேண்டும் என்பதைச் சற்று யோசியுங்கள்!

'அவனன்றி ஓரணுவும் அசையாது.' நம்மை ஆக்கிப் படைப்பவர் எல்லாம் வல்ல இறைவன் என்றும் உங்களுடைய மனதில் வைத்துப் பூசை செய்யுங்கள். எப்பொழுதும் நல்ல எண்ணங்களே உங்கள் மனதில் குடியிருக்க' வேண்டும். பிறருக்கு நன்மைதரும் பணிகளிலேயே எக்காலத்திலும் ஈடுபடுங்கள். உண்மையைப் பேசவும், நெறி தவராமல் நடக்கவும், எச்சமயத்திலும் எக்காரணத் துக்காகவும் அஞ்ச வேண்டாம்.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்றார் நமது தமிழ்நாட்டின் அருமைப் பாட்டி ஔவை. தாய் தந்தையர்களைப் பேசும், நடமாடும், தெய்வங்களாக நினைத்து, அவர்களிடத்தில் அன்பு

கொண்டு, அடங்கியிருந்து, அவர்கள் கூறும் நெறியில் நின்று, "இவனைப் பெற்றவர்கள் மாதவஞ் செய்தவர்கள்!" என்று பிறர் புகழும்படி துலங்க வேண்டும். அவ்வாறே இளமையில் பள்ளியில் பயிலும்போது, ஆசிரியர்களிடத்திலும், அடக்கத்துடன் அவர்களின் இஷ்டத்தின்படியும் ஆணையின்படியும் படித்து, அவர்களின் நல்லாசியைப் பெற வேண்டும். அப்படிப்பட்ட சிறுவர்களே எதிர் காலத்தில் எல்லா வகையிலும், எல்லாத் துறைகளிலும் முன்னேறுவார்கள். "அடக்கம் அமரருள் உய்க்கும்" என்பது வள்ளுவர் வாய்மொழி யன்றோ!

மேலும், எப்பொழுதும் நல்லவர்களின் சிநேகத்தையே நாடவேண்டும். நல்லவர்களுடைய சேர்க்கையினால்தான் நல்ல ஒழுக்கம், பழக்கம், வழக்கம் முதலியவை உங்களுக்குப் படியும். தீயவர்களுடன் எப்பொழுதும் தொடர்பு வைத்துக் கொள்ளுவது தகாது. இளமையில் தீயவர்களுடன் சேர்ந்து பழகியதின் மூலம், பலர் பிற்காலத்தில் பொய் பேசவும், களவாடவும், சூதாடவும் கற்று, பல இன்னல்களை யடைந்து, பலருக்குத் துன்பங்களை விளைவித்து, நடைப்பிணங்களாய்த் தங்கள் வாழ்க்கையை நடத்தி, பழி பாவத்துடன் மறைகின்றனர். அத்தகைய வாழ்க்கையை நீங்கள் ஒருவரும் கனவிலும் நினைக்க வேண்டாம்.

மூங்கில் மெல்லியதாக இருக்குங்கால், அதை வளைத்தால் வளைகின்றது. அவ்வாறு வளையும் மூங்கிலே அரசரது குடையில் இடம்பெற்று அவர்கள் முடிக்கு மேலிருந்து நிழலைக் கொடுக்கும் சிறப்பைப் பெறுகின்றது. அவ்வாறே சிறுவர்களாகிய நீங்கள் சிறு மூங்கில் போல இளமை

யிலேயே பணிந்து கற்ருல், பலவகையிலும் மேன்மை யுற்றுப் பிற்காலத்தில் எல்லோராலும் மதிக்கப் படுவீர்கள். "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது." சிறுவயதில் செருக்கினுலோ, பராமுகத்தினுலோ, சோம்பலினுலோ நன்கு படிக்கா விட்டால், கடந்த காலம் திரும்பி வராது; கற்காத கல்வியையும் பிறகு கற்க முடியாது. இதை நீங்கள் நன்கு உணர வேண்டும்.

அதுவன்றி, பள்ளியில் பயிலும் பொழுது, உங்களுக்குத் தளரா ஊக்கமும், குன்ரு உறுதியும் மிகவும் வேண்டியவை. படிக்கும் மாணவர்களுடைய கடமையானது ஊக்கத்துடன் கல்விச் செல்வத்தை யடைவதே யாகும். வேறெந்தத் துறைகளிலும் மனதை ஓடவிடக் கூடாது. அரசியல் துறைகளில் பங்கெடுத்தலோ, அதில் தீவிரமாய்ச் சிந்தித்தலோ தகாதவை. மன உறுதியையும், ஊக்கத்தையும், படிப்பிலன்றி வேறு துறைகளில் வீணுக்குவது மதியீனமாகும். மேலும், பள்ளி மாணவர்களாகிய நீங்கள் ஒழுங்கீனத்தை அறவே உதறிவிட்டு, கல்வியை நன்கு கற்று, எல்லாத் துறைகளிலும் முன்னேறி, குன்றின் மேலிட்ட விளக்குப் போல, பல சிறியோர்களுக்கு வழிகாட்டிகளாக இருந்து, பலரால்போற்றப் பெற்று வாழவேண்டும்.

பள்ளியில் படிக்கும்பொழுது, நீங்கள் உங்களுக்குக் கொடுத்திருக்கும் எல்லா வசதிகளையும் சரிவரக் கையாண்டு, தெளிவான சிந்தனையுடன் பாடங்களைப் படித்து, அவற்றில் கூறியிருக்கும் நல்லவற்றை ஆராய்ந்தறிந்து, அறிவோடு உள்ளத்தில் கொள்ளவேண்டும். "எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும், அப்பொருள் மெய்ப்

பொருள் காண்ப தறிவு.'' இதுவன்றி, உங்களுக்கு எழுதும் ஆற்றலோடு, பேசும் ஆற்றலும் அமைய வேண்டும். இதற்காக உங்கள் பள்ளியின் சொற் பயிற்சி மன்றத்தில் சேர்ந்து, தவருமல் பங்கெடுத் துக்கொள்ள வேண்டும். எழுத்துப் போட்டியிலும் போட்டியிட வேண்டும். இத்திறமைகள் ஒரே நாளில் திடீரென்று அமைந்து விடா. விடா முயற்சியுடன் அவைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். கடைசியாக, படிப்பில் பொருமைக்கு இடமில்லை; ஆனல் களங்கமில்லாப் போட்டியிட்டுக் கற்பதற்கு இடமுண்டு. வகுப்பில் நீங்கள் ஒவ்வொரு வரும், முதல் மாணவனுக இருக்க முயற்சி செய்து போட்டியிட வேண்டும். அப்படித் திறமை பெற்ற வர் இறுமாந்து இருக்கக் கூடாது. அகந்தை யடைந்தால் கீழ்நிலைக்கு வந்துவிடக் கூடும்.

அருமை மாணவர்களே! நான் கூறியவை களுக்கெல்லாம் மேலான ஆற்றல் ஒன்று உங்களுக்கு முக்கியமாக இருக்க வேண்டும். அதுதான் தாய் மொழிப்பற்று. அன்பும், அறிவும், பண்பும் பெறத் தாய்மொழிப்பற்று மிக்க அவசியம். இப்பற்று தாய் நாட்டுப் பற்றுக்கு அடிப்படையாகும். ஆனல், தாய் மொழிப் பற்றினல் மற்ற மொழிகளை வெறுக்கக் கூடாது. பல மொழிகளைக் கற்றுப் பயில்வது மிகவும் நல்லது. ஒவ்வொரு இந்தியனும், தன் தாய் மொழியைத் தவிர, இரண்டு மொழிகளை யாவது கற்கவேண்டியது அவசியம். சிறுவர்களாக இருக்கும் பொழுது மொழிகளைக் கற்பது எளிது; ''இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'' என்று அறிஞர்கள் வற்புறுத்துகிருர்கள்.

இறுதியாக உங்களுக்கு நான் கூற விரும்புவது:– நீங்கள் எல்லாரும் தாய்நாட்டுப் பற்றுள்ளவர்களா யிருக்க வேண்டும். ''தேசாபிமானம்'' நாட்டின் பிற்கால மக்களாகிய உங்களுக்கு இன்றியமையாத பண்பாகும். நாம் வாழும் தாய்நாட்டை நாம் வழிபடும் இறைவனுக்கும், நம்மை ஈன்ற பெற்றோர் களுக்கும் ஒப்பிடலாம். நன்கு கல்வி கற்று, அறிவை அடைந்து, நல்ல ஒழுக்கத்துடன் வாழ்க்கையை நடத்தி, தாய்நாடு முன்னேற்றமடைய எத்துறையிலாவது நீங்கள் பணிபுரிவது நீங்கள் பிறவியை யெடுத்ததற்குச் செய்ய வேண்டிய கடமையாகும். ஆயின், உங்கள் தாய் நாட்டுப் பற்றினால் இதர நாடுகளை வெறுக்கவோ அவைகளைப் பகைத்திடவோ கூடாது. இவையெல்லாவற்றையும் நீங்கள் மனத்தில் வைத்து, வாழ்க்கையை நடத்தினால் எதிர் காலத்தில் உங்கள் பணியும், புகழும் குன்றின் மேலிட்ட விளக்குப் போல நெடுந்தூரம் பரவும். நீங்கள் மானிலமே போற்றும் நன்மக்களாக வாழ் வீர்கள்; இது திண்ணம்.

# 2. அணுக்கள்

இந் நூற்றாண்டில் விஞ்ஞானத்துறை மிகவும் முன்னேறியுள்ளது. இங்ஙனம் முன்னேறுவதற்குக் காரணமாக இருந்தவர் பலர். அவர்களுள் சிறப்பாகக் கூறத் தகுந்தவர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் என்னும் பேரறிஞர். இந்த நூற்றாண்டை அணுயுகம் என்று அழைப்பதற்கு அடிகோலியவர் இவரே.

இவர் ஜெர்மனி தேசத்தில் உல்ம் என்னும் ஊரில் 1879–ஆம் ஆண்டு யூதர் மரபில் பிறந்தார். இவர் இளமையில் மியூனிக் என்னும் ஊரில் உள்ள பள்ளியில் கல்வி பயின்றார். கீழ் வகுப்புக்களிலேயே உயர் வகுப்புக் கணிதங்களை எல்லாம் பிறர் உதவியின்றித் தாமே படித்தறிந்தார். பிறகு சுவிட்சர்லாந்தில் தொழில் நுணுக்கப் பள்ளியில் நான்கு ஆண்டுகள் கணிதம், பௌதிகம், முதலிய கலைகளைக் கற்றுத் தேர்ந்தார். பௌதிகத்துறையில் பல சோதனைகளைச் செய்தார். இவ்விதமான பரிசோதனைகள் இவருக்குப் பெரு விருந்தாக இருந்தன. பல்கலைக் கழகங்கள் பலவற்றில் பௌதிகப் பேராசிரியராக இருந்தார். தம் ஆராய்ச்சியின் பயனாகக் கண்ட உண்மைகளைக் கட்டுரைகளாக எழுதி வெளியிட்டார். இவர் கண்ட புதிய தத்துவத்திற்காக இவருக்கு நோபல் பரிசு வழங்கப் பெற்றது. இவருடைய புகழ் உலகெங்கும் பரவியது.

இனி இவர் கண்டறிந்த உண்மைகளை அறிவோம். பொருள்களின் சாதாரண அளவு

காளகிய நீளம், அகலம், உயரம் (கனம்) இவற்றுடன் காலம் என்னும் நான்காவது அளவு ஒன்றையும் சேர்த்தே பார்க்கவேண்டும் என்பது. இவர் காலத்தை நான்காவது அளவு என்று குறிப்பிட்டார். அதைப் பொருள்களினின்றும் பிரிக்க முடியாது. காலம் இல்லாமல் எப்பொருளும் இருக்க முடியாது. காலம் பொருள்களிலிருந்து பிரிக்க முடியாத தொடர்புடையது. இதுவே இவர் கண்டறிந்த முதல் உண்மை.

சர் ஐஸக் நியூடன் என்பவர் புவி ஈர்ப்புச் சக்தியைக் கண்டறிந்தார். சான்ருக, நாம் ஒரு கல்லைமேலே எறிவோமாளுல் அது கீழே பூமியில் வந்து விழுந்து விடுகிறது. இதையே புவியின் இழுக்கும் சக்தி என்பர் இதைப் பற்றி ஐன்ஸ்டீன் பத்து ஆண்டுகள் ஆராய்ந்து அதில் சில மாறுதல்களை வெளியிட்டார். எல்லாச் சக்திகளையும் ஒருமைப்படுத்திக் காலத்துடனும் இடத்துடனும் சேர்த்து ஆராயவேண்டும் என்பது இவர் கொள்கை. இவருடைய புதிய கொள்கைக்குத் தொடர்புத் தத்துவம் என்று பெயர். இதுவே இவர் கண்டறிந்த இரண்டாவது உண்மையாகும்.

இவர் கண்டறிந்த மூன்ருவது உண்மை பொருளுக்கும் சக்திக்கும் உள்ள தொடர்பு. பொருள்கள் இந்தச் சக்தியின் இருப்பிடம். அப்பொருள்களில் இருக்கும் சக்தியை வெளிப்படுத்த முடியும் என்பதையும் எப்பொருளில் எவ்வளவு சக்தி தங்கி இருக்கிறது என்பதையும் கண்டறிய ஒரு எளிய சூத்திரத்தை இவர் இயற்றித் தந்தார். அணுவில் உள்ள சக்தியை வெளிப்படுத்துவதற்கு இவர் சூத்திரமே அடிகோலியது.

இரண்டாவது உலகப்போரில் ஜப்பான் பெரும் பங்கு எடுத்துக் கொண்டது; பல இடங்களைச் சில நாட்களில் பிடித்துக் கொண்டது; அமெரிக்காவுக்குச் சொந்தமான சில தீவுகளைத் தன்வசம் செய்து கொண்டது. அமெரிக்காவிற்கும் ஜப்பானிற்கும் நேர்முகமாகப் போர் தொடங்கியது. அந்தப்போரில் அமெரிக்கா ஜப்பானை ஒரே நாளில் அடக்கி ஒடுக்கி விட்டது. பலர் உயிர் துறந்தனர். அமெரிக்க விமானம் மேலே பறந்து வருகிறது என்றால் ஜப்பானிய மக்கள் அஞ்சி நடுங்கினர். இதற்குக் காரணம் அமெரிக்கா அந்தப் போரில் அணுகுண்டுகளைப் பயன் படுத்தியதே ஆகும். மிக எளிதாக அமெரிக்கா வெற்றி பெறுதற்குத் துணையாக இருந்த அணு குண்டு ஐன்ஸ்டீன் ஆராய்ச்சியால் உண்டானதே.

இக்காலத்தில் விஞ்ஞானிகள் அணு சக்தியைக் கொண்டு பலவிதமான ஆக்க வேலைகளைச் செய்யலாம் என்று கண்டறிந்திருக்கிறார்கள். அதனால் கடலில் செல்லும் கப்பல்களையும் வானில் பறக்கும் விமானங்களையும் ஓட்டமுடியும் என்றும், மின்சார சக்தியை உண்டாக்க முடியும் என்றும், பெருத்த அளவில் வெப்பத்தை உண்டாக்கி கடல் நீரைத் தூயதாக்கிப் பயிர்த் தொழிலுக்குப் பயன்படுத்த முடியும் என்றும் அந்த நீர்வளத்தைக் கொண்டு பாலைவனங்களைச் சோலை வனங்களாக்க முடியும் என்றும் விஞ்ஞானிகள் கருதுகிறார்கள், ஆகவே ஐன்ஸ்டீனை அணுயுகத்தின் தந்தை யென்று கூறுவது மிகவும் பொருந்தும்.

உலகில் உள்ள விஞ்ஞானிகளில் தலை சிறந்தவர் ஐன்ஸ்டீன். மனிதனுடைய மூளைக்கே எட்டாத பல அரிய செய்திகளைச் சிந்தித்துக் கண்டறிந்து உலகமே வியக்கும்படி செய்துவிட்டார். அவர் மூளையே

அவருக்கு ஆராய்ச்சிக் கூடம். அவர் சிந்தனேயே அவரது ஆராய்ச்சிக் கருவி. அவர் கண்டறிந்த உண்மைகளைப் படித்துப் புரிந்து கொள்பவர் மிகச் சிலரேயாவர். இரண்டாயிரம் ஆண்டுகளாக மக்கள் பெற்ற கணித அறிவையும் பௌதிக அறிவையும் சுருக்கிச் சாரமாகத் தொடர்புத் தத்துவத்தை ஐன்ஸ்டீன் தந்திருக்கிறார் என்று பெர்ட்ரண்டு ரஸ்ஸல் என்னும் பெரியார் கூறுகிறார்.

ஐன்ஸ்டீன் அமைதியும் அடக்கமும் உடையவர். சலியா உழைப்பும் தளரா ஊக்கமும் மிகுந்தவர். ஆடம்பர வாழ்க்கையை விரும்பாதவர். குழந்தை யுள்ளம் படைத்தவர். விஞ்ஞானத்தை மக்கள் நல னுக்கே பயன்படுத்தவேண்டும் என்னும் ஆசை உடையவர். ஆருயிருக்கெல்லாம் அன்பு செய்ய வேண்டும் என்னும் பண்பு மிக்கவர். கடவுள் பற்றுடையவர். பிறப்பால் மக்கள் அனைவரும் ஒன்றே என்ற உயரிய கருத்துடையவர். ஒரு சமயம் வாழ்க் கையில் வெற்றி பெறுவதற்கு வழி என்னவென்று ஒருவர் கேட்டார். அதற்கு இவர், "வேலை, விளை யாட்டு, பேசாதிருத்தல் (மௌனம்) இம்மூன்றுமே ஒருவனுக்கு வெற்றியை அளிக்கும்," என்று கூறினார். மற்றொரு சமயம், "என்னுடைய ஆராய்ச்சியைப் பற்றிப் பலர் பலவாறு மிகைப் படுத்திப் புகழ்ந்து பேசுகிறார்கள். ஆனால் அப்புகழ் மொழிகளுக்கு நான் தகுதியுள்ளவனே என்பது எனக்கு ஐயமாகவே இருக்கிறது," என்று கூறினார்.

"உலகில் பலர் பல பொருள்கள் அழகாக இருக் கின்றன என்று கூறுகின்றனர். ஆனால் விஞ்ஞானத் தைக் காட்டிலும் அழகான பொருள் உலகில் வேறில்லை என்பது என் கருத்து" என்று அவர் அடிக்

கடி கூறுவதுண்டு. "வாழ்க்கை முழுதும் விஞ்ஞானத் துறையில் உழைப்பது ஒரு பெரும்பேறு என நான் கருதுகிறேன்." என்று அவர் கூறியதிலிருந்து அவருக்கு விஞ்ஞானத்துறையில் இருந்த அளவிலா ஆர்வமும் அடக்கமும் நமக்குப் புலனாகின்றன. சிந்தனைக்கு எப்பொழுதும் வேலை கொடுத்தால் செய்ய முடியாத செயலே உலகில் இல்லை என்று அவர் நம்பி இருந்தார்.

இத்தகைய பெரியாரை அவர் தாய்நாடாகிய ஜெர்மனி வைத்துப் போற்றவில்லை. ஜெர்மனியில் சர்வாதிகாரம் செலுத்திவந்த ஹிட்லர் என்பவர் ஐன்ஸ்டீனுக்குச் செய்த கொடுமைகள் பல; கேட்போரையும் நடுங்கச் செய்தன, இவர் யூதர் மரபைச் சேர்ந்தவர். இந்த ஒரே காரணத்திற்காக இவருடைய உரிமைகளும், சொத்துக்களும் ஹிட்லரால் பறிமுதல் செய்யப்பட்டன. அவனுடைய கொடுங்கோலுக்கு அஞ்சி ஐன்ஸ்டீன் 1933-ல் ஜெர்மனியை விட்டு ஓட வேண்டியதாயிற்று. இவரைப் பிடித்துத் தருபவருக்கு 20,000 மார்க்கு என்னும் ஜர்மன் நாணயங்களை அளிப்பதாக ஹிட்லர் அறிவித்திருந்தான். ஆதலினால் இவர் முதலில் பிரான்சுக்கும், பிறகு பெல்ஜியத்திற்கும் அங்கிருந்து இங்கிலாந்திற்கும் ஓடினார். இங்கிலாந்து இவருக்குப் புகலிடம் அளித்தது.

இங்கிலாந்திலிருந்து அமெரிக்கா சென்றார். அங்கு, பிரின்ஸ்டன் பல்கலைக் கழகம் இவருக்கு நிலையான பேராசிரியர் பதவியும் பாதுகாப்பும் அளித்து ஏற்றுக்கொண்டது. இவ்விடத்தில் இவர் தமது ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து நடத்திவந்தார். இவர் தமக்குக் கேட்ட ஊதியம் 1,250 பவுன்கள். ஆனால்

இவருக்கு 5,000 பவுன்கள் அளிக்கப்பட்டன. இவர் அமெரிக்காவிலேயே தங்கி அமெரிக்கக் குடிமகன் ஆனார். 1945-ல் வேலையினின்று ஓய்வு பெற்ற பின்னரும் இவர் நுட்பமான ஆராய்ச்சிகளைச் செய்து வந்தார். இவர் தமது எழுபத்தாறும் வயதில் உயிர் துறந்தார். இவர் பிரிவைக் கேட்டு உலக விஞ்ஞானத் தலைவர் அனைவரும் மிகவும் வருந்தினர்; உலகம் தந்த ஒப்பற்ற பெரியார் என்று இவரைப் புகழ்ந்தனர்.

## அருஞ்சொற்கள் :

அடிகோலுதல் - தொடங்குதல். அமைதி - சாந்தம் ஆருயிர் - அருமையான உயிர். ஐயம் - சந்தேகம். புகலிடம் — அடைக்கலம். ஊதியம் - சம்பளம்.

## வினாக்கள் :

1. ஐன்ஸ்டீனுக்கு நோபல் பரிசு ஏன் வழங்கப் பெற்றது ?
2. இவர் கண்டறிந்த முதல் உண்மை யாது?
3. இவர் கண்டறிந்த இரண்டாவது உண்மை யாது ?
4. இவர் கண்டறிந்த மூன்றாவது உண்மை யாது?
5. இவரை அணுயுகத் தந்தை என்று கூறுவது எப்படிப் பொருந்தும் ?
6. இவர் இங்கிலாந்திற்கு ஓடக் காரணம் என்ன ?
7. இவரால் அமெரிக்கா அடைந்த நன்மை என்ன ?

## இலக்கணம் :

**1.** வினு எழுத்து என்ருல் என்ன ?

நாம் பிறரைக் கேள்வி கேட்பதற்குப் பயன்படும் எழுத்துக்கள் வினு எழுத்துக்கள் என்று சொல்லப்படும்.

அவை ;— ஏ, யா. ஆ, ஓ, ஏ.

**2.** அவை எத்தனை வகை ?

அகவினு, புறவினு என்று இருவகைப்படும்.

| அகவினு: | புற வினு: |
|---|---|
| எவன் ? | எப்பையன் ? |
| யாவன் ? | அவனு ? |
| ஏவன் ? | அவனே ? |
| | அப்படியா ? |

# 3. குடை பிறந்த கதை

உலகில் மக்களாகப் பிறந்த நாம் இன்பம் துன்பம் இரண்டையும் அடைகின்றோம். இன்பம் அடையும்போது மகிழ்கின்றோம்; துன்பம் அடையும் போது வருந்துகின்றோம். துன்பம் வரும்போது அதைப் போக்கிக் கொள்ள வழிகளைத் தேடு கிறோம. இவ்வாறு துன்பத்தைப் போக்கிக் கொள்ளக் கண்டுபிடித்த பொருள்கள் பல. அவற்றில் குடை என்பதும் ஒன்று. உலகில் முதன் முதலில் தோன்றிய மனிதன் மழையில் நனைந்து துன்புற்றான். பிறகு வெயிலில் வெளியே நடந்து செல்வது அவனுக்குத் துன்பமாக இருந்தது. இந்த விதமான துன்பங்களைப் போக்கிக் கொள்ள அவன் செய்த ஆராய்ச்சியின் பயனே 'குடை' என்னும் பொரு ளாகும். அக்குடை பிறந்து வளர்ந்த வரலாற்றைச் சிறிது ஆராய்வோம்.

மெஸபடோமியா என்று ஒரு நாடு உண்டு. அங்கு வாழ்ந்த முதல் மனிதர் ஆடை அணிகள் அணிந்து வாழும் நாகரிக நிலையை அடைந்திருந்தனர். அவர்கள் காடுகளை அழித்து நிலமாக ஆக்கிக் கொண்டிருந்த காலம் அது. அவர்களில் ஒருவன் நிலத்தைப் பண்படுத்திக் கொண்டிருந்த போது தன்னுடைய ஆறுமாதக் குழந்தையை அருகில் இருந்த மரத்தின் அடியில் படுக்க வைத்திருந்தான். அப்பொழுது ஒரு பெருத்த மழை வந்தது. குழந்தை மழையில் நனைந்து விடப்போகிறது என்று ஓடி வந்தான். ஆனால் ஒரு பாம்பு, அக்குழந்தையின் தலை மீது படம் எடுத்து, மழையில் நனையவொட்டாமல் தடுத்துக் கொண்டிருந்ததைக் கண்டான். இங்ஙனம்

ஒரு தடுப்பைத் தலைக்குமேல் வைத்துக் கொண்டால் மழையில் நனையாமல் எங்கும் செல்லலாம் என்பதைக் கண்டறிந்தான் அவன்.

குடையை அமைப்பதற்கு முதலில் அவன் சிந்தனைக்கு எட்டியது தாமரை இலையே யாகும். தாமரை இலைகளை ஒன்று சேர்த்துப் பின்னினுன். அதன் நடுவில் ஒரு சிறிய மூங்கில் கழியைச் செரு கினுன். மனிதனுக்கு முதன் முதலில் காட்சியளித்த குடை இதுவே யாகும். பாம்பின் படத்தைப்போல விளங்கிய அதைத் தலைக்குமேல் பிடித்துக் கொண்டு இன்பக் கூத்தாடினுன். இதைக் கண்டு அவன் நண்பர்களும் வியப்படைந்தனர். பாம்பின் நிகழ்ச்சி யையும் அவர்களுக்குக் கூறினுன். அவர்கள் நஞ்சுடைய பாம்புங்கூட நன்மை செய்யக் கூடிய அளவிற்கு அக்குழந்தை புண்ணியம் செய்திருப்பதாக அதனை மதித்தார்கள். பிற்காலத்தில் அக்குழந்தையே தங்களுக் கெல்லாம் தலைவனுவான் என்றும் நம்பினுர்கள்.

அக்குழந்தை வளர்ந்து பெரியவன் ஆனுன். அவனே அக்காட்டு மனிதர்களுக்கு அரசனும் ஆனுன். அன்று முதல் அந்தக் காட்டு மனிதர் களாகிய குண்டர்களும், அக்கம் பக்கத்துக் காட்டு மனிதர்களாகிய முண்டர்களும், அரசனுக இருப்ப வனுக்கு மட்டுமே குடை உரியது என்று ஏற் படுத்திக் கொண்டனர். பிறகு நாள் செல்லச் செல்ல அரசன் மற்றவர்களை ஆட்டிப் படைக்கும் வல்லமை பெற்றுன். அப்போது மற்றவர்கள் குடையைச் செய்து பயன்படுத்தக் கூடாது என்று ஆணை பிறப்பித்தான். நாள் செல்லச் செல்ல, குடை பட்டுத் துணியில் செய்யப்பட்டு, பற்பல நிறங்களில்



பல விதக் குடைகள்.

அமைக்கப்பெற்றது. முத்துக்களாலும், பவழங்க ளாலும் அழகு செய்யப் பெற்று மூங்கில் கழியில் இழுத்துக் கட்டப் பெற்று ஓரங்களில் பட்டுக் குஞ்சங்கள் தொங்கும் படியாகவும் அமைக்கப் பெற்றது. மூங்கில் கழிக்கு வெள்ளிப் பூணும் கட்டினார்கள். அரசனது செல்வச் சிறப்பை இது காட்டலாயிற்று. இது வெண்பட்டினால் செய்து அரசனுக்கு கொடுக்கப்படட்தால் வெண்கொற்றக் கொடை என்றும் வழங்கலாயிற்று.

அரசனுக்கு அரசனாக விளங்குபவன் ஆண்டவன் என்பதை அன்று வாழ்ந்த மக்கள் உணர்ந்தனர். ஆண்டவனுக்கு உருவம் அமைத்து வழிபடவும் தொடங்கினர். அரசனுக்கு உரிய சிறப்பெல்லாம் ஆண்டவனுக்கும் உரியவை என்று குடை முதலிய வற்றை இறைவன் திருவுருவத்திற்கும் பிடித்தனர். ஆண்டவனுக்குப் பிடிக்கப்பட்ட குடையைப் பூச்சக்கரக்குடை என்று வழங்கினர். அக்குடை தூய்மையின் அடையாளமாக வெண்மையான பட்டினால் செய்யப்பட்டது. குடைப்பற்று மிகுந்த அரசர்கள் மற்ற நாட்டின் மீது படையெடுத்து அதை வென்று அதற்கு அறிகுறியாக அந்த நாட்டு மன்னன் குடையைக் கைப்பற்றத் தொடங்கினர்.

இறைவனுக்கு மட்டும் அன்று; இறைவனைப் போலவே மதிக்கப்பெற்ற பெரிய மடாதிபதிகளும், குருமார்களும், தம்பிரான்களும் அக்குடையைப் பயன்படுத்தலானார்கள். அன்றியும், அரசர்களும், தங்கள் படைகளில் வீரமாகப் போர் செய்த வீரர் களுக்கு வீரப்பதக்கம், வீரவாள் கொடுப்பது போன்று, குடையையும் வீரத்தைக் காட்டும் விரு தாகக் கொடுக்கலாயினர். ஆண்டவனுக்குச் செய்யப்

பட்டகுடை வெண்பட்டினுல்ஆனது. அடுத்தபடியாக இருந்த அரசன் குடையும் வெண்பட்டினுல் செய்யப் பட்டது. விருதுக்குடைகள், வெண்மை நிறத்தில் இல்லாமல் வெவ்வேருன நிறத் துணிகளினுலோ பட்டுகளினுலோ செய்து வழங்கப்பெற்றன.

ஐரோப்பிய நாட்டினரும், வெளிநாட்டுத் தூது வரும் நம் நாட்டிற்கு வந்தபோது, நம் நாட்டில் வளர்ச்சி யடைந்த குடையைக் கண்டு பெரிதும் மகிழ்ந்தனர். அதே நேரத்தில் ஆங்கிலேயர் குடைகளை வியக்கத்தக்க முறையில் செய்து ஆபிரிக்காவில் கொண்டு சென்று விற்ருர்கள். சீன நாட்டார் மூங்கில் தாளினுல் குடை செய்து ஜாவா, சுமத்திரா, மலேயா, பர்மா முதலிய இடங்களில் விற்றுவந்தார்கள். எளிய மக்கள் தங்கள் நிலைக்கு ஏற்ப, பனை ஓலை, தென்னைஓலை, தாழைமடல் முதலிய பொருள்களால் குடைகள் செய்து பயன்படுத்திக் கொண்டார்கள். காலப் போக்கில் அரசரும் அதைத் தடுக்க வில்லை.

இவ்வாறு குடையைப் பயன்படுத்தி வந்த மனிதனுக்கு அறிவு பெருகிற்று. எந்திரம் செய்யும் அளவிற்கு அவன் அறிவு வளர்ந்தது. விரித்தபடியே குடையை வைத்திருப்பது மிகவும் இடையூருக இருந்தது. அவன் வசிக்கும் இடத்தில் பெரும் பகுதியை அது அடைத்துக் கொண்டது. வெளியே எடுத்துச் செல்லும்போது கைக்கு அடக்கமாக இல்லை. மழை பெய்யாத போதும், வெயில் இல்லாத போதும், இராக் காலங்களிலும் விரித்த படியே எடுத்துக் கொண்டுபோக வேண்டியதாக இருந்தது. இதற்கு ஒரு வழி கண்டவன் கான்ஸ் (.)ான்டிநேபில் என்னும் நகரத்தில் வாழ்ந்தவன்.

அவன் பதினைன்காம் நூற்றுண்டில் குடையை விரிக்கவும் மடக்கவும் முடிந்த ஒரு அமைப்பைப் பயன்படும்படி செய்தான். அங்கு அதற்குச் சாட்டிர் என்று பெயர்.

ஆங்கிலேயர்கள் வாளா இருப்பார்களா? இந்தக் குடையை விடச் சிறிது சிறப்பாகச் செய்து பயன் படுத்தியவர் ஜோன்ஸ் ஹான்வே என்பவர். இது 1712-ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. ஆங்கிலேயர் கையில் அகப்பட்ட பொருள் வளராமல் இருப்ப தில்லை. பலவிதமான வண்ணச் சேலைகளுடன் நடமாடும் பெண்களுக்கேற்ப பலவித நிறம் அமைந்த குடைகள், பூவேலை, நகாஸ் வேலை செய்து விற்கப்பட்டன.

இதுவரையிலும் எந்திர அறிவு மட்டிலும் பெற்றிருந்த மனிதனுக்கு விஞ்ஞான அறிவு வளரத் தொடங்கியது. அந்த அறிவை, குடையின் மீதும் அவன் செலுத்தினன். சூரியனது கதிர்க் கற்றையை ஆராய்ந்தவர்கள் அக்கதிர்களில் ஏழு நிறங்கள் இருப்பதனை அறிந்தார்கள். எனவே வர்ணங்கள் இருக்கும் குடையில் சூரியன் வெயில் பாய்ந்தால் தடையின்றி ஊடுருவிச் செல்லும் என்பதை அறிந் தனர். சூரியனுடைய கதிர்களில் காணப்படாத கறுப்பு நிறமுள்ள துணியைக் குடைக்குப் பயன்படுத்தினல் சூரியன் ஒளி கறுப்புத் துணியில் ஊடுருவிப் பாய முடியாது என்று பகுத்துணர்ந் தார்கள். அன்று முதல் இன்றுவரையில் சாதாரண மாகக் குடைக்குக் கருப்புத் துணியையே பயன் படுத்தி வருகிறுர்கள்.

"ஆம்! மன்னர்களிடம் மட்டுமே அகப்பட்டு அருமை பெருமையாக இருந்த நாம் இன்று அனைவர்

கையிலும் அகப்பட்டுச் சீரழிகிறேமே!" என்ற துக்கத்தின் அறிகுறியாக அது கருப்புத்துணியை உடுத்திக் கொண்டது என்று ஓர் அறிஞர் ஓர் அழகான கற்பனையைக் கூறியுள்ளார்.

கையில் குடை இருந்தால் சூரியனுடைய வெயிலை மறைக்கும்; மழையில் நனையாமல் நம்மைக் காக்கும்; நடந்து செல்லும்போது ஊன்று கோல் போல் உதவும்; நாய் குரைத்து நம்மிடம் நெருங்குமானால் அதனை அதட்டும்; எளிய மனிதனை யும் பெரிய மனிதனுக்கும்; என்று இவ்வாறு பல விதமான நன்மைகளைக் கையில் குடையிருந்தால் மக்கள் அடையலாம் என ஒரு தமிழ்ப்புலவர் அருமையான செய்யுள் ஒன்றில் கூறியுள்ளார்.

### அருஞ்சொற்கள் :

அணி - ஆபரணங்கள். நஞ்சு - விஷம். ஆணை-உத்தரவு. வழிபடுதல் - வணங்குதல். இடையூறு - துன்பம்.

### வினாக்கள் :

1. முதலில் குடையைச் செய்தவன் யார்? எவ்வாறு?
2. வெண்கொற்றக் கொடை என்று எதனை வழங்கினர்?
3. விருதுப் பொருளாகக் குடை இருந்தது எவ்வாறு?
4. சாட்டிர் என்று எதற்குப் பெயர்?
5. குடைக்குக் கருப்புத்துணி அமைத்தது ஏன்?
6. கறுப்புத் துணியைப் பற்றிய கற்பனை யாது?
7. குடையினால் உண்டாகும் நன்மைகள் யாவை?

### இலக்கணம்

1. உயிர்மெய்யெழுத்து எத்தனை வகைப்படும்?

உயிர் மெய்க் குற்றெழுத்து என்றும், உயிர்மெய் நெட்டெழுத்து என்றும் இருவகைப்படும்.

# 4. நிலக்கரி

## (உரையாடல்)

**கீரன் :** இளங்கோ! வருக, வருக, இன்று வருவாயோ, வரமாட்டாயோ என்று ஐயுற்றிருந்தேன். வந்து விட்டாயே! மிகவும் மகிழ்ச்சி.

**இளங் :** நான் உறுதியாக வருவேன் என்று சொன்னேன்; அல்லவா ?

**கீரன் :** சரி, நாம் சற்று வெளியே சென்று உலாவி வரலாமா ? மாலையில் உலாவி வந்தால் மனதுக்கு நலமாம் என்று பெரியோர் சொல்லுவர். எந்தப் பக்கம் செல்லலாம் ? புகைவண்டி நிலையத்தின் பக்கமாகச் செல்லுவோமா ?

**இளங் :** செல்லுவோம். நேற்று ஆற்றங்கரைப் பக்கமாகச் சென்றோம். இன்று புகைவண்டி நிலையத்தின் பக்கமாகச் செல்லுவோம்; புகைவண்டி வரும் நேரந்தான்.

**கீரன் :** வெளியூருக்குப் போகின்றவர் பயணச் சீட்டைப் பெற்றுக்கொண்டு நிலையத்தில் கூட்டமாக நிற்கிறார்கள். இன்று ஏன் இவ்வளவு கூட்டம். நாளைய தினம் திருமண நாளாக இருக்கலாம். வண்டியும் அதோ வந்துவிட்டதே !

**இளங் :** கீரா! வண்டியின் முன் புறத்தில் கருமையான புகை வருகிறதே! அது ஏன் தெரியுமா ?

**கீரன் :** என்ஜினுக்கு நிலக்கரியைப் போடுகிறார்கள். அதனால் கரிய புகை வருகிறது.

**இளங் :** நிலக்கரி எப்படிக் கிடைக்கிறது? அது உனக்குத் தெரியுமா?

**கீரன் :** அதைப்பற்றி விளக்கமாக எனக்கு ஒன்றும் தெரியாது. உனக்குத் தெரிந்தால் எனக்கும் சொல். நானும் தெரிந்து கொள்ளுகிறேன்.

**இளங் :** நிலக்கரி, பூமியின் அடியில் சுரங்கம் வெட்டி அதிலிருந்து எடுக்கப்படுகிறது.

**கீரன் :** பூமிக்கு அடியில் நிலக்கரி எப்படி வந்து சேர்ந்தது?

**இளங் :** பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு காடுகள் அடர்ந்திருந்தன. முதிர்ந்த மரங்கள் அக்காடுகளில் நிறைந்திருந்தன. அவை மண்ணில் புதைந்து, பல்லாயிரம் ஆண்டுகள் கழிந்தபின், இறுகிக் கெட்டியாகிவிட்டன. அம்மாதிரியான இடங்களில் பூமியைக் குடைந்து சென்றால் நிலக்கரி கிடைக்கிறது.

**கீரன் :** இளங்கோ! மிகவும் நல்ல கருத்து. இது எப்படி உனக்குத் தெரியும்?

**இளங் :** நேற்று ஒரு புத்தகம் படித்தேன். அந்தப் புத்தகத்தில் நிலக்கரி எடுப்பதைப் பற்றியும் அதனால் மக்களுக்கு உண்டாகும் பயனைப்பற்றியும் விளக்கமாகக் கூறப்பட்டிருந்தது.

**கீரன் :** அதன் பயனைப்பற்றிச் சிறிது விளக்கமாகவே சொல். நானும் அறிந்துகொள்ளுகிறேன்.

**இளங் :** புகைவண்டி நீராவியினால் ஓடுகிறது. நீராவி உண்டாக்குவதற்கு நிலக்கரியைப் பயன்படுத்துகிறார்கள். ஆகவே புகைவண்டி ஓடுவதற்கு

நிலக்கரி மிகவும் இன்றியமையாதது என்பது நன்ருக விளங்குகிறதல்லவா ?

கீரன் : நிலக்கரியினுல் இந்த ஒரு நன்மைதான் உண்டா ? இன்னும் ஏதாவதுண்டா ?

இளங் : நிலக்கரியினுல் உண்டாகும் பயன்கள் பலவாகும். நிலக்கரியிலிருந்து ஒருவிதமான வாயுவை (புகையை) உண்டாக்குகிருர்கள். அதனை நிலக்கரிப் புகை என்று கூறுவர்; ஆங்கிலத்தில் "கோல் காஸ்" என்று சொல்லுவார்கள். அந்தப் புகையைக் கொண்டு விளக்கு எரிக்கலாம், சமையலும் செய்யலாம்.

கீரன் : நம் நாட்டில் இவ்வாறு நிலக்கரிப் புகை பயன்படுத்தப் படுகிறதா ?

இளங் : நம் நாட்டில் இந்த நிலக்கரிப் புகையை அவ்வளவு மிகுதியாகப் பயன் படுத்துவது இல்லை. பம்பாயில் சில விடங்களில் பயன் படுத்துவதாகக் கேள்வி. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஜப்பானிலும் நிலக்கரிப் புகையின் பயனை நன்ருக அறிந்து அதனை மிகுதியாகப் பயன்படுத்துகிருர்களாம். பெரிய தொழிற்சாலைகளிலும் இந்நிலக்கரிப் புகையை உபயோகப் படுத்துகிருர்களாம்.

கீரன் : அடுப்புக்கரிக்கும் நிலக்கரிக்கும் வேறுபாடு உண்டா ?

இளங் : நிறைய உண்டு. நிலக்கரி பூமியின் அடியி லிருந்து வெட்டி எடுக்கப்படுகிறது. மரக் கட்டைகளை எரிப்பதனுல் அடுப்புக்கரி உண்டா

கிறது. நிலக்கரி பெரிய தொழிற்சாலைகளுக்கும், புகை வண்டிகளுக்கும், நீராவிக் கப்பல்களுக்கும். பயன்படுத்தப் படுகிறது. அடுப்புக்கரி வீடுகளில் சமையல் செய்வதற்கும் மற்றும் சிறு தீ உண்டாக்கவும் உபயோகப் படுகிறது. அடுப்புக்கரியிலிருந்து பெருந் தீ உண்டாக்க முடியாது.

**கீரன் :** நிலக்கரி மிகவும் கருமையானது. பார்ப்பதற்கு மிகவும் வெறுப்பாகவும் இருக்கிறது. அதனைக் கைகளால் தொட்டாலும் கரு நிறம் ஒட்டிக் கொள்ளுகிறது. புகை வண்டியிலும், தொழிற் சாலைகளிலும் வேலை செய்பவர்கள், நிலக்கரியில் பழகுவதனால் அவர்கள். உடையும் உடலும் கரியாகி, அழுக்கோடு காணப்படுகிறார்கள். அதனால் நிலக்கரியைக் கண்டால் எனக்கு வெறுப்புண்டாகிறது.

**இளங் :** நீ மிகவும் தவருக எண்ணுகிருய். உலகில் மிகவும் விலையுயர்ந்த பொருள் வைரம். செல்வத்தில் சிறந்த மக்கள் வைரத்திஞல் மோதிரம் செய்து அணிகிருர்கள். பணக்காரர் வீட்டுப் பெண்கள் வைரத் தோடு அணியாமல் இருப்பதில்லை. அரசர்களுடைய முடிகளில் வைரங்கள் பதிக்கப்படுகின்றன. இந்தவிதமான சிறப்பினை உடைய வைரம் எப்படிக் கிடைக்கிறது. அதுவும் ஒரு வகை நிலக்கரியிலிருந்தே கிடைக்கிறது.

**கீரன் :** நீ சொல்வது எனக்கு வெகு வியப்பாக இருக்கிறது. வைரம் மிகவும் பளபளப்பாகவும், ஒளியுடனும் விளங்குகிறது. வெண்மை நிறமாகவும் இருக்கிறது. நிலக்கரியோ கருமை

நிறமாக இருக்கிறது. இரண்டும் ஒன்று என்று கூறுகிறாய்?

**இளங்:** ஆம், அதில் ஐயம் என்ன? நிலக்கரியும் வைரமும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தனவே யாகும். நவரத்தினங்கள் என்று நம் நாட்டுப் பெரியோர் கூறுவதனை நீ கேள்விப்பட்டிருப்பாய். இவை அனைத்தும் பூமியின் அடியில் இருந்து நமக்குக் கிடைத்த செல்வங்களே யாகும். பூமியிலிருந்து வெட்டி எடுத்தவுடன் எந்திரங்களினால் அறுக்கப்பட்டு ஒளியுடன் திகழும்படி செய்யப்படுகின்றன. சில நீல நிறமாகவும், சில சிவப்பு நிறமாகவும், சில பச்சை நிறமாகவும், சில சூரியன் கதிர்போல வெண்மை நிறமாகவும் இருக்கின்றன. இவற்றில் மிகவும் உயர்ந்தது வைரம்.

**கீரன்:** இளங்கோ! இன்று உண்மையாகவே சிறந்த செய்திகளை நான் அறிந்து கொண்டேன். பல நாட்கள் முயன்று கற்க வேண்டிய செய்திகளை இன்று இந்த ஒரு மணி நேரத்தில் தெரிந்து கொண்டேன். மிகவும் நன்றி.

**இளங்:** நேரம் ஆகிறது. வீட்டிற்குப் போகலாமா?

**கீரன்:** செய்வோம். நாளைய தினமும் உலாவ வரலாமா? வந்தால் இத்தகைய செய்திகளை நீ எனக்குச் சொல்ல வேண்டும். வணக்கம்.

**இளங்:** வணக்கம். போய்வருகிறேன்.

**அருஞ்சொற்கள் :**

மகிழ்ச்சி - சந்தோஷம். உலாவல் - நடத்தல். ஆண்டு - வருடம் .இன்றியமையாதது – அவசியமானது.

### வினாக்கள்:

1. நிலக்கரி பூமியின் அடியில் எப்படி வந்தது?
2. நிலக்கரிப் புகையின் பயன் என்ன?
3. அடுப்புக் கரியின் பயன் என்ன?
4. நிலக்கரியின் குடும்பத்தைச் சேர்ந்தவை யாவை?

### இலக்கணம் :

**1.** உயிர் மெய் குற்றெழுத்துக்கள் எத்தனை?

உயிர் எழுத்துப் பன்னிரண்டில் குற்றெழுத்துக்கள் ஐந்து. அந்த ஐந்து குற்றெழுத்துக்களும் பதினெட்டு மெய்யெழுத்துக்களின் மீது தனித்தனியே ஏறிவருவது ($5\times18=90$); உயிர்மெய் குற்றெழுத்துக்கள் தொண்ணூறு ஆகும்.

(உ-ம்.) க்+அ=க; க்+இ=கி; க்+உ=கு; க்+எ=கெ; க்+ஒ=கொ.

## 5. பரணர் வரலாறு

நந்தமிழ் நாட்டுப் புலவர்களைப் பற்றி அறிந்து கொள்ளுதல் அரிதாகும். ஏனெனில், அவர்களைப் பற்றிய வரலாறுகள் எழுதப்படவில்லை. அவ்வப் புலவர்கள் பாடிய பாடல் குறிப்புக்களைக் கொண்டும், பிற புலவர் கூறிய குறிப்புக்களைக் கொண்டும் மற்றும் சில வரலாறுகளின் மூலம் பண்டைக்காலப் புலவர்களைப் பற்றி அறியலாம்.

"பரணர்" சிறந்த புலவர்களில் ஒருவராகப் பண்டு திகழ்ந்தவர்; "கபில பரணர்" எனச் சங்க கால முதல் கபிலரையும் பரணரையும் போற்றி வந்தனர். இவர் இயற்றிய பாடல்கள் புறநானூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு, நற்றிணை, குறுந் தொகை முதலிய நூல்களில் காணப்படுகின்றன. இப்பாடல்களில் பல வரலாற்றுக் குறிப்புக்களை இவர் புலப்படுத்துகின்றார். எனினும் இவரது குலம், தொழில், இளமைப் பருவம் முதலியனவற்றைத் தெரிந்துகொள்ள இயலவில்லை. பரணர் காலத்தில் புகழுடைய பல புலவர்கள் வாழ்ந்திருந்ததாகத் தெரிகிறது. கழாத்தலையார், கபிலர், அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார், கழைதின் யானையார் முதலியோர் அவர்காலத்துப் புலவர்கள் எனலாம். பரணரால் பாடப்பட்டோர் இவர்களாலும் பாடப் பட்டுள்ளனர்.

பண்டைக் காலத்திலிருந்த புலவர்கள் முடியுடை மன்னர், சிற்றரசர், வள்ளல்கள் முதலோரைக் கண்டு

அவர்களைப் பற்றிப் பாடிப் பரிசில் பெற்று வாழ்ந்து வந்தனர். பழுமரம் தேடும் பறவைகள்போலப் புலவர்கள் வள்ளல்களைத் தேடிச் சென்று கொண்டே இருப்பர். அங்ஙனமிருந்தும் புலவர் பலர் வறுமை யுற்றனர். ஆயின் பரணர் பொருள் நாடி ஒருவரையும் கண்டதில்லை என அவர் பாடல் கொண்டு தெரிகிறது. "பசித்தும் வாரேம் பாரமுமிலமே" (புறம்) என்று பேகன் என்னும் வள்ளலிடம் பரணர் கூறுவதால், தான் எத்தகைய பரிசிலையும் நாடிச் சென்றதில்லை என்பது போதரும். பரணர், தமிழ் நாட்டின் எல்லாப் பகுதிகளையும் சென்றுகண்டு, அவ்விடங்களில் நிகழ்ந்த செய்திகளை நன்கு அறிந்தவர். எனவே, இவர் பாடல்களில் வரலாற்றுக் குறிப்புக்களை மிகுதியாகக் காணலாம். இவர் பாடல்களில் காணப்படும் வரலாற்றுக் குறிப்புக்களைப் போலப் பிற புலவர் பாடல்களில் காண்டல் அறிதாகும். எனவே இவரை 'வரலாற்று வல்லுநர்' என்றே கூறலாம். மாமூலர், கல்லாடர் போன்ற புலவர்களும் வரலாற்றுப் பகுதிகள் கூறுவதில் இவருக்குப் பின் நிற்போராவர். இவர் இளஞ்சேட் சென்னி, சேரன் செங்குட்டுவன், பேகன், கரிகாலன், ஆட்டன் அத்தி, ஆதிமந்தி, மருதி, மத்தி, ஆய் எயினன், அகுதை, நன்னன் முதலியோரையும், மற்றையவர்களையும் பாடி இவர்களைப் பற்றிய குறிப்புக்களைத் தம் பாடல்களில் அமைத்துள்ளார். சிலரைப்பற்றி இவர் பாடவில்லையாயின் அன்னாரைப் பற்றி நமக்கு ஒன்றும் அறிதற்கு வழியில்லை.

பரணர் பாடிய வரலாறுகளுள் ஒன்றினைப் பற்றி இங்குக் காண்போம். சோழ மன்னர்களுள் 'இளஞ் சேட் சென்னி' என்பவன் ஒருவனவன். இவன் பல அழகிய தேர்களை உடையவன் என்ற

காரணத்தால் 'சோழன் உருவப் பஃறேர் இளஞ் சேட் சென்னி' என்று அழைக்கப் பட்டான். இவன் சோழன் கரிகாலனுக்குத் தந்தை என்பர். இவ்வரசன் காலத்து வாழ்ந்த சேர அரசன், குடக்கோ நெடுஞ் சேரலாதன் என்பவனுவன். நெடுஞ்சேரலாதன் வட நாடு சென்று இமயமலையில் தமிழ் இலாஞ்சனையைப் பொறித்தமையால் இமய வரம்பன் நெடுஞ் சேரலாதன் என்றும் அழைக்கப் பட்டான். இவன், சேரன் செங்குட்டுவனுக்குத் தந்தை. இளஞ்சேட் சென்னியும், நெடுஞ்சேரலா தனும் ஒத்த ஆற்றல் வன்மை உடையவர். இவர்களுக்குள் ஏதோ சில காரணத்தால் பகைமை ஏற்பட்டது. இருவரும் பொருதனர்.

'பொருதல்' என்னும் தமிழ்ச் சொல் சிறந்த பொருள் உடையது. 'பொரு' என்னும் சொல் லுக்கு ஒப்பு என்பது பொருள். 'பொருதல்' என்ருல் சண்டையின் மூலமாக அவ்வவர் திறனை ஒப்புக் காண்டல் என்பதாகும். எனவே பண்டைக் காலத்து, ஒத்த ஆற்றல் உடையோரிடையேதான் போர் நடைபெறும். தமக்கு ஒப்பில்லாதாருடன் போரிடார் பண்டைய அரசர். குடக்கோ நெடுஞ் சேரலாதனும் இளஞ்சேட் சென்னியும் சரிசம தன்மையராதலால் ஒருவரோடு ஒருவர் பொருதனர். இருவருள் ஒருவரும் தோல்வி அடையவுமில்லை; வெற்றி அடையவுமில்லை; இருவரும் ஒரே நேரத்தில் போர்க்களத்தில் பட்டனர். இச் செய்தியைப் பரணர் அழகாகப் புறநானூற்றில் பாடியுள்ளார். இச் செய்தியைக் கழாஅத்தலையார் என்னும் புலவரும் கூறியுள்ளார்.

## அருஞ்சொற்கள் :

அரிது - அருமை. காண்டல் - பார்ப்பது. பொருதல் - போர் செய்தல். ஆற்றல் - திறமை.

## வினாக்கள்

1. பண்டைத் தமிழ்ப் புலவர்கள் சிலரின் பெயர்களை எழுது ?
2. பரணர் "பசித்தும் வாரேம்," என்று யாரிடம் கூறினார் ? இதனால் தெரிவது என்ன ?
3. பரணர் பாடல்களில் காணப்படும் அரசர்கள், வள்ளல்கள் யாவர் ?
4. உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி ஏன் அவ்வாறு அழைக்கப்பட்டான் ?
5. கழா அத்தலையார் கூறியது என்ன ?

# 6. ரூபாய்

## (தன் வரலாறு)




நான் ஒரு ரூபாய். நான் எவ்வளவு நேர்த்தியாகவும் வட்ட வடிவமாகவும் இருக்கிறேன், பார்! என் ஓரத்தில், சுற்றிலும், அரும்பிடப் பட்டுள்ளது. ஒரு பக்கத்தில் ஆங்கில அரசரான இந்தியச் சக்கரவர்த்தியின் தலையும், மற்ருெரு பக்கத்தில் பூ வேலைப்பாடும் பதிக்கப் பெற்றுள்ளன. இதனுல், இந்நாட்டில் ஆங்கிலேயர் அரசாண்ட காலத்தில் நான் பிறந்தேன் என்பது விளங்கும். நான் முதலில் வெளியே வந்தபோது வெகு பளபளப்பாக இருந்தேன். பிறகு, நாளடைவில் பலபேர் கைகளில் மாறி மாறிச் சென்று, அழுக்குற்று, பளபளப்புக் குன்றி, இருக்கிறேன். என்னைக் கைப் பற்றிக் கொள்ள ஒவ்வொருவரும் விரும்புகின்றனர்.

நான் வெளியே வருவதற்கு முன் ஒரு பணப் பையில் என்னைப் போன்ற பல நாணயங்களுடன் கட்டப் பட்டிருந்தேன். அப்பையில் நாங்கள் ஆயிரம் பேர் ஒன்ருக வெகு நாட்கள் கிடந்தோம். அம்மாதிரி பல பைகள் ஒரு இரும்பறையில் வைக்கப் பட்டிருந்தன. அது ஒரு பாங்கியைச் சேர்ந்த இடமாகும். நாள்தோறும் சில பைகள் அங்கிருந்து வெளியே எடுக்கப்பட்டு வந்தன. ஆனுல் அவை திரும்பவும் அவ்விடத்திற்கு வந்து சேரவில்லை.

ஒரு நாள் சில பைகள் வெளியே எடுக்கப்பட்டன. அவற்றுள் நானிருந்த பையும் ஒன்று. பையை அவிழ்த்து, சில நாணயங்களுடன் என்னையும் சேர்த்து எண்ணி ஒருவர் ஒரு கனவானிடம் கொடுத்தார். அக்கனவான் என்னைக் கொண்டு போய் ஒரு சாப்பாட்டு விடுதியில் கொடுத்து வயிறுர உண்டு சென்றார். அவ்விடுதிக்காரர் என்னை உடனே ஒரு கடைக்காரனிடம் அனுப்பினர். இவ்வாருக நான் ஒரே நாளில் பல பேர்களுடைய கைகளில் மாறிச் சென்றேன். அதனுல் எனக்கு இந் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்யவேண்டும் என்ற எண்ணம் மேலிட்டது.

முதல் ஐந்து வருட காலத்தில் நான் ஆயிரக் கணக்கான மக்களிடம் கைமாறிச் சென்றேன். நாட்டின் பல பாகங்களிலும் மூலை முடுக்குகளிலும் நடமாட நேர்ந்தது. ஒரு சமயம் நான் ஒரு கஞ்சன் வசம் அகப்பட்டுக் கொண்டேன். அவன் என்னை ஒரு இரும்புப் பெட்டியில் மற்றும் பல ரூபாய் நாணயங்களுடன் போட்டு அடைத்து விட்டான். அவ்வாறு நாங்கள் நானூறு பேர் சிறையிடப் பட்டிருந்தோம். அவன் நாள்தோறும் காலையிலும் மாலையிலும் எங்களை எண்ணுவதற்காக வெளியே எடுத்து மறுபடியும் சிறையிலிட்டு விடுவான். சில வருடங்கள் இவ்வாறு கழிந்தபின் ஒரு நாள் நாங்களிருந்த இரும்புப் பெட்டியை ஒரு சுத்தி கொண்டு ஒருவன் உடைப்பது போலச் சத்தம் கேட்டது. அதை உடைத்தவன் அக் கஞ்சனின் மகன். தன் தந்தை இறக்கும் தருவாயிலிருப்பதைக் கேட்டு அவன் எங்களுடைய விடுதலைக்கு வழி தேடினன். வெகு சீக்கிரத்தில் எங்கள் பலரையும்

அவன் பல வழிகளில் வாரி இறைத்து விட்டான். நான் ஒரு வைத்தியரிடம் போய்ச் சேர்ந்தேன். அவர் என்னை ஒரு மூலிகைக்காரனிடம் கொடுத்தார். அவன் என்னை ஒரு கள்ளுக் கடையில் கொடுத்து கள் குடித்து விட்டுச் சென்றான். கள்ளுக் கடைக்காரன் என்னை ஒரு கசாப்புக் கடைக்காரனிடம் அனுப்பி னான். அவனிடமிருந்து ஒரு ரொட்டிக் கடைக்கார னிடம் அனுப்பப் பட்டேன். அவன் தன் மனைவி யிடம் என்னைக் கொடுத்தான். அவள் என்னைத் தன் ஒரே மகன் வசம் கொடுத்தாள்.

அவன் ஒரு பெரிய ஊதாரி; "ஒரு ரூபாய்தானா!" வென்று கோபித்து, பல வசை மொழிகள் கூறி, என்னை வீசியெறிந்தான். ஒரு பழைய சுவற்றின் மீது மோதுண்டு கீழே விழுந்தேன். சற்றுநேரம் சென்றபின் அவன் வந்து என்னைத் தேடிப் பார்த்தான். நான் மண்ணில் புதைந்து கிடந்தேன்; அவன் என்னைப் பார்க்கவில்லை. எனக்கும் அவனைக் காண மனமில்லை; பயந்து, பதுங்கி இருந்தேன். இவ்வாறு பல மாதங்கள் கழிந்தன. ஒரு நாள் ஒருவன் அங்கு வந்து புல் வெட்டும்போது என்னைக் கண்டெடுத்தான். கிழிந்த மேல் துணியில் ஒரு மூலையில் என்னை முடிச்சிட்டுத் தோளின் மீது போட்டுக் கொண்டான். இவ்வாறு அவன்மீது சிலநாள் சவாரி செய்தேன். கடைத் தெருவின் வழியே கூட்டத்தில் அவன் போய்க் கொண் டிருந்தபோது ஒருவன் மெதுவாக அவனுக்குத் தெரியாமல் என்னை அவிழ்த்து எடுத்துக் கொண்டு போய் மற்ற சோம்பேறிகளுடன் சூதாட என்னைப் பணயமாக உபயோகப் படுத்தினான். இவ்வாழ்க் கையில் சில நாள் நான் ஈடுபட்டிருக்க நேர்ந்தது. கடைசியில் ஒரு நாள் அவன் பணத்தையெல்லாம்

தோற்றுவிட்டபின் என்னை ஒரு மிட்டாய்க் கடையில் கொடுத்து பல மிட்டாய்கள் வாங்கித் தின்றான். மிட்டாய்காரன் என்னை மிட்டாய் வாங்க வந்த ஒரு பெண்மணியிடம், பத்து ரூபாய்த் தாளுக்கு மீதிச் சில்லரையாகக் கொடுத்தான். அவளிடம் சில காலம் தங்கியிருந்தேன். பிறகு அவள் என்னை ஒரு நகைக் கடைக்காரனிடம் கொடுத்து பொன் நகை ஒன்று வாங்கிக் கொண்டாள்.

நகைக்கடைக்காரன் என்னைத் திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு ஒரு சிறு பெட்டியில் என்னைப் போன்ற சில பழைய நாணயங்களுடன் போட்டு விட்டான். அங்கிருந்த நண்பர்களுடன் உரையாடிய போது, எங்களையெல்லாம் ஒன்று சேர்த்து உலையி விட்டு உருக்கி எங்களில் உள்ள தூய வெள்ளியை மட்டும் எடுத்து விற்று ஊதியம்பெற அவன் எண்ணி யிருக்கிறான் என்று புலனாயிற்று. அந்தோ! இவ் வளவு சுற்றுப் பிரயாணம் செய்தும், எண்ணற்ற மக்களுக்கு எண்ணற்ற வழிகளில் பயன் பட்டும், பல சிறைகளில் அடைபட்டுக் கிடந்தும், கடைசியில் இவ்வாறு இறக்கவோ எனக்கு நேரிட்டுள்ளது என்று நான் புலம்பிக் கொண்டிருந்தேன். அச்சமயம் அக்கடைக்காரனுடைய சிறு மகன் அச்சிறு பெட்டியைத் திறந்து என்னை வெளியே எடுத்துத் தன் சட்டைப் பையிலிட்டுக்கொண்டு சென்றான். என்னே என் மகிழ்ச்சி! அவன் என்னைக் கொண்டு போய்த் தன் கைப் பெட்டியில் வைத்துக் கொண்டு நாள்தோறும் என்னைச் சற்று நேரம் எடுத்துப் பார்த்து மகிழ்ச்சியடைவான். அது முதல் எனக்கு சுற்றுப் பிரயாணமேயில்லை; நானும் அதை விரும்ப வில்லை; யமனிடமிருந்து தப்பினேன். பிழைத்தேன் என்று நினைத்து இச்சிறுவன் வசத்திலேயே இருந்து வந்தேன்.

ஒரு நாள் மற்ெறாரு ரூபாய் நாணயமும் என்னுடன் வந்து சேர்ந்தது. அந்நண்பனைக் கண்டு களிப்புற்று, நாட்டு வரலாறுகளைப் பற்றிக் கேட்கலானேன்; அது கூறியதாவது:

முன்பெல்லாம் நம் போன்ற ரூபாய் நாணயங்கள் பெரிதும் செலாவணியில் இருந்து வந்தன. அப்போது நாணயங்களிலிருந்த தூய வெள்ளியின் விலையே அவற்றுக்கு மதிப்பு அளித்து வந்தது. நாளடைவில், வெள்ளியின் விலை அதிகரிக்கவே, நாணயத்திலிருந்த வெள்ளியின் விலையே நாணயத்தைக் காட்டிலும் அதிக மதிப்புள்ளதாயிற்று. எனவே, நாணயங்களை உருக்கி அவற்றிலிருந்த தூய வெள்ளியை மட்டுமே விற்று மக்கள் ஊதியம் பெறலாயினர். அதனால், அரசினர் தூய வெள்ளி பாகத்தைக் குறைத்து, மற்ற உலோகங்களை மிகுதியாகக் கலந்து ரூபாய் நாணயங்களை அச்சிட்டு வழங்கலாயினர். தவிரவும், இரண்டாவது உலக மகா யுத்தத்தின் விளைவாக உயர்தர உலோகங்கள் கிடைப்பதும் அரிதாயிற்று. ஆகவே, உள்நாட்டுச் செலாவணிக்காகக் காகித நாணயத் தாள்களை அரசினர் அச்சிட்டு வழங்கலாயினர். காகித நாணயங்களை அச்சிட வேலையும் குறைவு; செலவும் குறைவு; அவற்றை எடுக்கவும், எண்ணவும், சுமக்கவும் எளிது; மக்களும், அரசினரும் இவற்றைக் கையாளுவதில் மிகவும் ஆர்வங் கொண்டனர். ஆகையால் உலோக நாணயங்களை எவரும் பாராட்டுவதில்லை. நமக்கெல்லாம் முன்போல் அவ்வளவு பெருமையும் இல்லை; சுற்றுப் பிரயாணமும் இல்லை.

இவற்றை யெல்லாம் கேட்ட நான், "இச் சிறுவனிடமிருப்பதே மேல்; சுற்றுப் பிரயாணமே

வேண்டாம்,'' என்று எண்ணங் கொண்டேன். ஆயினும், ''எனது முடிவு ஒரு நாள் வந்தே தீரும்; அது எப்படியாகுமோ, என்ன நேரிடுமோ!'' வென்று கவலையுடன் இருந்து வருகின்றேன்.

## வினுக்கள்

4. நாணயங்கள் எங்கெங்கே எவ்வாறு அடைபட்டிருக்கின்றன?

5. நாணயத்திற்கு விருப்பம் என்ன?

## இலக்கணம்

1. உயிர்மெய் நெட்டெழுத்துக்கள் எவை?

உயிர் எழுத்து பன்னிரண்டில் நெட்டெழுத்து ஏழு. அந்த ஏழு நெட்டெழுத்துக்களும் பதினெட்டு மெய் எழுத்துக்களின் மீது தனித்தனியே ஏறிவருவது. ($7 \times 18 = 126$); உயிர்மெய் நெட்டெழுத்து நூற்று இருபத்தாறு ஆகும்.

(உ-ம்.) க்+ஆ=கா; க்+ஈ=கீ; க்+ஊ=கூ; க்+ஏ=கே; க்+ஐ=கை; க்+ஓ=கோ; க்+ஔ=கௌ.

# 7. ஸ்ரீ ஆண்டாள்

ஸ்ரீ வில்லிபுத்தூர் என்பது பாண்டிய நாட்டில் உள்ள ஒரு பழம் பகுதி. திருமால் எழுந்தருளியுள்ள புனித நகரங்களில் அதுவும் ஒன்று. நெடுநாட்களுக்கு முன்னர் அந் நகரத்தில் விஷ்ணுசித்தர் என்பவர் வாழ்ந்து வந்தார். அவ்வூரில் உள்ள கோயிலில் வீற்றிருக்கும் திருமாலுக்கு வடபத்திரசாயி என்று பெயர். ஆலிலை மீது பள்ளிக்கொண்டுள்ளவர் என்பது அதன் பொருள். விஷ்ணுசித்தருக்கு அக் கடவுளின் மீது மிகுந்த அன்பு. நாள்தோறும் திருமாலுக்கு மலர்மாலை தொடுத்துக் கொடுப்பார். அதற்காக நந்தவனம் ஒன்று ஏற்படுத்தி இருந்தார். மலர் மாலையைக் கட்டிக் கோயிலுக்குக் கொண்டு கொடுப்பதில் அவர் தவறியதே இல்லை. அதனால் அவரைப் பெரியாழ்வார் என்றும் அழைத்தனர். அவருடைய மனைவியாரும் கணவன் கருத்திற்கிசைந்து நடந்து வந்தார்.



நாட்கள் செல்லச் செல்ல அவர்களுக்குக் குழந்தை இல்லையே என்ற கவலை மிகுதியாயிற்று. கோயிலுக்குச் செல்லும் போதெல்லாம் தம் கவலையைத் திருமாலிடம் விண்ணப்பம் செய்து வந்தார்கள். ஒரு நாள் பெரியாழ்வார் மலர் எடுப்பதற்கு நந்தவனத்தை அடைந்தார். அந்த வனத்தில் ஒரு பகுதியில் துளசிச் செடிகள் நிறைந்

திருந்தன. ஒரு துளசிச் செடியின் அருகில் சிறு குழந்தை ஒன்று இருப்பதை அவர் கண்டார். "இது ஒரு பெண் குழந்தை. துளசியின் அண்டையில் இருப்பதனுல் இது திருமாலுக்கே உரியது. இதைக் கோயிலுக்கு எடுத்துச் செல்வேன்," என்று எண்ணினர். அக்குழந்தையை எடுத்துக் கொண்டு இறைவன் முன் இட்டார். இவருடைய மகிழ்ச்சிக்கு ஓர் எல்லை இல்லை. அப்பொழுது இறைவன், "அன்பனே! உன் மனக் கவலையைப் போக்கவே இக் குழந்தையை உனக்கு அளித்தோம். இதற்குக் கோதை என்று பெயர் இடுக. இக் குழந்தையின் சிறப்பால் நீ சீரும் சிறப்பும் அடைவாய்," என்று கூறினர்.

இதைக் கேட்ட பெரியாழ்வார் இறைவன் கருணையை எண்ணி எண்ணி மகிழ்ந்தார். குழந்தையை இரு கைகளாலும் வாரி அணைத்து எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்து தன் மனைவியிடம் கொடுத்தார். குழந்தை இறைவன் திருவருளால் கிடைத்த செய்தியை அறிவித்தார். அவருடைய மனைவியாரும் அளவிலா இன்பம் அடைந்து குழந்தையை வாங்கி முத்தமிட்டு உச்சி மோந்து அன்பாகத் தாலாட்டிச் சீராட்டி வளர்த்து வந்தார்.

வளர்பிறைச் சந்திரனே போன்று கோதை வளர்ந்து வந்தாள். பெரியாழ்வார் கோதைக்கு அறிவு புகட்டும் கதைகள் பல கூறுவார். குழந்தையும் பக்திக் கதைகளை மிகவும் ஆவலோடு கேட்டு வருவாள். கல்வி கற்கவேண்டும் என்னும் அவாவும், நெறி தவருமல் நடக்கவேண்டும் என்னும் ஆசையும் கோதைக்கு உண்டாயின. படிக்கும் நேரம் போக

மற்றக் காலங்களில் இறைவன் திருநாமத்தைக் கூறிக் கொண்டே இருப்பாள். தந்தையோடு நந்தவனம் சென்று மலர் பறிப்பாள். திருமாலின் திருவிளை யாடல்களைத் தந்தையார் கூறக் கேட்டுக் கோதை மனம் உருகுவாள். அந்தத் திருமாலை என்று காண் பேன் என்று அவள் உள்ளம் துடிப்பாள். திருமாலைப் போற்றும் தமிழ்ப் பாடல்களையே படித்துப் படித்து இன்புறுவாள். இலக்கண இலக்கியங்களில் சிறந்த அறிவு பெற்றுச் செந்தமிழ்ப் பாடல்கள் இயற்றுவதில் இவள் வல்லவள் ஆனாள்.

பெரியாழ்வாரைப் பட்டர்பிரான் என்றும் அழைப்பார்கள். ஒரு நாள் அவர் மாலையைத் தொடுத்துப் பூக் குடலில் வைத்துவிட்டு வெளியே சென்றிருந்தார். இதனை யறிந்த கோதை அப் பூமாலையை எடுத்துத் தன் கழுத்தில் அணிந்து தன் அழகினைக் கண்ணாடியில் பார்த்தாள்.

தன் மேனி அழகைக் கண்டு இது இறைவ னுக்கு மிகவும் பொருத்தமாக இருக்கும். இறைவன் ஏற்றுக் கொள்வார் என்று மகிழ்ந்தாள். நாள் தோறும் இவ்வாறே செய்து வந்தாள். இந்த நிகழ்ச்சி பட்டர்பிரானுக்குத் தெரியாது. ஒருநாள் கோதை இறைவனுக்காகக் கட்டி வைத்திருந்த மாலையைத் தன் கழுத்தில் அணிந்து கண்ணாடி முன் அழகு பார்ப்பதைப் பெரியாழ்வார் பார்த்து விட்டார். "கோதாய்! நீ மிகவும் பேதை. என்ன செய்தாய்? இறைவனுக்கு உரிய மாலையல்லவோ?" என்று கோபம் கொண்டார். வேறு மலர்கள் பறித்து வந்து மாலையாகக் கட்டி இறைவனுக்குச் சாத்தினார்.

திருமால் அவர் கனவில் அன்று தோன்றி, "பட்டர் பிரானே! நீர் செய்தது மிகவும் தவறு. பூமா தேவியே கோதையாகத் தோன்றி இருக்கின்ருள்; அவள் சூடிக்கொடுக்கும் மாலேயே நமக்கு மிகவும் உவப்பாயுள்ளது. அதையே எமக்குச் சாத்து வீராக," என்று கூறிஞர். அத்துடன் நில்லாமல் அவ்வூரிலுள்ள திருமால் அடியவர் அனைவர் கனவிலும் அவ்வாறே இறைவன் கூறிஞர். பட்டர்பிரான் கோதையின் பெருமையை அறிந்து மிகவும் அன்போடு, "என்னை ஆண்டாள் இவளே," என்று போற்றிப் புகழ்ந்தார். அன்று முதல் கோதைக்கு 'ஆண்டாள்' என்ற பெயரும், மலர் மாலேயைச் சூடிக் கொடுத்ததனுல் 'சூடிக் கொடுத்த சுடர்க் கொடி' என்ற பெயரும் வழங்கலாயின.

ஆண்டாள் சூடிக் கொடுத்த மலர் மாலேயை அணிந்தால் ஆண்டவன் மகிழ்வார். அம்மாலேயி லிருந்து நறுமணமும் தெய்வ மணமும் வீசுவது கண்டு அனைவரும் இன்பம் அடைவர். ஆண்டாளோ திருமால் புகழைப் பாடுவதிலும், அவர் திருவிளே யாடல்களேப் பேசுவதிலும் காலங் கழித்து வந்தாள். இவ்விதமாகத் திருமணப் பருவத்தை அடைந்தாள். ஏற்ற கணவன் கிடைக்க வேண்டுமே என்று பட்டர்பிரான் கவலே கொண்டிருந்தார். ஒரு சமயம் "அம்மா! நீ யாரைத் திருமணம் செய்து கொள்ளப் போகிருய்?" என்று கேட்டார். "மனிதனுக்கு நான் வாழ்க்கைப் படமாட்டேன்," என்று ஆண்டாள் உறுதியாகக் கூறிவிட்டாள்.

திருமாலேயே கணவனுக வடைய வேண்டும் என்பது அவள் கருத்து. அதற்காக நோன்பு நோற்ருள். அதற்குப் பாவை நோன்பு என்று

பெயர். பாவையே போன்ற சிறு பெண்கள் தங்கள் குலதெய்வத்தைப் போன்ற பாவைகளைச் செய்து அவைகளை வழிபட்டு நோன்பு செய்வர். இந்த நோன்பை ஆண்டாள். மிகவும் புனிதமாக நடத்தி வந்தாள் அதற்காகத் திருப்பாவை பாடினாள். திருப்பாவை ஆண்டாளுடைய உள்ளத்தின் அன்பை அப்படியே எடுத்துக் காட்டக் கூடியது.

திருமால் திருவரங்கம் என்னும் புண்ணிய நகரில் பள்ளிகொண்டிருக்கும் காட்சியில் அவள் மனம் ஈடுபட்டது. "அவரை நேரில் கண்டால் தான் கண்கள் படைத்த பயன் கிட்டும். அந்த அழகிய மணவாளனை என்று காண்பேன்? அவர் பள்ளி கொண்ட திருக்கோலம் தெவிட்டாத இன்பந் தரும். ஆதிசேடன் மீது அவர் பள்ளிகொண்டு இருக்கிறார். ஆதிசேடன் பண்ணிய புண்ணியமே புண்ணியம். அவ்வளவு புண்ணியத்தை நான் பண்ணி இருப்பேனா? என் போன்ற பேதைகளுக்கு அக் காட்சி கிட்டுமா?"

"மானிடரை மணவாளனாக ஒரு போதும் நான் நினைக்க மாட்டேன். அந்த மாதவனிடமே என் நெஞ்சம் ஓடுகின்றது. நான் அவருடைய அடியவள். அடியவர்களைக் காக்கவே அவர் பத்துத் திரு அவதாரங்கள் செய்தார். என் துன்பங்களைப் போக்கி என்னை மணத்தல் அவர் கடமை அல்லவா? இவ்வாறு அடிக்கடி நினைந்து குயிலையும், வண்டையும் தூதர்களாகக் கோதை அனுப்பினாள். அதற்குப் பின், "இவற்றைத் தூதாக அனுப்பி என்ன பயன்! யானே நேரில் போகவேண்டும்," என்று எண்ணினாள்.

ஆண்டாளின் பக்திப் பெருக்கைப் பெரியாழ் வார் நன்கு உணர்ந்தார். அவள் அரங்கநாதப் பெருமாள் மீது கொண்ட காதலை செம்மையாகப் புரிந்து கொண்டார். இன்னது செய்வது என்று அறியாமல் மிகுந்த கவலையுற்ருர். அரங்கநாதப் பெருமான் அவர் கனவில் தோன்றி, "நம் கோதையை நம்மிடம் அழைத்து வருக," என்று அருள் செய்தார். கோயில் பரிசாரகர்கள் அனைவர் கனவிலும் தோன்றி, "மங்கள வாத்தியங்களுடனும் நவமணிச் சிவிகையுடனும் ஸ்ரீ வில்லிபுத்தூருக்குச் சென்று அங்குள்ள பெரியாழ்வார் மகளான கோதையை நம் கோயிலுக்கு அழைத்து வருக," என்று பகன்ருர்.

அவ்விதமே கோயில் பரிசாரகர்கள் ஸ்ரீ வில்லி புத்தூரை அடைந்து அரங்கநாதனது கட்டளையைத் தெரிவித்தனர். ஆழ்வார் உளம் பூரித்தார். தன் மகளோடு திருவரங்கத்தை நோக்கிப் புறப்பட்டார். இதனையறிந்த பாண்டிய மன்னர் தன் நால்வகைச் சேனையோடும் ஆண்டாள் திருமணத்தைக் காணப் புறப்பட்டு வந்தார். வழி நெடுக பூப்பந்தல்கள் போட்டும் தோரணங்கள் கட்டியும் அழகு செய்தார். "ஆண்டாள் வந்தாள்; சூடிக்கொடுத்த சுடர்க்கொடி வந்தாள்; பட்டர்பிரான் பாவை வந்தாள்!" என்று வாழ்த்தொலி முழங்கத் திருவரங்கத்தில் மக்கள் அவளை வரவேற்ருர்கள்.

சிவிகை கோயிலை அடைந்தது. காந்தம் இரும்பை இழுப்பது போன்று ஆண்டாள் மனம் அரங்கநாதனைப் பற்றியது. தன்னை மறந்தாள்; கண் களில் இன்பக் கண்ணீர் பெருகிற்று; கால்களில் சிலம்புகள் ஒலித்தன. கைகளில் வளையல்கள்

ஒலித்தன. அன்னம் போல நடந்து கோதை அரங்கநாதனுடைய திருவடிகளுக்கு அருகில் சென்றாள். பெருமாளும் திருவருள் சுரந்தார். ஆண்டாளது அழகிய வடிவம் அரங்கநாதனுடைய திருமேனியில் கலந்து மறைந்தது. அனைவரும் கண்டு வியப்படைந்தனர்; திருமாலின் திருவருளையும் ஆண்டாளின் கடவுள் பற்றையும் புகழ்ந்து பாராட்டினர்.

"பட்டர்பிரானே! நம்முடைய மகள் எம்மையே தலைவனாக உள்ளத்தில் வைத்தாள். ஆதலின் நாம் அவளை ஏற்றுக் கொண்டோம். நீரும் எமக்கு மாமனார் ஆனீர்; பெருமையும் புகழும் பெற்றீர். நும் ஊருக்குச் சென்று பழையபடியே திருத்துழாய் மாலை சாத்தும் தொண்டினைச் செய்து வருவீராக. கவலை வேண்டாம்," என்று இறைவன், அனைவரும் கேட்குமாறு, கூறினார். அவ்வாறே பட்டர்பிரானும் ஸ்ரீ வில்லிபுத்தூர் சென்று தம் திருத்தொண்டினைத் தொடர்ந்து செய்து திருமாலின் திருவடிகளை அடைந்தார்.

## அருஞ்சொற்பொருள்

மேனி - உடல். நந்தவனம் - பூஞ்சோலை. சிவிகை - பல்லக்கு. பேதை - பகுத்தறிவில்லாதவள். புகட்டும் - உண்டாக்கும். பாவை - உருவம்.

## வினாக்கள்

1. விஷ்ணு சித்தர் சிறப்பினை விளக்கு.
2. கோதையின் பிறப்பை விளக்கு.
3. ஆண்டாள் என்று பெயர் வரக் காரணம் யாது?
4. ஆண்டாள் கடவுள் பற்றை விளக்கு.
5. இறைவன் பட்டர்பிரானை நோக்கி யாது கூறினார்?

# 8. நாட்டின் முன்னேற்றத் திட்டம்

நாடு முன்னேற வேண்டுமானால், நாட்டில் வாழும் மக்கள் இன்பமாக வாழ வேண்டுமானால், பசியும் பிணியும் பகையும் இருத்தல் கூடாது. இவைகளே நாட்டு முன்னேற்றத்தைத் தடை செய்பவை. இவற்றைப் போக்குவோம் என்று சொல்லிக் கொண்டிருந்தால் பயனில்லை; அதற்கு வேண்டிய திட்டங்களையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

நம் நாட்டில் வாழும் மக்களின் நிலையைப் பற்றி முதலில் ஆராய்ந்து பார்ப்போம். நம் நாட்டில் சுமார் 40 கோடி மக்கள் வாழ்கிறார்கள். ஒரு மனிதனுடைய சராசரி வருமானம் ஆண்டிற்கு ரூ. 65; அமெரிக்காவில் ஒருவனுடைய சராசரி வருமானம் ரூ. 1400; கனடா தேசத்தில் ரூ. 1030; இங்கிலாந்தில் ரூ. 980; பிற நாடுகளிலும் நம் நாட்டைவிட இது மிகுதியாகவே காணப்படுகிறது. இதனால் நம் நாட்டு மக்களின் வறுமை நிலை ஒருவாறு புலப்படுகிறதல்லவா? ரூ. 65 என்பது சராசரிக் கணக்கு, இந்த வருவாய்கூட இல்லாமல் நூறாயிரக் கணக்கான மக்கள் நம் நாட்டில் இருக்கிறார்கள். நாம் ஏற்படுத்தும் திட்டங்களினால் நம் நாட்டு மக்களின் வருமானத்தைப் பெருகச் செய்தல் வேண்டும்.

உண்ண உணவும் உடுக்க உடையுந்தான் மனிதனுக்கு முதன்மையான தேவைகளாகும். நம் நாட்டில் வாழும் மக்கள் ஓரளவு சத்துள்ள உணவை உண்ண வேண்டுமானால் ஆண்டிற்கு ரூ. 65 சராசரி

வருமானம் போதவே போதாது. அதுவும் இக் காலத்தில் பொருள்களின் விலைவாசிகளை நோக்கும் போது சராசரி வருமானம் இரண்டு மடங்கோ அல்லது மூன்று மடங்கோ உயர வேண்டும். அப்படிப் பெருகினாலும் வாய்க்குச் சுவையுள்ள உணவையோ இன்ப வாழ்வுக்கு வேண்டிய உணவையோ உண்ண முடியாது. இந்தக் கணக்கின்படி நம் நாட்டு மக்களுக்கு உணவுக்கு மட்டும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2600 கோடி வருமானம் வரக்கூடிய வழியைத் தேடவேண்டும்.

உணவுக்கு அடுத்தபடி உடையை எடுத்துக் கொள்வோம். நாம் பெரும்பான்மையும் பருத்தி ஆடையையே அணிகின்றோம். சராசரிக் கணக்கை எடுத்துப் பார்த்தால் ஆள் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு 16 கெஜம் துணிதான் பயன் படுத்தப்படுகிறது. அது சராசரிக் கணக்கின்படி; நபருக்கு ஒரு கஜம் துணிகூட இல்லாமல் பல்லாயிரம் மக்கள் இருக்கிறார்கள். மற்ற நாடுகளை நோக்கும் போது நாலில் ஒரு பங்குகூட நமக்குக் கட்டத் துணி இல்லாமல் இருக்கின்றோம். நம்முடைய சராசரிக் கணக்கின்படி 1200 கோடி கஜம் துணி தேவைப் படுகிறது. இதன் விலை சுமார் 300 கோடி ரூபாய்.

சுகாதார வசதியில்கூட மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கின்றோம். நம் நாட்டு மக்களுடைய சராசரி வயது 32. மேனாடுகளில் 47 முதல் 63 வரை சராசரி வயதாக உள்ளது. நம்முடைய சுகாதார பிற்போக்கிற்கு இதையே உதாரண மாகக் கூறலாம். மக்கள் இவ்வளவு அற்ப ஆயுளுடையவர்களாக இருக்கக் காரணம் என்ன? நோயில்லாமல் வாழ்வதற்குப் போதுமான மருத்துவ

சாலைகளும் மருத்துவர்களும் இல்லாமையே யாகும். நகரங்களில் ஓரளவு, பெயரளவாகவாவது மருத்துவ நிலையங்கள் இருக்கின்றன. ஆனால் பெரும்பான்மை யான மக்கள் வாழும் கிராமங்களில் அடியோடு மருத்துவ வசதியே கிடையாது. ஆதலின் பெரும் பாலோர் இளமையிலேயே இறக்க நேரிடுகிறது. ஒவ்வொரு கிராமத்திலும் மருத்துவ வசதி ஏற்படுத்த வேண்டும்.

உணவும், உடையும், மருத்துவ வசதியும் இருந்தால் மட்டும் போதாது; கல்வியும் வேண்டும். மேனாடுகளில் 100-க்கு 80 பேர் கல்வி கற்றிருக் கிறார்கள். ஆனால் நம் நாட்டில் 100-க்கு 15 பேருக்குத்தான் எழுதப் படிக்கத் தெரிந்திருக்கிறது. முன்னேற்ற மடைந்துள்ள எல்லா நாடுகளும் அரசாங்கச் செலவில் கட்டாய இலவசக் கல்வி பயிலுமாறு செய்துள்ளன. நம் நாட்டு முன்னேற்றத் திட்டத்திலும் கட்டாய இலவசப் படிப்பிற்குப் போதுமான வசதி ஏற்படுத்த வேண்டும்.

மேற் கூறியபடி இந்நாட்டில் வாழும் மக்கள், குறைந்த அளவில் உணவும், உடையும், சுகாதாரமும், கல்வியும் பெற வேண்டுமானால் ஆண்டுதோறும் 3,000 கோடி ரூபாயாவது வருமானம் வரும் வழியைத் தேடவேண்டும். இதுவும் போதும் என்று சொல்ல முடியாது. செம்மையாகவும், நாகரிக மாகவும் நாம் வாழ வேண்டுமானால் 6,500 கோடி ரூபாய் வருமானம் வரும் வழி செய்ய வேண்டும்.

இங்ஙனம் வருமானத்தைப் பெருக்குவதற்கு மூன்று துறைகளில் சீர்திருத்தம் செய்ய வேண்டும். விவசாயச் சீர்திருத்தம், கைத்தொழில் சீர்திருத்தம், போக்குவரவு வசதிகளைப் பெருக்குதல் என்பன.

முதலில் விவசாயத்தை நோக்குவோம். நம் நாட்டில் 21 கோடி ஏகரா நிலங்கள் பயிரிடப் படுகின்றன. இவற்றில் $5\frac{1}{2}$ கோடி நிலங்களுக்கே நீர்ப்பாசன வசதி இருக்கிறது. எனவே நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்தினுல் எல்லா நிலங்களும் செம்மையாகப் பயிர் செய்யப்படலாம். நம் நாட்டில் ஆறுகளுக்குக் குறைவில்லே. ஆறுகளின் குறுக்கே அணேகள் கட்டி நீரைத்தேக்கி வாய்க்கால்கள் மூல மாக எல்லா நிலங்களுக்கும் நீர்ப்பாசன வசதிகளேச் செய்யலாம். இதற்காக அரசாங்கம் 154 கோடி ரூபாய் செலவு செய்கிறது. 300 கோடி செலவு செய்தால் 12 கோடி ஏகராக்களேப் பயிரிட முடியும். இந்த வசதியைச் செய்து கொடுப்பது அரசாங் கத்தின் முதற் கடமையாகும். நம் நாட்டுப் பயிர்த் தொழில் நல்ல பயன் அளிக்காமல் இருப்பதற்கு முக்கிய காரணம் சிறந்த எரு போடாமல் இருப்பது. நல்ல எருவிட்டுப் பயிர்த் தொழில் செய்விக்க வேண்டும்.

அடுத்து நாம் கவனிக்க வேண்டியது கைத்தொழில். கைத்தொழில் முன்னேற்றமின்றி எந்த நாடும் பொதுத் துறையில் முன்னேற்ற மடைய முடியாது. இத்துறையில் நம் நாடு, மேல் நாடுகளே நோக்க, மிகவும் பிற்போக்கான நிலேயில் இருக்கிறது. கைத்தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருள்கள் நம் நாட்டில் ஏராளமாக இருக்கின்றன. தொழில் செய்வதற்கு வேண்டிய மக்களும் மிகுதி யாக இருக்கிருர்கள். வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அழுவது போல நாம் இருக் கின்ருேம். கைத்தொழிலுக்கு வேண்டிய நிலக்கரி, இரும்பு இவையும் நம் நாட்டில் கிடைக் கின்றன. கைத்தொழிலுக்கு வேண்டிய எந்திரங்

களை மேல் நாடுகளிலிருந்து வாங்கிக் கொள்கிறோம். மின்சார . சக்தி உண்டுபண்ணும் எந்திரங்களையும், நூல், துணி, சர்க்கரை, சிமெண்ட், காகிதம், கண்ணுடி, தோல் சாமான்கள் முதலிய எல்லாப் பொருள்களையும் செய்வதற்கான எந்திரங்களையும் நம் நாட்டிலேயே செய்ய வேண்டும். இதற்கு உதவியாக வெளிநாட்டுப் பொறி இயல் வல்லுநரை வரவழைப்பதில் தவறு இல்லை. நம் நாட்டு மக்களில் பலரைப் பயிற்சிக்காக வெளி நாடுகளுக்கு அனுப்பவும் வேண்டும்.

விவசாயமும் கைத்தொழிலும் பெருகுவதற்குப் போக்குவரவு வசதி இன்றியமையாதது. இதற்காக வண்டிப் பாதைகள், புகைவண்டிப் பாதைகள், இவைகளை மிகுதிப் படுத்த வேண்டும். இப்போது நம் நாட்டில் 41,000 மைல் ரயில் பாதை இருக்கிறது. நம் நாட்டுப் பரப்பிற்கும் மக்கள் தொகைக்கும் இது போதுமானதன்று. இப்பொழுது இருப்பதைவிட மேலும் ரயில் பாதைகள் அமைக்க வேண்டும் என்றுல், மேலும் 430 கோடி ரூபாய் செலவாகும்.

வண்டிப் பாதைகளைக் கவனிப்போம். சுமார் 3 லட்சம் மைல் நீளமுள்ள வண்டிப் பாதைகளே நம் நாட்டில் இப்பொழுதுள்ளன. நம் நாட்டில் கிராமங்களே மிகுதி. சில கிராமங்களுக்கு வண்டிப் பாதைகளே இல்லை. ஒவ்வொரு கிராமத்திற்கும் வண்டிப் பாதைகள் ஏற்படுத்திஞல்தான் அங்கு விளையும் பொருள்கள் மற்ற விடங்களுக்கு எளிதாகக் கொண்டுபோக முடியும். இந்த வகையில் நமக்கு 300 கோடி ரூபாய் செலவு ஆகும்.

நம் நாட்டில் வாழும் மக்கள் செம்மையாகவும் இன்பமாகவும் வாழவேண்டுமானுல் இப்பொழுது வரும் ரூ. 2,200கோடி ஆண்டு வருமானம் போதாது. ஆண்டு ஒன்றுக்கு 6,500 கோடி ரூபாய் வருமானம் வரக் கூடிய வழியைத் தேடவேண்டும். அதற்கு மேற்கூறிய விதங்களில் திட்டம் இட்டுக்கொண்டு செயல் ஆற்றிஞல் இன்னும் 15 ஆண்டுகளில் நம்முடைய முயற்சி கைகூடும்.

## அருஞ்சொற்கள்

பெருகும்படி-அதிகரிக்கும்படி. புலப்படுகின்றது-விளங்குகின்றது. வருமானம் - வரும்படி. உடை - ஆடை. துறைகள் - வழிகள்.

## விஞக்கள்

1. பல நாட்டு மக்களின் சராசரி ஆண்டு வருவாய் என்ன ?
2. உணவு அதிகரிப்பதற்காக நாம் என்ன செய்ய வேண்டும்?
3. உடைக்காக நாம் யாது செய்ய வேண்டும் ?
4. கல்விக்காக நாம் யாது செய்ய வேண்டும் ?
5. உழவுத் தொழிலே எவ்வாறு முன்னேறச் செய்ய வேண்டும்?
6. கைத்தொழிலைப் பற்றி நாம் கவனிக்க வேண்டியது என்ன ?
7. போக்குவரவுக்கு நாம் யாது செய்தல் வேண்டும் ?

## இலக்கணம்

இன எழுத்து என்றால் என்ன?

ஒன்றுக்கொன்று தொடர்புடையதனை இனம் என்று கூறுகிறோம். எழுத்துக்களிலும் ஒன்றுக்கொன்று தொடர்பு உண்டு. அவற்றை இனம் என்று சொல்லுகிறோம். வல்லினத்திற்கு மெல்லினம் தொடர்பு.

க—ங; ச—ஞ; ட—ண; த—ந; ப—ம; ற—ன.

இடையினம் ஆறும் ஒரே இனம்: ய; ர; ல; வ; ழ; ள.

# 9. குகன் (நாடகம்)

இடம் :—கங்கைக் கரை.
காலம் :—மாலை நேரம்.
உறுப்பினர் :—குகன், வேடர்கள், பரதன், சத்துருக்கினன், சுமந்திரர்.

[ சிற்றன்னையாகிய கைகேயியின் சொல்லைக் கேட்டு இராமன் நாட்டை விட்டுக் காட்டிற்குச் சென்றான். இதனை அறிந்த பரதன் இராமனை நாட்டிற்கு அழைத்துவரக் கானகம் சென்றான். கங்கைக் கரையை அடைந்தான். குகன் என்னும் வேடர் தலைவன் பரதன் சேனையோடு வருதலைக் கண்டான். இராமனோடு போர் புரியவே வருகின்றான் என்று எண்ணித் தன் படைவீரர்களை நோக்கி வீரமொழிகளைக் கூறுகின்றான். ]

**குகன் :** என் அருமைத் தோழர்களே! அதோ பாருங்கள்! பரதன் சேனையோடு வருகின்றான். என் உயிர் நண்பனாகிய இராமபிரான்மீது போர் தொடுத்து வருகின்றான். இந்தச் சேனையை ஒரு நொடியில் அழித்து விடுகின்றேன். இல்லையேல் என்னுயிரை விட்டு விடுவேன். போருக்கு உரிய துடியைக் கொட்டுங்கள். வழிகளை எல்லாம் அடைத்து விடுங்கள். படகுகளை ஓட்டாதீர்கள். பரதன் படையிலுள்ள வீரர்களை எல்லாம் வெட்டி எறியுங்கள். இராமனை நாட்டை விட்டு ஓட்டிய இவன் காட்டை விட்டு ஓட்டவும் வந்துள்ளான். இப்படைகள் எல்லாம் எலிகளைப் போன்றவை; நான்

அரவத்தைப் போன்றவன். இராமபிரான் என்னைத் தோழன் என்றும் தம்பி என்றும் கொண்டாடியபின் நான் அவருக்கு அடிமை யல்லவா? இப்பரதன் பிழைத்துப் போகும்படி நான் விடமாட்டேன். இவன் அரசன் ஆனுல் நான் விடும் அம்பு இவன் மார்பில் தைக்காமல் போய்விடுமா?

[இவ்வாறு சொல்லிக் கொண்டே குகன் கங்கையின் தென்கரையில் வந்து நின்ருன்.]

[வடகரையில் பரதன் தன் தம்பியுடனும் சுமந்திர ருடனும் நின்ருன்.]

**பரதன் :** அறிவிலும் ஆற்றலிலும் உயர்ந்த அமைச் சரே! கங்கையின் தென் கரையில் வந்து நிற்பவன் யாவன்?

**சுமந்திரர் :** அவன் கங்கையின் இரு கரைகளுக்கும் உரியவன்; கணக்கற்ற நாவாய்களை உடையவன்; உங்கள் குலநாதனுன இராமனுக்கு உயிர்த் துணைவன்; வில்லேந்திய வீரர் பலரை யுடை யவன்; குகன் என்னும் பெயருடையவன்; உன்னைக் காண வந்து நிற்கின்ருன்.

**பரதன் :** அண்ணலாகிய இராமபிரானுடைய உயிர்த் தோழனுனல் அவன் என்னை வந்து காணு முன்பே, நானே சென்று அவனைக் காண்பேன்.

**குகன் :** இந்த நம்பியாகிய பரதனைப் பார்த்தால் இராமபிரானை ஒத்திருக்கின்ருன். பக்கத்தில் உள்ள அவன் தம்பி இலக்குவனை ஒத்திருக் கின்ருன். இவர்கள் இராமனுடன் போருக்கு

வந்தவர்களாகக் காணவில்லை. இவர்கள் துன்பத்தில் இருக்கிறார்கள். இராமன் இருக்கும் திசையை நோக்கித் தொழுகின்றார்கள்! இராமன் பின் பிறந்தவர் தவறு செய்வார்களா? நான் இவர்களைப் பற்றித் தவறாக எண்ணிவிட்டேன். அவர்கள் அருகில் சென்று உண்மை நிலையை அறிந்து வருவேன். வேடர்காள்! நான் திரும்பி வரும் வரையில் இக் கரையைக் காவல் புரியுங்கள்.

(குகனும் பரதனும் சந்தித்து ஒருவரை ஒருவர் வணங்கிக் கொள்கின்றனர்.)

**குகன்:** எம்பெருமானே! தாங்கள் இவ்வளவு தூரம் கானகத்திற்கு வரக் காரணம் என்ன?

**பரதன்:** அன்பிற் சிறந்தவனே! எமது முன்னோர் நடந்த முறைப்படி என் தந்தை மூத்தவனுக்கு அரசு தரவில்லை. இராமபிரானை அயோத்திக்கு அழைத்துச் சென்று முடிசூட்டி அரசராக்கவே யான் இங்கு வந்தேன். என் வரவுக்கு இதுவே காரணமாகும்.

**குகன்:** (மறுமுறையும் பரதனை வணங்கி) அன்பும் பண்பும் நிறைந்த வள்ளலே! உம் தாயின் சொல்லைக் கேட்டு உம் தந்தை கொடுத்த அரசை ஏற்க மறுத்தீர்; முறையின்றி வரும் அரசைத் தாங்கினால் தீமை வரும் என்று நினைத்தீர்; இராமனைத் தேடிச் செல்கின்றீர்; ஆயிரம் இராமர் ஒன்று சேர்ந்தாலும் உமக்கு ஒப்பாவரோ?

**பரதன்** : வேடர்குலத் தோன்றலே! இராமபிரான் இங்கு எந்த விடத்தில் தங்கி இருந்தார். அதனை எனக்குக் காட்டுவாயாக.

**குகன்** : புகழொடு தோன்றிய தோன்றலே! இதோ இந்தவிடத்தில் மெத்தென்றிருக்கும்படி புல்லைப் பரப்பினேம். அப் புல்லின்மீது எம்பெருமான் தங்கி இருந்தார்.

**பரதன்** : இலக்குமணன் எங்குத் தங்கி யிருந்தான்?

**குகன்** : குணக்குன்றே! இலக்குமணன் தனக்கென்று ஓர் இடம் அமைத்துக் கொண்டு தங்கவில்லை. இராமபிரானும் சீதையும் உறங்கும்போது கையில் வில்லோடு காவல் புரிந்து கொண்டிருந் தான். இரவுமுழுதும், விடியும் வரையிலும்கூடக் கண்களை மூடவில்லை ; காவல் புரிந்தான்.

**பரதன்** : அன்பனே! இராமபிரானுடைய தம்பிகளில் நான் அவருக்குத் துன்பங் கொடுக்கப் பிறந் துளேன். இலக்குமணன் அத் துன்பத்தைப் போக்கப் பிறந்தவன். நானும் இராமனுக்கு ஒரு தம்பி; இலக்குமணனும் ஒரு தம்பி. என் அன்பு அழகாக இருக்கிறதன்றோ?

**குகன்** : அன்புருவான அண்ணலே! தாங்கள் அங்ஙனம் கூறுதல் கூடாது. இராமபிரான் இங்கு வந்திருந்தபோது என்னிடம், "அண்ணன் தம்பிகள் இதுவரை நான்கு பேர் இருந்தோம். இன்று உன்னோடும் ஐவர் ஆனோம்," என்று கூறினார். இதனால் இராமபிரான் தன் தம்பி களிடம் எவ்வளவு அன்பு வைத்திருக்கின்றார் என்பது தெரியவில்லையா?

**பரதன் :** வேடர் தலைவனே! நாங்கள் இக் கங்கை யாற்றைக் கடப்பதற்கு வேண்டிய உதவியை நீ செய்ய வேண்டும். இன்றிரவு இங்குத் தங்கு கின்றோம். நாளை விடியற்காலையில் நாங்கள் இக் கங்கையைக் கடக்க வேண்டும். இதற்கு நீ உதவி செய்தால், துன்பமாகிய கடலைக் கடக்க உதவி செய்தவனாவாய்.

**குகன் :** என் அருமை வேடர்களே! என் உயிர்த் தோழராகிய இராமபிரானது சிறந்த தம்பி யாகிய பரதனும் அவருடைய சேனையும் கங்கை யாற்றை நாளை விடியற் காலையில் கடக்க வேண்டும். நம்முடைய படகுகள் எல்லாவற் றையும் ஆயத்தம் செய்து கொள்ளுங்கள். பழுதுபட்டிருக்கும் படகுகளைப் பழுது பார்த்து வைத்துக் கொள்ளுங்கள்.

(மறுநாள் விடியற்காலையில் பரதனது சேனைகளைப் படகுகள் ஏற்றிக் கொண்டு அக் கரையில் சேர்க்கத் தொடங்கின. பரதன், கோசலை, கைகேயி சுமத்திரை, சுமந்திரர் முதலாயினோரைத் தன் படகில் ஏற்றிக்கொண்டு, குகன் அதனைத் தானே செலுத்தினான்.)

**குகன் :** பெறுதற்கரிய தோன்றலே! இதோ நிற் கின்ற இந்த அம்மையார் யாவர்? துன்பத்தைக் காட்டும் முகத்தோடு நிற்கின்றார்களே!

**பரதன் :** அப்பனே! இவ்வம்மையார் சுற்றத்தாரும் தேவர்களும் வணங்கத் தக்கவர். அரசர்களுக் கெல்லாம் அரசனாகிய தசரதனுடைய தேவிமார் களில் முதன்மையானவர். திருமாலே தன் வயிற் றில் வந்து இராமனாகப் பிறக்கும் பெரும்



புண்ணியத்தைச் செய்தவர்; யான் ஒருவன் பிறந்ததனால் அப்புண்ணியத்தின் இன்பத்தைத் துறந்த பெரியாராகிய கோசலை.

(உடனே கோசலை திருவடிகளில் விழுந்து குகன் வணங்கினான்)

**கோசலை :** அருமை மகனே! பரதா! இவன் யார்?

**பரதன் :** என் அருமை அண்ணன் இராமபிரானுடைய இனிய துணைவன். எனக்கும், இலட்சுமணனுக்கும், சத்துருக்கினனுக்கும் மூத்தவன். குகன் என்னும் பெயருடையவன்.

**கோசலை :** அருமை மைந்தர்களே! நீங்கள் வருத்தப் பட வேண்டாம். இராமனும் இலட்சுமணனும் கானகத்திற்கு வந்தது ஒரு நன்மையாகவே முடிந்தது. காளையையொத்த இந்தக் குகனோடு நீங்கள் ஐந்து பேரும் ஒற்றுமையாக இருந்து நெடுங்காலம் இவ்வுலகை ஆள்வீராக.

**குகன் :** (பரதனைப் பார்த்து) இந்த அம்மையார் யாவர்?

**பரதன் :** அறமே உருவமாக வந்த இந்த அம்மையார் உண்மை நெறியிலிருந்து மாறாத தசரத சக்கிரவர்த்தியின் இளந்தேவி. இலக்குமணனைப் பெற்றெடுத்த பெரியார். எனக்கும் உனக்கும் தாயாவாள்.

(குகன் சுமித்திரையின் அடியில் விழுந்து வணங்கினான்)

**குகன் :** இதோ! நிற்கின்ற இந்த அம்மையார் யாவர்?

**பரதன் :** இந்த அம்மையைத் தெரியவில்லையா? சொல்லுகிறேன்; கேள். இப்பொழுது நாம் அடைந்திருக்கும் துன்பம் எல்லாவற்றையும்

உண்டாக்கியவள் இவளே. பாவம் என்னும் குழந்தைக்குச் செவிலித்தாய். இவளுடைய பாழான வயிற்றிலே நெடுங்காலம் நான் கிடந்தேன். இவள் முகத்தில் துன்பக்குறி காணப் படவில்லையே! இவள்தான் என்னை ஈன்றவள்.

(இத்தகைய கைகேயியையும் அன்னையெனக் குகன் வணங்கினுன். படகும் கரையை அடைந்தது.)

## அருஞ்சொற்கள்

நாவாய் - படகு. அரவம் - பாம்பு. ஈன்றவள்-பெற்றவள்.

## வினக்கள்

1. பரதன் சேனையைக் கண்டு குகன் யாது கூறினுன்?
2. சுமந்திரர் குகனைப் பற்றிப் பரதனிடம் யாது கூறினுர் ?
3. உண்மையை அறிந்தபின் குகன் யாது கூறினுன் ?
4. பரதன் குகனுக்கு கோசலையை எவ்வாறு அறிமுகப் படுத்தினுன் ?
5. சுமத்திரையை எவ்வாறு அறிமுகப்படுத்தினுன் ?
6. கைகேயியை எவ்வாறு அறிமுகப்படுத்தினுன் ?

## இலக்கணம்

மாத்திரை என்ருல் என்ன ?

மாத்திரை என்பது கால அளவு. எழுத்துக்களை உச்சரிப்பதற்குக் கால அளவு வேண்டும். கைந் நொடிப் பொழுதும் கண்ணிமைப் பொழுதும் ஒரு மாத்திரைக்கு அளவாம்.



## 10. தமிழ்ப் பெரியார் திரு. வி. க.

நம் நாட்டில் ஆங்கில ஆட்சி நடந்து கொண்டிருந்த காலம். ஆங்கிலேயரது அடக்கு முறைக்கு அஞ்சி மக்கள் எலியைப் போல வாழ்ந்தனர். அப்போது புலியைப் போல் அஞ்சாது அரசியலில் சேர்ந்தார் ஒரு பெரியார். தமிழ் நாட்டில் உரிமை உணர்ச்சி குறைந்திருந்த நேரத்தில் உரிமைக் குரலை எழுப்பினர். இத்தகைய வீர உணர்ச்சியை எழுப்பிய பெரியாரே திரு. வி. கல்யாண சுந்தரனார் ஆவர்.

இவர் தந்தையார் திருவாரூர் விருத்தாசல முதலியார் என்பவர். தாயார் சின்னம்மை என்பவர். இவர் தந்தையார் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள

துள்ளம் என்னும் கிராமத்தில் வாணிபம் செய்து வந்தார். இவர் 1883 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 26 ஆம் நாள் தோன்றினார். உலகநாத முதலியார் என்ற ஒரு தமையனார் இவருக்கு உண்டு. இவர் யாழ்ப்பாணம் கதிர்வேல் பிள்ளை என்னும் பெரும் புலவரிடம் தமிழ் நூல்களைப் பயின்றார்.

1908 ஆம் ஆண்டு பீபின் சந்திரபாலர் என்பவருடைய சொற்பொழிவைக் கேட்டார். இந்த விடுதலை வீரருடைய சொற்பொழிவு கலியாண சுந்தரர் மனதைப் பெரிதும் கவர்ந்தது. இந்தியா இந்தியருக்கே என்ற உணர்ச்சி இவருள்ளத்தில் தெட்டெனத் தோன்றிற்று. அன்று முதல் அரசியலில் கலந்தார். 1917 ஆம் ஆண்டு தேச பக்தன் என்னும் செய்தித்தாளின் ஆசிரியராக அமர்ந்து நாட்டுக்குப் பணி செய்தார். தமிழில் பேசினால் மதிப்புக் குறைவு என்று எண்ணியவர்கள் தமிழில் பேசினால் பெருமை வரும் என்று எண்ணும்படிச் செய்தவரும் இவரே. தமிழ் மொழியில் அழகாகவும் உணர்ச்சியுடனும் எழுத முடியும் என்பதனை எடுத்துக் காட்டியவரும் இவரே. நவசக்தி என்னும் செய்தித்தாளைத் தொடங்கி நாட்டில் மக்களுக்கு நல்லுணர்ச்சி உண்டாக்கியவரும் இவரே.

காஞ்சி மாநகரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்கு இவர் தலைமை வகித்தார். காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்துகொண்டு இவர் செய்த தொண்டு அளவிடமுடியாது. சென்னையில் தொழிற்ச் சங்கம் அமைத்தவர்களுள் இவரும் ஒருவர். தொழிலாளி என்றும், முதலாளி என்றும் வேறுபாடு கருதாத மனப்பான்மை யுடையவர்.

இவர் பள்ளிப்படிப்பை முடித்த சில ஆண்டு களில் கமலாம்பிகை என்னும் அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார். ஆறு ஆண்டுகள் இவர் அந்த அம்மையாரோடு இல்லறத்தை நடத்தினர். அந்த அம்மையார் நோய் வாய்ப்பட்டு மாண்டார். ஆருண்டுகள் இயற்றிய இல்லறத்தினல் பெண்ணுலகிற்குத் தொண்டு செய்யவேண்டும் என்ற எண்ணம் இவருக்குண்டாயிற்று. அதன் அறிகுறி யாகப் 'பெண்ணின் பெருமை' என்ற நூலே எழுதினர்.

இந்தியாவின் எதிர் காலம் இளைஞர்கள் கையி லிருக்கிறது என்பதை நன்கு உணர்ந்து அவர்களுக்கு ஊக்கம் தரும் முறையில் சொற் பொழிவுகள் பல ஆற்றினர்; கட்டுரைகள் பல எழுதினர். அவற்றில் மிகவும் சிறந்தது 'இளமை விருந்து', என்பது. அக் கட்டுரையில் மாணவர்கள் யார்? என்பதைப் பற்றி யும், அவர்கள் கடமையைப் பற்றியும், அவர்கள் பிற் காலத்தில் நாட்டிற்கு எவ்வகையில் தொண்டு செய்ய வேண்டும் என்பதைப் பற்றியும் விளக்கமாகக் கூறி யுள்ளார். இளைஞர் உலகம் திரு. வி. க. அவர்களைப் பொன்னேபோல் போற்றுதல் வேண்டும். அவர் தமிழாசிரியராக இருந்து ஆற்றிய தொண்டு மிகவும் புனிதமானது.

அவரது சொற்பொழிவு மிகவும் அழகாகவும், ஆணித்தரமாகவும் இருக்கும். அவரது சொற்கள் அனைவர் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளக் கூடி யது. அவருடைய அரசியல் அறிவைக் கண்டு அர சியல் வாதிகளே போற்றுவர். அவர் காந்தியடிகளின் கொள்கைகளனைத்தும் தூய்மையானவை என்று உணர்ந்து அவற்றைமேற் கொண்டார். 'காந்தியடி களும் மனிதவாழ்க்கையும்,' என்று ஒரு சிறந்த நூலே

யும் வெளியிட்டார். இவருடைய உரை நடை, தமிழ் நாட்டிலேயே தனிச் சிறப்பு வாய்ந்தது.

கலையையும் உலகையும் நுட்பமாக ஆராய்ந்தவர்கள் திரு. வி. க. அவர்களைப் போல வேறொருவரைக் காண்பதரிது. கலையும் கடவுளும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாத தொடர்புடையன என்பதனைத் தெளிவாக விளக்கியுள்ளார். எல்லா உயிரையும் தன்னுயிர் போல் எண்ணுகின்ற ஒருவனிடம் கலைப் பண்பு வளரும் என்று அவர் முழங்கினார். கோடையில் தென்றல் காற்று இன்பம் தருவது போல் இவருடைய தமிழ்த் தென்றல் அனைவர் உள்ளத்திலும் இன்பத்தை உண்டாக்கும்.

"தமிழ் நாட்டில் பிறந்து, தமிழ் மொழியையே பேசி, தமிழ்ச் சுவையையே உணர்ந்த ஒருவன், வீடு பேறு என்பதனை ஒரு நாளும் விரும்பான். தமிழ் மொழியின் இன்பமே வீடு பேறு ஆகும்," என்று அவர் பல முறை கூறியுள்ளார்.

சாதிச் சண்டை, சமயச் சண்டை, இவற்றை அடியோடு வெறுப்பவர் இவர். இவர் சமயம் வேறு சமய வாதம் வேறு என்று அடிக்கடி கூறுவார். அஞ்சா நெஞ்சமும், அருள் உள்ளமும் கொண்டவராகவும், அரசியல் தலைவராகவும் விளங்கினர். இவர் தொழிலாளர்களுக்குத் தந்தை போல் விளங்கினர். ஆசிரியர் பதவியை விடுத்துப் பொது வாழ்வில் ஈடுபட்டிருந்தாலும், கல்லூரி மாணவர்களும், இளம் வித்துவான்களும் இவரைத் தம் பேராசிரியர் எனக் கருதி இவரிடம் பழகுவார்கள். அவர்களிடம் இவர் காட்டும் அன்பு ஒரு தாய் மகனிடம் காட்டும் அன்பை ஒத்திருக்கும். அவர்கள் முன்னேறவேண்டும்

என்று திரு. வி. க. மனமார வாழ்த்துவார். இவருடைய தூய உள்ளத்தைக் கண்டு மாணவர்களும் இளம் வித்துவான்களும் உள்ளம் உருகுவார்கள்.

இவர் இயற்றிய நூல்கள் பல; பதிப்பித்த நூல்கள் பல; முருகன் அல்லது அழகு, சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து, பொதுமை வேட்டல், மற்றும் பல நூல்களை இயற்றி நூலாசிரியராக விளங்கினார். அந்த நூல்கள் மிகச் சிறந்த கருத்துக்களைத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன; உண்மைகளை எடுத்துக் கூறுகின்றன. இவர் பதிப்பித்த பெரிய புராணம் என்பது அருமை வாய்ந்தது. இவர் அந்த நூலுக்கு எழுதியுள்ள குறிப்புரை இவருடைய புலமைக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகிறது. ஆதலின், இவர் ஒரு சிறந்த பதிப்பாசிரியர் ஆவார். இவரால் இயற்றப் பெற்ற செய்யுட்கள் கற்போர் உள்ளத்தை கனியும்படி செய்யவல்லன.

இவர் மென்மையான உடல் படைத்தவராயினும் உறுதியான உள்ளம் படைத்தவர். இவர் தம் வாழ்நாளின் இறுதியில் கண் பார்வையை இழந்தார் அந்த நிலையிலும் இருளில் ஒளி என்னும் நூலை இயற்றி, அறிவு ஒளியை உலகுக்கு அளித்தார். இத்தகைய பெரியார் 1953 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17 ஆம் நாள் மாலை மறைந்தார். இவருடைய பூதவுடல் மறைந்தாலும் புகழுடல் இவ்வுலகம் உள்ள வரையிலும் அழியாது. இவருடைய பிரிவு கேட்டு அரசியல் தலைவர் பலரும் வருந்தினர்; தமிழ்த் தாய் தன் ஒரு மகனை இழந்து தவித்தாள். புலவர் பலர் இனி இத்தகைய பெரியாரை என்று காண்போம் என்று ஏங்கி யழுதனர். தொழிலாளர்கள்

தங்கள் ஒப்பற்ற துணைவரைப் பிரிய கண்ணீர் விட்டுக் கதறினர்.

சிறப்பாக அவர் இளைஞர்களுக்காகவே வாழ்ந் தார். அவருடைய எண்ணங்களையும், கருத்துக்களை யும் நாம் புதுப்பிக்க வேண்டும். இளைஞர்கள் திரு. வி. க. நூல்களை நன்ருகப் படிக்க வேண்டும். அவரது அருந் தமிழ் நடையைச் செம்மையாகப் போற்றுதல் வேண்டும். அவருக்கு இருந்த தன்னலமற்ற தன்மையை இளைஞர்கள் அடைய வேண்டும். இஃது ஒன்றே இளைஞர்கள் அவருக்குச் செய்யக் கூடிய கைம்மாறு ஆகும்.

### அருஞ் சொற்கள் :—

அஞ்சி - பயந்து, மாண்டார் - இறந்தார், தொண்டு - பணி, வீடு பேறு - மோட்சம்.

### வினுக்கள்

1. திரு. வி. க. அவர்களின் அரசியல் தொண்டை விளக்கு.
2. அவர் செய்த தமிழ்த் தொண்டை விளக்கு.
3. இவர் எதை வீடு பேறு என்று கருதினுர்? ஏன்?
4. அவர் இயற்றிய நூல்கள் யாவை?
5. இளைஞர்கள் அவருக்குச் செய்ய வேண்டிய கைம்மாறு என்ன?

### இலக்கணம்

குறில், நெடில், மெய், ஆய்தம் — இவற்றிற்கு மாத்திரைகள் எத்தனை?

குற்றெழுத்துக்களுக்கு மாத்திரை ஒன்று.

நெட்டெழுத்துக்களுக்கு மாத்திரை இரண்டு.

மெய்யெழுத்துக்களுக்கு மாத்திரை அரை.

ஆய்த எழுத்திற்கு மாத்திரை ஒன்று.

# 11. வீமனும் பகாசுரனும்

தமிழ் நூல்களில் இதிகாசங்கள் என்று ஒருவகை உண்டு. பாரதம், இராமாயணம் அந்த வகையைச் சேர்ந்த நூல்கள். பரத வமிசத்தைப் பற்றிக் கூறுவது பாரதம். அந்தப் பரம்பரையில் தோன்றிய வர்களே பாண்டவரும் கௌரவரும். தருமர் முதலிய ஐந்துபேரும் பாண்டு என்றவரின் பிள்ளைகள். துரியோதனன் முதலிய நூறு பேரும் குரு என்ற வரின் குமரர். பாண்டுவும் குருவும் அரசகுமாரர்கள். பாண்டவர்களாகிய தருமர், வீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் இவர்கள் அறிவிலும் ஆண்மை யிலும் சிறந்தவர்கள். நற்குணமும் நல்லொழுக்க மும் உடையவர்கள். துரியோதனன் துச்சாதனன் முதலிய நூறுபேரும் பொறாமையே உருவெடுத்த வர்கள். இவ்விரு மரபினருக்கும் அடிக்கடி போராட் டம் ஏற்படுவதுண்டு. பாண்டவருடைய புகழைக் கண்டு துரியோதனுதிகள் அழுக்காறு கொண்டு அவர்களுக்குப் பல தீமைகளைச் செய்து வந்தார்கள்.

ஒரு சமயம் துரிதோதனன் அரக்கு மாளிகை ஒன்றை அமைத்து அதில் பாண்டவர்களையும் அவர்கள் தாயார் குந்தி தேவியையும் இரவு தங்கு மாறு செய்தான். நடு இரவில் அரக்கு மாளிகைக்கு நெருப்பு வைத்தான். பாண்டவர்களும் அவர்கள் தாயும் இறந்து விடுவார்கள் என்று அவன் எண்ணி ஞன். ஆனல் மாளிகை நெருப்புப் பற்றி எரியத் தொடங்கியதும் வீமன் உடன்பிறந்தாரையும் தாயா ரையும் தூக்கிக் கொண்டு அந்த மாளிகையின் ஒரு

புறத்தில் அமைக்கப்பெற்றிருந்த சுரங்கத்தின் வழியாக ஒரு காட்டிற்கு ஓடிவிட்டான்.

அந்தக் கானகத்திற்கு அருகில் வேத்திரகீயம் என்னும் நகரம் ஒன்று இருந்தது. பாண்டவர்கள் அந் நகரத்திற்குச் சென்று ஒரு பெரியார் வீட்டில் தங்கினர். அந் நகரத்திற்கு ஒரு கல் தொலைவில் ஒரு மலை இருந்தது. அம்மலையில் பகாசுரன் என்று ஒரு அரக்கன் வாழ்ந்து வந்தான். கொக்கு போன்ற தோற்றம் உடையவன் என்பதனால் அவனுக்கு அப் பெயர் வழங்கப்பட்டது. அவன் அவ்வூரில் புகுந்து அகப்பட்டவர்களைக் கொன்று தின்று வந்தான். அந்த ஊரார் அனைவரும் கூடி அவனுடன் ஒரு உடன்பாடு செய்து கொண்டனர். ஓர் ஆள், ஒரு வண்டி சோறு, அதற்கு வேண்டிய கறி வகைகள் பலகாரங்களோடு பகாசுரன் இருக்குமிடத்திற்கே ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீட்டார் அனுப்பி விடுவது என்பதும், அவ்வாறு செய்வதால் பகாசுரன் நகரத்திற்குள் வந்து அகப்பட்டதைக் கொல்லாமல் தன்னிருப்பிடத்திலேயே இருக்க வேண்டும், ஊருக்குள் நுழைந்து ஒருவித தொந்தரவும் செய்யக் கூடாது என்பதும் அவ்வுடன்பாடாக இருந்தது.

இந்த உடன்பாட்டின்படி ஒவ்வொரு வீட்டுக்காரர்களும் ஒவ்வொருநாளும் பகாசுரனுக்கு உணவு அனுப்பி வந்தார்கள். இவ்வாறு பல நாட்கள் நடந்து கொண்டு வருகையில் பாண்டவர்கள் தங்கியிருந்த வீட்டுப் பிராமணரின் முறை ஒருநாள் வந்தது. அவ் வீட்டுக்காரருக்கு ஒரு மகனும் ஒரு மகளும் இருந்தனர்; முறைப்படி பகாசுரனுக்கு உணவு அனுப்ப வேண்டும்; பொழுது விடிந்ததும் அந்த வீட்டுத் தலைவி எழுந்து உட்கார்ந்து கொண்டு புலம்பத்

தொடங்கினுள். அவள் அழுவதைக் கண்ட குந்திதேவி அவள் அருகில் சென்று, "அம்மா! நீ ஏன் அழுகின்ருய்? உனக்கு உற்ற குறை யாது?" என்று அன்புடன் வினவினுள். அந்தணன் மனேவி குந்திதேவியைப் பார்த்து, "என் குறையைக் கேட்டு நீ என்ன செய்யப் போகிருய்? யார்தான் என்ன செய்ய முடியும்? இன்று என் ஒரே மகனேப் பகாசுர னுக்குப் பலி கொடுக்கவேண்டி யிருக்கிறது. அதனுல் என் உள்ளம் குலேகிறது;" என்ருள்.

அதைக் கேட்ட குந்திதேவி, "அம்மையே, நீ வருத்தப்பட வேண்டாம். உன் கவலேயை விடு. எனக்கு ஐந்து பிள்ளேகள் இருக்கிருர்கள். அவர் களில் ஒருவனே நான் அனுப்பச் சம்மதிக்கின்றேன்," என்று கூறினுள். "எனக்காகத் தங்கள் குமரனேப் பலியிடத் துணிவது ஒப்புக்கொள்ளத் தகுந்ததன்று. எனக்குத்தான் தலேவிதி அவ்வாறு இருக்கிறது. உங்களுக்கு ஏன் இந்தத் தலேவிதி? வேண்டாம்," என்று மறுத்தாள் அம்மாது. அதற்குக் குந்திதேவி, "அம்மையே! என் குமரர்களுடைய அறிவும் வீரமும் உனக்குத் தெரியாது. எனது இரண்டாவது மகன் பகாசுரனேயும் சாப்பிடுவான். அவன் பாட்ட னேயும் ஏப்பம் விடுவான். அதெல்லாம் உனக்கு எதற்கு? விரைவில் சமையல் ஆகட்டும்," என்று பெருமிதத்தோடு கூறினுள்.

அவ்வீட்டில் பெரும் அளவில் சமையல் நடக்கத் தொடங்கியது. பாண்டவருக்கு விருந்து அளிக்க வீட்டுக்காரன் விரும்பினுன். அறுசுவையோடு கூடிய உணவும் பலவிதமான கறிவகைகளும் சமைக்கப்பெற்றன. பலகார வகைகள் பற்பல



நெய்யிலேயே செய்யப்பட்டன. இவற்றையெல்லாம் காணப் பீமனுக்கு அளவிலா மகிழ்ச்சி. நடுப்பகலுக்கு வீட்டுக்காரன் பாண்டவரை விருந்துண்ண அழைத்தான். பாண்டவர்களும் குந்தியும் நீராடித் தூய ஆடை உடுத்தி வந்தனர். உண்ணுமிடத்தில் அவர்களை அமரவைத்துப் பெரிய தலைவாழை இலைகளை இட்டுப் பலவகையான உணவுப் பொருள்கள் பரிமாறப் பெற்றன. அவ்வுணவுப் பொருள்களை எல்லாம் அவர்கள் சுவைத்து உண்டனர்.

பிறகு, பகாசுரனுக்கு உணவு அனுப்புவதற்காக ஒரு வண்டி நிறைய சோறும் அதற்கு ஏற்பப் பதார்த்த வகைகளும் பலகார வகைகளும் வைக்கப் பெற்றன. இவற்றைக் காணும்தோறும், வீமன் உள்ளம் பூரித்தான். "இது நமக்குத் தனிப்பட்ட விருந்து," என எண்ணித் தனக்குள்ளே மகிழ்ந்தான். குந்தி வீமனைப் பார்த்து, "மகனே! இந்த வண்டியைப் பகாசுரனிடம் ஓட்டிச் செல்லுவாயாக," என்றாள். வீமனும் தலைப்பாகை கட்டிக்கொண்டு வண்டியை வீதிவழியே ஓட்டிச் சென்றான். வீதியில் இருந்த அந்தணர்கள் எல்லாரும் வீமனைப் பார்த்து மனம் உருகினர். "அந்தோ பாவம்! இந்த அழகிய சிறுவன் பகாசுரனுக்குப் பலியாகப் போகிறான்," என்று கண்ணீர் வடித்தனர். வீமன் வண்டியை ஓட்டிக்கொண்டு பகாசுரன் இருந்த மலையை நோக்கிச் சென்றான். வழியில் ஒரு காட்டாறு இருந்தது. ஆறு நிறையப் பெருக்கெடுத்து நீர் ஓடிக்கொண்டிருந்தது. தண்ணீர் இளநீர் போல் இருந்தது. வண்டியில் கொண்டு சென்ற உணவை உண்பதற்கு அந்த இடத்தைத் தவிர வேறு தகுதியான இடம் கிடைக்காது என வீமன் எண்ணினான்; வண்டியை அந்த

ஆற்றங் கரையிலேயே நிறுத்தினான். வண்டியில் இருந்த உணவை உருண்டை உருண்டையாக உருட்டி வாயிலிட்டு விழுங்கத் தொடங்கினான்.

பகாசுரனுக்குப் பசிவேளை கடந்தது. இன்னும் உணவு வரவில்லையே என்று கடுங்கோபம் கொண்டான். குன்றின் மேல் நின்று பார்த்தான். வண்டி வருவது தெரிந்தது. விரைவில் வண்டி வந்துவிடும் என்று எண்ணிக் காத்துக்கொண்டிருந்தான். ஆனால் வரவில்லை. திரும்பவும் குன்றின்மீது நின்று பார்த்தான். உணவு வண்டி ஆற்றங்கரையில் நிறுத்தப்பட்டு இருந்தது. தனக்காகக் கொண்டுவரப் பட்ட உணவை வேறு ஒருவன் உண்பதையும் கவனித்தான். மிகுந்த கோபத்தோடு அவ்விடத்திற்கு ஓடிவந்தான். "எனக்காக வந்த உணவை உண்பவன் யாரடா?" என்று கேட்டுக்கொண்டே வீமன் முதுகில் ஒரு குத்துக் குத்தினான். அப்பொழுது தான் வீமன் ஒரு பெரிய உணவு உருண்டையை வாயிலிட்டு விழுங்கினான். அது தொண்டையில் அகப்பட்டுக் கொண்டது. உள்ளே செல்லாமல் வீமனுக்குத் துன்பம் உண்டாக்கியது. பகாசுரன் குத்திய குத்தினால் அந்த உருண்டை எளிதாக வீமன் வயிற்றுக்குள் போய்ச் சேர்ந்தது. வீமன் பகாசுரனைப் பார்த்து, "ஐயா! நீ நல்ல சமயத்தில் உதவி செய்தாய்; என் உடன் பிறந்தவர்கள் கூட இந்த விதமான உதவியைச் செய்தது இல்லை. நீ குத்தாதிருந்தால் அந்த உணவு உருண்டை எளிதாக உள்ளே சென்றிருக்காது," என்று அமைதியாகக் கூறினான்.

இதனைக் கேட்ட பகாசுரனுக்கு மேலும் கோபம் பொங்கி எழுந்தது. போர் செய்யத் தொடங்

கினான். வீமசேனன் நிதானமாக உணவை முடித்துக் கொண்டு எழுந்து நின்று பகாசுரனோடு போர் செய்யத் தொடங்கினான். பகாசுரனுடைய மண்டை மீது தன் கதாயுதத்தால் ஒரு அடி அடித்தான். பகாசுரன் தரைமீது உருண்டு உயிர் துறந்தான். வீமன் பிறகு அந்த ஆற்றில் நீராடி ஊருக்குத் திரும்பினான். வீமசேனன் இறந்திருப்பான் என எண்ணி இருந்த அவ்வூர் மக்கள் அனைவரும் அவன் உயிருடன் திரும்பி வருவதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தனர். தங்கள் ஊருக்கு இருந்த பெருந் துன்பத்தைப் போக்கியதால் வீமனை மிகவும் பாராட்டிப் போற்றினர்.

### அருஞ்சொற்கள் :

அழுக்காறு - பொறாமை. கானகம் - காடு. இசைந்தான் சம்மதித்தான். பெருமிதம் – வீரம்.

### வினாக்கள்

1. பாண்டவர்கள் வேத்திரகீயம் வரக் காரணம் என்ன?
2. அந்த ஊரினர் பகாசுரனிடம் என்ன ஏற்பாடு செய்து கொண்டனர் ?
3. அந்தணன் மனைவி அழக் காரணம் என்ன ?
4. வீமனைப் பகாசுரன் ஏன் குத்தினான் ?
5. வீமன் பகாசுரனிடம் யாது கூறினான் ?
6. அந்த ஊரினர் வீமனைப் போற்றினர். ஏன் ?

### இலக்கணம் :

1. எண் எத்தனை வகைப்படும் ?

எண் இரு வகைப்படும்—ஒருமை, பன்மை.

மாணவன் (ஒருமை) மாணவர்கள் (பன்மை).

2. வினைச் சொல்லாவது யாது?

ஒரு பொருளின் தொழில் நிகழ்ச்சியை உணர்த்துவது வினைச் சொல்லாகும்.

(உ – ம்) வந்தான், சென்று.

3. காலம் எத்தனை வகைப்படும் எவை?

காலம் மூன்று வகைப்படும். இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம்.

இறந்த காலம்—வந்தான்.

நிகழ்காலம்—வருகின்றான்.

எதிர் காலம்—வருவான்.

# 12. ஏழைகளின் துணைவி:

## ஸ்ரீமதி ஐடா ஸ்கட்டர்.

கோமகனில்லாக் கோட்டை, மூர்த்தியில்லாக் கோயில், நீரில்லா ஆறு, அதிகாரமில்லாப் போலீஸ், மரங்களில்லா மலை, சேனையில்லாப் பாசறை (Cantonment) என்று, இல்லாத அற்புதங்களைக் கொண்ட வேலூரை வருணிப்பது சிலரது வழக்கம். இல்லாத அற்புதங்கள் கொண்ட இவ் வேலூரில் இருக்கும் அற்புதமும் ஒன்றுண்டு. இது தான் **சி.எம்.சி.** (C.M.C.) மருத்துவச்சாலை ஆகும். இதனைச் சார்ந்த கிறித்துவ மருத்துவக் கல்லூரி ஒன்றும் உண்டு. உலகிலேயே



கீர்த்தி பெற்ற மருத்துவர்கள், மருத்துவத்துக்கு வேண்டிய மிகவும் நுட்பமான கருவிகள், எந்திரங்கள், முதலியன அமைந்து, மிகவும் சிறந்து, முதல் தரமான மேனாட்டு சிகிச்சை முறைகள் நடத்தப் படும் மருத்துவச்சாலை இங்கு அமைந்திருக்கிறது. ஆசியாவிலேயே முதன்மை பெற்று விளங்கும் மருத்துவச்சாலை வேலூரில் இடம்பெற்று திகழ் கிறது என்ற பெருமை வேலூருக்கு இதனால் கிடைத்துள்ளது. இவ் வேலூர் வட ஆற்காடு மாவட்டத்தின் தலைநகர்.

இத்தகைய உயர்ந்த நிலையத்தை ஏற்படுத்தி வளர்த்தவர் ஏழைகளின் இனிய துணைவர்

**மிஸ். ஐடா ஸ்கட்டர்** என்னும் அம்மையார். இந்த அம்மையாரை **டாக்டர்–ஐடா** என்றே வழங்குவர். இவரது வாழ்க்கையில் நடந்த சில நிகழ்ச்சிகள் இந்த அம்மையாரை மருத்துவத் துறையில் பயின்று, இந்தியாவுக்கு வந்து பெண்ணுலகுக்குப் பெருந் தொண்டு புரியுமாறு செய்தன. தம் எண்ணங் களில் உறுதி கொள்பவர்களுக்கு வெற்றி உறுதி யாகக் கிடைக்கும் என்பதற்கு இவ்வம்மையே போதுமான அத்தாட்சியாவர். டாக்டர் ஐடா அவர்கள் குன்ரு உறுதியும் தளரா ஊக்கமும் உடையவர்கள். ஆதலினுல் அவர் எடுத்த செயலில் வெற்றி எளிதாகக் கிடைத்தது. நோயாளிகளுக்குத் தாய்போல் விளங்கிய பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையாரும், டாக்டர் ஐடாவும் பல விதங் களில் ஒற்றுமை உடையவர்கள். தொடக்கத்தில் ஒரு சிறு மருத்துவச்சாலையும், பின்னர் மருத்துவப் பள்ளியும் ஏற்படுத்தி ஏழைகளுக்கு உதவி செய்தார் ஐடா அவர்கள். அதற்குப் பிறகு நோயுற்றவர் களுக்குப் பணி செய்வதற்காகப் பணிப்பெண் பள்ளியும், மருந்து கலக்கும் பள்ளியும் அமைத் தார்கள். கிராமங்களில் வாழும் மக்களுக்கு உதவி செய்வதற்காகவே சாலையோர மருத்துவ நிலையங்கள் —நகர்ந்து செல்லும் மருத்துவ (Mobile) நிலையங்கள்- வாரத்தில் ஒவ்வொரு நாளில் ஒவ்வோரிடத்தில் மருத்துவம்—நடத்தி வந்தார்கள். சிறப்பாகத் தொழுநோய்ப் பிடித்தவர்களுக்குப் பேருதவி செய்து வந்தார்கள்.

டாக்டர் ஐடாவின் முன்னோர்கள் இங்கிலாந்தில் கென்ட் என்ற இடத்தில் வாழ்ந்தவர்கள். அவர்களில் ஒருவரான தாமஸ் ஸ்கட்டர் என்பவர் கென்ட் என்ற

இடத்தைவிட்டு ஐக்கிய அமெரிக்காவில் போய்க் குடியேறினர். அந்த மரபில் தோன்றிய டாக்டர் ஜான் ஸ்கட்டர் என்பவர் முதன் முதல் அயல் நாடுகளுக்குச் சென்று சமயத் தொண்டு செய்தவர். இவரே ஐடா அவர்களின் பாட்டனர். ஜான் ஸ்கட்டர் என்பவர் இலங்கையிலும், மதுரையிலும், சென்னையிலும் தங்கி சமயத் தொண்டு செய்தவர். இவருடைய நினைவுக் குறியாக, வட ஆற்காடு மாவட்டத்தில், இராணிப் பேட்டை என்னும் இடத்தில் 'ஸ்கட்டர் மருத்துவ நிலையம்' கட்டப்பெற்றுள்ளது.

டாக்டர் ஜான் ஸ்கட்டருக்கு ஏழு பிள்ளைகள் இருந்தனர். அவர்கள் எழுவரும் மருத்துவத் துறையில் பயின்று பட்டம் பெற்று இந்தியாவுக்குச் சமயத் தொண்டு புரிய வந்தனர். இவர்களில் கடைசி பிள்ளை இரண்டாவது ஜான் ஸ்கட்டர் எனப்படுவர். இவருடைய மனைவி சோபியா அம்மையார். இவர்கள் முதன் முதலில் இராணிப் பேட்டையில் தங்கி ஒரு மருத்துவ நிலையத்தை ஏற்படுத்தினர். இவ்விருவரும் செய்த புண்ணியத்தின் பயனாகத் தோன்றிய அறச் செல்வியே ஐடா ஸ்கட்டர் அம்மையார்.

1870-ஆம் ஆண்டு டிசம்பர் 9-ஆம் தேதி ஐடா அம்மையார் இராணிப் பேட்டையில் பிறந்தார். இவருடன் பிறந்த தமையன்மார் ஐவர். அவர்களில் நால்வர் சமயக் கல்வியிற் பயின்று அத் துறையில் பணிசெய்து வந்தனர். ஒருவர் வாணிபத் துறையில் இறங்கினர். சில ஆண்டுகளுக்குப் பிறகு ஐடாவும், அவருடைய பெற்றோரும் உடன் பிறந்தவர்களும் தங்கள் தாய் நாட்டிற்குச் சென்றனர். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு ஐடாவின் தந்தையார் டாக்டர் ஜான் ஸ்கட்டர் இந்தியாவுக்குத் திரும்பி வந்தார்.

இரண்டு ஆண்டுகள் கழித்துத் தாயார் சோபியாவும் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். அப்பொழுது ஐடாவுக்குப் பதினுன்கு வயது. அமெரிக்காவில் சிகாகோவில் சிறிய தந்தையாகிய ஹென்றி என்பவரிடம் ஐடா வளர்ந்து வந்தார். ஓர் ஆண்டிற்குப் பிறகு ஹென்றி என்பவரும் சமயத் தொண்டு செய்ய ஜப்பானுக்குச் சென்று விட்டார்.

அப்பொழுது ஐடா நார்த் பீல்டு என்னும் இடத்தில் ஒரு பள்ளியில் சேர்க்கப்பட்டார். அங்கு செம்மையாகக் கல்வி பயின்றுவந்த காலத்தில் ஐடா அவர்களின் தாயாருக்கு உடல் நலம் இல்லை என்ற செய்தி கிட்டவே, ஐடா தன் தாயைப் பார்ப்பதற்கு இந்தியாவுக்கு வர வேண்டியதாயிற்று. அப்பொழுது ஐடாவின் தந்தையார் திண்டிவனம் என்ற இடத்தில் தங்கிக் கிராமங்களில் சமயத் தொண்டு செய்து வந்தார். அக் காலத்தில் திண்டிவனத்தில் மருத்துவ சாலை ஒன்றும் கிடையாது. ஐடா நோய் உற்ற தன் தாயாருக்கு உதவி செய்யவே இந்தியாவுக்கு வந்தார்; முடியுமானுல் அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்லவும் விரும்பினுர். அமெரிக்க ஆடம்பர வாழ்க்கையையே அவர் மிகவும் விரும்பினுர். தன் முன்னேர்களைப் போலச் சமயத் தொண்டு செய்வதற்கோ அல்லது மருத்துவத் துறையில் பயிலவோ அவர் ஆசைப்படவில்லை.

ஓரிரவு நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றே இவருடைய ஆடம்பர வாழ்க்கையை அடியோடு மாற்றி விட்டது. முதலில் ஒரு பிராமணன் இந்த அம்மையாரிடம் வந்து தன் மனைவி கருவுயிர்க்க மாட்டாமல் துன்புறுகின்றுள்; உதவிக்கு வர வேண்டும்; என்று மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். சிறிது நேரங்

கழித்து ஒரு முகமதியர் வந்து தன் இளம் மனைவி யும் அவ்வாறே துன்புறுகின்றாள். உதவ வேண்டும் என்று இரக்கத்தோடுவேண்டிக்கொண்டார். மூன்றா வது ஒரு வேளாளரும் இதே போல் வந்து பணிந்து கேட்டுக் கொண்டார். ஐடா அந்த மூவரையும் பார்த்து, "ஐயா! எனக்குப் பிரசவம் பார்க்கத் தெரி-யாது. மருந்து கொடுக்கவும் தெரியாது. நான் டாக்டரும் அல்ல. என் தந்தையார் டாக்டர். அவ ரிடம் சென்றால் உங்களுக்கு மகிழ்ச்சியோடு உதவி செய்வார்," என்று அறிவித்தார். அவர்கள், "அம்மா! இது பிரசவ நோய்; ஆண் மருத்துவரிடம் காட்டு வதற்கு நாங்கள் விரும்பமாட்டோம். எங்கள் குடும் பப் பெண்களும் விரும்ப மாட்டார்கள். இறந்தாலும் இறப்பார்கள். ஆண் மருத்துவரிடம் பிரசவம் செய்து கொள்ள இசைய மாட்டார்கள்," என்று கூறிச் சென்றனர். அந்த மூன்று பெண்களும் கரு வுயிர்க்க மாட்டாது இறந்த செய்தி ஐடா அம்மை யாருக்குத் தெரிந்தது. அன்றிரவு முழுவதும் ஐடாவுக்குத் தூக்கம் வரவில்லை. ஆடம்பர வாழ்க் கையை வெறுத்தார். அமெரிக்கா சென்று மருத்து வம் பயின்று திரும்பி இந்தியாவுக்கு வந்து ஏழைப் பெண்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்று முடிவு செய்தார். 1895-ஆம் ஆண்டு பிலடெல்-பியாவில் உள்ள மருத்துவக் கல்லூரியில் பயிற்சி பெற்று 1900-ல் இந்தியாவுக்கு வந்து மருத்துவத் தொழிலைத் தொடங்கினார்.

டாக்டர் ஐடா அவர்கள் இந்தியாவுக்கு வந்த ஐந்து மாதங்களில் அவர் தந்தையார் காலமானார். இருப்பினும் ஐடா அவர்கள் வேலூரில் மிஷன் பங் களாவில் ஒரு சிறிய அறையில் முதன் முதலில்

மருத்துவத் தொழிலைத் தொடங்கினர். இந்தச் சிறந்த தொண்டினை இந்த அம்மையார் இங்குச் செய்வதற்கு நியூயார்க்கில் இருந்த பெருஞ் செல்வரான திரு. ராபர்ட் ஷெல் (Schell) என்பவர் பத்தாயிரம் டாலர்கள் உதவி செய்தார். இரண்டு ஆண்டுகளில் ஐயாயிரம் நோயாளிகள் குணம் பெற்றனர். இங்கு முதன் முதலில் வயிற்றில் செய்யும் ரணச் சிகிச்சை ஒன்றை மிகவும் கலங்கா நெஞ்சத்தோடு ஐடா அவர்கள் செய்தார். நோயாளி குணமடைவானோ அடைய மாட்டானோ என்று சிறிது அஞ்சினர். நல்ல காலமாக அந்த நோயாளி ஒரு குறையும் இல்லாமல் குணமடைந்தான்.

இந்த அம்மையாருடைய பெரு முயற்சியால் சென்னை கவர்னரான லார்டு பெண்ட்லண்ட் என்பவர் மருத்துவப் பள்ளி ஒன்றைத் திறந்து வைத்தார். முதல் ஆண்டில் தேர்வுக்கு அனுப்பப் பெற்ற எல்லா மாணவர்களும் முதல் வகுப்பிலேயே தேர்ந்தார்கள். சில ஆண்டுகள் சென்ற பிறகு மருத்துவப் பள்ளி மருத்துவக் கல்லூரியாக மாறியது. தோட்டப் பாளையம் என்னுமிடத்தில் வானளாவும் கட்டிடங்கள் மருத்துவ நிலையத்திற்காக அமைக்கப் பெற்றன. கைதேர்ந்த டாக்டர்கள் பலர் அங்கு இப்போது இருக்கிறார்கள்; அவர்களில் அயல் நாட்டினர் பலர்.

டாக்டர் ஐடா ஸ்கட்டர் இனிய தோற்றம் உள்ளவர். இரணச் சிகிச்சை செய்வதில் திறமை வாய்ந்தவர். டென்னிஸ் விளையாடுவதில் விருப்பம் உடையவர். உறுதியும், ஊக்கமும், தளர்ச்சியடையாத தன்மையும் பெற்றவர். இவருடைய தன்னம்பிக்

கையே இவருக்கு வாழ்வில் வெற்றியளித்தது. இவரது பேச்சில் நகைச்சுவை மிகுந்திருக்கும். இவர் தொடங்கும் எந்தக் காரியத்திற்கும் ஊக்கமும் உதவி யும் புரிந்தவர் குமாரி ஜெர்ட்ரூட் டாட் (Gertrude Todd) என்பவர். இந்த அம்மையாரும் டாக்டர் ஐடா வும் உயிர் ஒன்றும் உடல் இரண்டும் போல வாழ்ந்து வந்த உண்மை நண்பர்கள், இன்று வேலூரில் ஒரு உயர்ந்த மருத்துவ நிலையம் காட்சியளிக்கிறது என் முல் இவ்விரு பெண்மணிகளின் பெரு முயற்சியே அதற்குக்காரணமாகும். ஆசியாவிலேயே மிகவுயர்ந்த மருத்துவம் இங்குதான் செய்யப்படுகிறது. செல் வத்தில் சிறந்தவர் முதல் ஏழை எளியவர் வரையில் இங்கு மருத்துவ உதவி பெறுகின்றனர்.

முதன் முதலில் இரண்டு படுக்கைகளுடன் ஆரம்பிக்கப் பெற்ற இந்த மருத்துவச் சாலை இப் போது சுமார் 800 படுக்கைகள் கொண்ட மாபெரும் சாலையாக முன்னேற்ற மடைந்து விளங்குவதைத் தமது தொண்ணூருவது ஆண்டிலும், தொண்டர் கள் இருவருடன் தள்ளாடி நடந்து வந்து, தினமும் கண்டு களிப்புறுவது இவ் வம்மையாரது வழக்கம்.

1960-ஆம் ஆண்டு தென் இந்தியாவில் கோடைக் கானலில் மே மாதம் 27-ஆம் தேதி காலை 7-30 மணிக்கு டாக்டர் ஐடா அம்மையார் விண்ணுலகு எய் தினர். அப்பொழுது அவருக்கு வயது தொண்ணூறு. இவரது அறுபது ஆண்டுகளின் உழைப்பின் பயனாக வேலூர் மருத்துவ நிலையம் நின்று நிலவுகின் றது. இவர் பிரிவு குறித்து வேலூர் மக்களும் இந்த நாட்டு ஏழை மக்களும்—பெரிதும் வருந்தினர். இவர் சடலம் வேலூருக்குக் கொண்டு வரப் பெற்றது.

பொதுமக்களும், மருத்துவர்களும், மருத்துவச்சாலை ஊழியர்களும் தங்கள் இறுதி மரியாதையை அவருக்குச் செலுத்தினர். அவர் உடல் கிறித்துவ மருத்துவக் கல்லூரியில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

## அருஞ் சொற்கள்

கோமகன் - அரசன், மூர்த்தி - கடவுள் விக்கிரகம், குன்ற - குறையாத, மருத்துவம் - வைத்தியம், ஊக்கம் - சுறுசுறுப்பு, விண்ணுலகு - தேவலோகம்.

## வினாக்கள்

1. ஐடாவின் இளமையையும் கல்வியையும் விளக்கு.
2. அவர் மருத்துவப் பயிற்சியை நாடக் காரணம் யாது?
3. வேலூரில் அவர் செய்த தொண்டு என்ன?
4. இவருக்கு உதவி செய்தது யார்?
5. ஐடாவின் நற் பண்புகளை விளக்கு.

## இலக்கணம்

1. காரணப் பெயர் என்றால் என்ன?

சில பெயர்களுக்குக் காரணம் கூற முடியும்; அவைகளுக்குக் காரணப் பெயர் என்று பெயர்.

2. அது எத்தனை வகை :- அது இரு வகைப்படும். காரணப் பொதுப் பெயர். காரணச் சிறப்புப் பெயர்.

காரணப் பொதுப் பெயர் — அணி.

காரணச் சிறப்புப் பெயர் — தோடு, வளை.

# 13. இயற்கை கற்பிக்கும் பாடம்

( வித்துவான் A. கன்னையன்)

நிலம், மலை, கடல், ஆறு, முகில், விண், காற்று, நிலவு, கதிரோன், ஆகியனவும். காக்கை, கொக்கு, நாரை, கிளி, முதலிய பறவைகளும் மரம், செடி, கொடி, சோலை முதலிய எல்லாம் இயற்கைப் பொருள்களாகும். இவை கண்ணுக்கும் விருந்தாகி, கருத்துக்கும் துணையாகி, உள்ளத்தில் உவகையூட்டி, உறுதியுடன் வாழ உதவுகின்றன. இவைகள் நமக்குத் தரும் பாடங்கள் எண்ணில; இல்லாமலா கவிஞர் கள் இவ்வியற்கைகளைப் பார்த்துப் பாடி மகிழ்ந் தனர்.

திருவள்ளுவர் நிலத்தைப் பார்த்தார். அதன் தன்மைகளை எண்ணினார். சில கருத்துக்களை நமக் காகப் பாடி வைத்தார். நிலத்தின்மீது நாம் மண் வெட்டியால் தோண்டினாலும், எச்சில் துப்பினாலும் அது கருதுவதில்லை; பதிலுக்கு, நன்மையே செய்கிறது. அதுபோல நாமும் பிறர் செய்யும் தீமைகளைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். "அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை இகழ்வாரைப் பொறுத்தல் தலை," என்று கூறினார். நான் பொருள் இல்லாதவன், ஏழை, எனக்கு யாரும் உதவவில்லை என்று சோம்பலாக இருக்கும் மனித னைப் பார்த்து, பூமி தேவியாகிய நல்லவள் சிரிப்பா ளாம். ஏன்? உழுது விதை இட்டால் ஒன்று பல வாகப் பயன் தரும் நானிருக்க சோம்பலாக ஏன் இருக்கிறாய் என்று அதன் தன்மையைப் பார்த்த வள் ளுவர், " இலம் என்று அசைகி இருப்பாரை நோக்கி, நிலமென்னும் நல்லாள் நகும்," என்று சொல்லி யுள்ளார்.

மலையைப் பார்த்த பெரியோர், அது நமக்குக் காட்டும் பாடத்தைப் பாடி வைத்தனர். வருவோர்க் கெல்லாம் வாரி வழங்கும் வள்ளல்போல் அளந்து கூறமுடியாதபடி, சந்தன மரம், தேன், பழம், மான், மயில், முத்து போன்ற அரும் பொருள்களைக் கொண் டிருக்கிறது; வருவோர்க்கு வழங்குகிறது. அது போல நம்மிடமுள்ள பொருள்களைப் பிறர்க்கு உதவ வேண்டும். மலை அசைக்க முடியாத உயர்ந்த காட்சி யுடன் விளங்கும். நாமும் பிறர் நம்மை அசைக்க முடியாத வல்லமையும், தோற்றமும் பெற்று வாழ வேண்டும்; மலை மழை இல்லாக் காலத்தும் தன் னிடமுள்ள பொருளைத் தரும். நாமும் வறுமை வந்த காலத்தும் முடிந்த உதவி செய்தல் வேண்டும். இதனைப் பவணந்தியார் என்பவர் நன்குணர்ந்து பாடினர்.

கடல் வெயிற் காலத்தில் குளிர்ந்த காற்றை வீசி தண்மை உண்டாக்குகிறது. கடற்கரையில் மக்கள் மாலை நேரங்களில் கடலைக் கண்டு மகிழ் வதோடு கடற்காற்றை ஏற்று நன்மைபெறுகின்றனர். கடல் தன்னிடமுள்ள மீன், முத்து, பவழம், சங்கு, உப்பு முதலிய இன்றியமையாத பொருள்களைத் தரு கின்றது. அதன் உதவியால் கப்பலில் சென்று வாணி பம் செய்து வாழ்கிறோம். இவ்வளவும் அது ஏன் செய்கிறது? அதுபோல நாமும் நம்மிடமுள்ளதைப் பிறர்க்கு உதவ வேண்டுமன்றோ?

"ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்றார் ஔவைப் பாட்டி. ஆற்று நீரில் காலையில் குளித்தால் உடல் உறுதி பெறும், உள்ளம் மகிழ்வு பெறும். உழவுத் தொழில் செய்ய ஆற்றுத் தண்ணீர் பயனா கிறது. ஆறு எந் நாட்டினராயினும் எக் குலத்தவ

ராயினும், தன் நீரை உதவுகிறது. மானிடர் போல சுருங்கிய உள்ளம் அதனிடம் இல்லை.

முகில் எல்லோர்க்கும் மழை பெய்விக்கிறது. அது ஏழைகள் என்றோ செல்வர் என்றோ வேறுபாடு காட்டுவதில்லை. மழை பெய்யும் போது "மேகம் கோபம் கொண்டு உறுமுகிறது. கண்ணில் தீப்பொறி பறக்க மின்னுகிறது. இடி முழக்கத்தால் நம்மைப் பார்த்துச் சிரிக்கிறது," என்றார் ஒரு கவிஞர்.

விண் இல்லையானால் நாம் உலாவ முடியாதல்லவா? சந்திரன், சூரியன், மேகம், காற்று அனைத்தையும் விண் தன்னுள் கொண்டுள்ளது. ஆடம்பரம், ஆணவம், அதிகாரம் செய்து அது எதனையும் துன்பப் படுத்துவதில்லை. நீல வானமாகக் காட்சியளித்து மன அமைதியைத் தருகிறது. கடவுளும் இப்படிப்பட்ட தூயவெளி என்கின்றனர் அறிஞர்கள்.

"காற்றுத் தான் சிலரைக் கடிந்து வீசுமோ?" என்றார் கபிலர். மனிதர் சிலரைத் தீண்டத்தகாதவர், உடன் உண்ணத் தகாதவர் என்று எண்ணி வாழ்வதைப் பார்த்து இயற்கைப் பொருளான காற்று தரும் பாடத்தைப் பாரீர் என்றார், ஒரு புலவர்.

நிலவுலாவிய நீர்மலி வேணியன் எனச் சிவபெருமான் முடியில் சூடினார் என்பர்; தன் தண் ஒளியால் உலகை விளக்கி உயிர்களைத் தாய்ப்போல் நிலவு வளர்க்கிறது: அதுபோல் அருள் குணம் நமக்கும் தேவை.

கதிரோன் இல்லையேல் கண் நமக்கில்லை; அவன் ஒளியினால் காண்கிறோம்; அவனில்லையேல் உயிர் வாழுமோ? பயிர் ஓங்குமோ?

காக்கை விடியற் காலையில் எழுந்து இன்னுமா உறக்கம்! எழுங்கள் என்று நம்மை எழுப்புகிறது; உணவு கிடைத்தால் கூட்டமாகக் கூப்பிட்டுண்கிறது. கொக்கு, நாரை, கிளி இவைகள் மக்களுக்குக் காட்சிப் பொருள்களாகவும், துணைப் பொருள்களாகவும், தாதுப் பொருள்களாகவும் பயன் படுவதைக் காணலாம்.

மரம் இலைகளின் மூலம் கெட்ட காற்றை உட்கொண்டு நல்ல காற்றைத் தருகிறது. வெயில் காலத்தில் நிழல் தருகிறது, ஏழைகளுக்குப் புகலிட மாக வாழ இடம் தருகிறது. மனிதர் செய்ய முடியாத உதவியைச் செய்கிறது; செடி, கொடி, சோலைகள் சொல்ல முடியாத நன்மைகளை மனிதர்களுக்குச் செய்கின்றன.

எனவே, நாம் இயற்கைப் பொருள்களினால் அறியும் நன்மைகள், படிப்பினைகள் ஏராளம். நிலத்தின் பொறுமை, மலையின் கொடை, கடலின் உதவி, ஆற்றின் பொறுமை, முகிலின் வீரம், விண்ணின் அமைதி, காற்றின் பண்பு, நிலவின் கருணை, வெயிலவன் அன்பு, மரம் முதலியவற்றின் பேருதவிகள் எல்லாம் எண்ணியுணர்ந்து பயன்பெற வேண்டும். இயற்கை ஆசிரியராக இருந்து சொல்லாமற் சொல்லும் பாடங்களைக் கற்போம், அவற்றின்படி நடந்து உயர்வோம்.

---

## 14. அறிவுடையொருவனை அரசனும் விரும்பும்

நீண்ட காலத்திற்கு முன்னர் அல்ஜீரியா நாட்டை ஒரு மன்னர் ஆண்டு வந்தார். அவர் அறிவிலும், வீரத்திலும் சிறந்தவர். நற்குணங்கள் பல நிறைந்தவர். தன் நாட்டில் வாழும் மக்களைத் தன்னுயிர் போல் எண்ணிப் போற்றுபவர். நாட்டின் நலனையே பெரிதாக நினைப்பவர். தன்னுடைய நாட்டில் பல நீதிபதிகளை அமைத்து, மக்களுக்குத் துன்பம் ஏற்படாமல் காத்து வந்தார். அந்த நீதிபதிகளும் நேர்மை யுடையவர்களாகவே இருந்தனர். வேண்டியவர் வேண்டாதவர் என்ற வேறுபாடு கருதாமல் நீதி வழங்கி வந்தனர். அவர்களில் ஒருவர் நேர்மையில் மிகச் சிறந்தவர் என மக்கள் எல்லோரும் புகழ்ந்தனர். இந்த உண்மையை மன்னர் நேரில் அறிய விரும்பினர்.

ஒரு நாள் மன்னர் மாறு வேடம் அணிந்து அந்த நீதிபதி இருந்த நகருக்குச் சென்றார். ஒரு குதிரையின் மீது ஏறிக் கொண்டு அந்த ஊரின் கோட்டை வாயிலை அடைந்தார். கோட்டை வாயிலில் முடவன் போல ஒருவன் அமர்ந்திருந்தான். அவன் குதிரை மீது ஏறி வருபவரைப் பார்த்து, ''பெருமானே! நான் திக்கற்றவன். இன்று உண்ண உணவின்றி வருந்துகின்றேன். உணவு கொடுப்பார் ஒருவரும் இல்லை. தயவுசெய்து உதவிபுரிய வேண்டும்,'' என்று வேண்டினன். முடவன் நிலையைக் கண்டு அவனுக்கு ஒரு வெள்ளிக் காசு கொடுத்தார் மாறு வேடத்தில் இருந்த மன்னர்.

வெள்ளிக் காசைப் பெற்றுக் கொண்டும் முடவன் முகமலர்ச்சி யடையவில்லை. அதனையறிந்த மன்னர், "ஏன் இன்னும் வருத்தத்தோடு இருக்கிறாய்?" என்று கேட்டார். "ஐயனே! தாங்கள் காசு கொடுத்தீர்கள். நான் இல்லை என்று சொல்லவில்லை. இந்தக் காசை இங்கே வைத்துக் கொண்டு நான் என்ன செய்வது? கடை வீதி வரையிலும் தங்கள் குதிரைமீது ஏற்றிச் சென்று அங்கு என்னைவிட்டால் உணவு வாங்கி உண்பேன்; தயவு கூர்ந்து என்னை ஏற்றிச் செல்ல வேண்டும்," என்று வேண்டினான், அவனுடைய இரக்கமான சொற்களைக் கேட்ட மன்னனுக்கு அவன் மீது மனம் இரங்கியது; முடவனைத் தன்னுடைய குதிரையின் மீது ஏற்றிக் கொண்டார்.

இருவரும் குதிரையின் மீது ஏறிக் கொண்டு பல தெருக்களைக் கடந்து கடை வீதியை அடைந்தனர்; கடைத் தெருவை அடைந்ததும் மாறு வேடத்தில் இருந்த மன்னர் முடவனை நோக்கி, "அப்பா! நீ இனி இறங்கி விடலாம், கடை வீதி வந்து விட்டது, காசு கொடுத்து உணவு வாங்கி உண்பாயாக," என்றார். முடவன் இறங்க மறுத்துவிட்டு அரசனைப் பார்த்து, "குதிரை என்னுடையது; நீதான் இறங்க வேண்டும், நானோ முடவன்! நடக்க முடியாமல் வருந்துகின்றாயே என்று உன்னைக் குதிரைமீது ஏற்றி வந்தால் என்னை இறங்கும்படி நீ சொல்கிறாயே, நன்றாக இருக்கிறது உன்னுடைய செயல். முறை தவறாத நுட்பமான அறிவுடைய நீதிபதி வாழும் ஊரில் இருக்கின்றோம் என்பதை நினைவில் வைத்துக் கொள்," என்றான்,

மாறு வேடம் புனைந்த மன்னன் அவனைப் பார்த்து, "அந்தோ! பாவம்! முடவனாயிற்றே என்று காசு

கொடுத்தேன். உணவு வாங்கக் கடைவீதிக்குச் செல்ல வேண்டும் என்ருய்; குதிரைமீது ஏற்றி வந்தேன். இவ்வளவு உதவி செய்த எனக்கு நல்ல பாடம் கற்பித்தாய். நீதிபதியிடம் செல்லவும் துணிந்தாய்; அவ்விதமே செல்வோம்,'' என்ருர்.

இருவரும் நீதிமன்றம் சென்றனர். மன்னனுக்கு நீதிபதியின் திறமையை ஆராய்வதற்குச் சரியான வாய்ப்புக் கிடைத்ததுபற்றி மிகுந்த மகிழ்ச்சியே. நீதிபதியை நோக்கி, ''நீதிமுறையின் நெறிதவருத ஐயனே! இந்த மனிதர் வழியில் நடந்து வந்து கொண்டிருந்தார். கால் வலிக்கிறதென்று சொன்னர் ஐயோ பாவம் என்று இவரை என்னுடைய குதிரையின்மீது ஏற்றிக் கொண்டேன். இப்பொழுது குதிரையே தன்னுடையது என்று கூறுகின்ருர். இந்தக் குதிரை நீண்ட நாட்களாக என்னிடம் இருந்து வருகிறது,'' என்ருன் முடவன்.

மாறுவேடத்தில் இருந்தவர், நீதிபதியைப் பார்த்து, ''ஐயா! நான் வெளியூரிலிருந்து வருகிறேன். கோட்டை வாயிலில் இம்முடவன் பிச்சை கேட்டான், காசு கொடுத்தேன். பிறகு கடைவீதிக்குச் சென்று உணவு வாங்கவேண்டும் என்ருன். நான் இவனைக் குதிரையின்மீது ஏற்றிச் சென்றேன்; கடைவீதியில் இறங்கும்படி சொன்னல், மறுத்துக் கூறியது மல்லாமல் குதிரையே தன்னுடையது என்று கூறினன். என் குதிரையை என்னிடம் சேர்க்கும்படி உத்தரவு இடவேண்டும்,'' என்ருர். இருவர் கூறியவற்றைக் கேட்டு நீதிபதி, ''உங்கள் வழக்கை நாளையதினம் ஆராயலாம். குதிரை இங்கேயே இருக்கட்டும்; நாளைக்கு வாருங்கள்,'' என்ருர். குதிரையை விட்டுவிட்டு அவ்விருவரும் சென்றனர்.



மறுநாள் மன்னரும் முடவனும் நீதிபதியிடம் வந்தனர். நீதிபதி அவர்களைப் பார்த்து, "உங்கள் குதிரை மற்ற குதிரைகளோடு நிறுத்தப்பட்டிருக்கிறது. உங்களால் அடையாளம் கண்டுபிடிக்க முடியுமா?" என்று கேட்டார். இருவரும் "முடியும்" என்று கூறினர். நீதிபதி அவ்விருவரையும் அழைத்துக்கொண்டு குதிரை இருக்கும் இடத்தை அடைந்தார். அவ்விருவரையும் தனித் தனியே குதிரையைக் காட்டுமாறு பணித்தார். மன்னர் தன் குதிரையைக் காட்டினர்; முடவனும் அதே குதிரையைக் காட்டினன். பிறகு நீதிபதி நீதி மன்றத்திற்கு இருவரையும் அழைத்துச் சென்றார். நீதிபதி, மாறுவேடத்தில் இருந்த மன்னரை நோக்கி, "ஐயா! குதிரை உம்முடையதே. நீர் குதிரையை ஓட்டிச் செல்லலாம்," என்றார். பின்னர் முடவன் பொய் வழக்குச் சொன்னதற்காக அவனுக்கு, "இருபது சவுக்கடி கொடுக்கவேண்டும்" என்று உத்தரவு இட்டார்.

நீதிமன்றத்தில் வேலையை முடித்துக்கொண்டு நீதிபதி வீட்டிற்குப் புறப்பட்டார். வெளியில் மாறு வேடத்தில் இருந்த மன்னரைக் கண்டார். "என்ன செய்தி?" என்று வினவினர். "நீதிபதியே, தாங்கள் நினைத்தபடி யான் ஒரு வழிப்போக்கன் அல்லன். இந்நாட்டு மன்னன்; உம்முடைய திறமையைக் கேட்டேன். அதனை அறியவே மாறுவேடம் பூண்டு வந்தேன்," என்று தன் வேடத்தை மாற்றி நின்றார். நீதிபதி வியப்படைந்தார். மன்னர் நீதிபதியை நோக்கி, "இந்த வழக்கில் உம்முடைய தீர்ப்பு மிகவும் உண்மையானது. எவ்வாறு உண்மையைக் கண்டறிந்தீர்?" என்று வியப்புடன் கேட்டார்.

நீதிபதி மன்னனை வணங்கி, "பெருமானே! நான் உங்கள் இருவரையும் தனித்தனியே குதிரையைக் காட்டுமாறு சொன்னதற்குக் காரணம் உண்டு. உங்களுக்குக் குதிரையைக் காட்ட முடிகிறதாவென்று நான் அறிவதற்கன்று. குதிரை உங்களைத் தெரிந்து கொள்ளுகிறதா வென்று அறியவே விரும்பினேன். தாங்கள் குதிரையைக் காட்டியபோது குதிரை மகிழ்ச்சியோடு கனைத்தது. முடவன் காட்டியபோது அது அவனை உதைத்தது. அதனால் குதிரை தங்களுடையதென்று முடிவு செய்தேன்," என்றார்.

நீதிபதியின் நுண்ணறிவைக் கண்டு அரசன் மிகவும் பாராட்டினான். அறிவில் சிறந்த ஒருவனை உலகம் மட்டும் அல்ல; அரசனும் விரும்பும் என்பது இவ்வரலாற்றால் நாம் அறிந்துகொள்கிறோம்.

### அருஞ்சொற்கள் :

மன்னர் - அரசர், நெறிதவறாத - முறைதவறாத, நுண்ணறிவு - கூர்மையான அறிவு. பாராட்டி - புகழ்ந்து.

### வினாக்கள்

1. மன்னன் மாறுவேடம் புனைந்தது ஏன்?
2. முடவன் ஏன் குதிரையைவிட்டு இறங்க மறுத்தான்?
3. நீதிபதியிடம் இருவரும் என்ன முறையிட்டனர்?
4. உண்மையை நீதிபதி எவ்வாறு கண்டறிந்தார்?
5. அரசர் நீதி பதியை எவ்வாறு பாராட்டினர்?

## இலக்கணம் :

முற்று என்றால் என்ன? எச்சம் என்றால் என்ன? ஒரு வினைச்சொல்லின் பொருள் முற்றுப்பெற்று இருந்தால் முற்று என்று பெயர். ஒரு வினைச்சொல்லின் பொருள் முற்றுப் பெறாமல் குறையாக இருந்து பெயர்ச் சொல்லையோ வினைச் சொல்லையோ தழுவி வருமானால் எச்சம் என்று பெயர்.

(உ-ம்.) வந்தான்—வினைமுற்று
வந்த பையன்—பெயர் எச்சம்
வந்து போனான்—வினையெச்சம்

# 15. பொங்கல் விழா

(புலவர். நி. சு. தியாகராசன்)

தமிழர் பல நாள் தொடர்ந்து கொண்டாடும் விழா பொங்கல் விழா ஒன்றேயாகும். இஃது அக மகிழ்ச்சி புற மகிழ்ச்சி இரண்டுக்கும் ஏதுவாய் அமை கிறது. ஆண்டு முழுவதும் அழுக்குப் படிந்த வீடுகள் தூய்மை பெறுகின்றன, மேடு பள்ளம் செப்பனிடப் படுகின்றன. மண்சுவர் வெண் சுவராக மாறுதலுற் றுச் செம்மண்ணைச் சிறக்க வணிந்து திகழ்கிறது. தரையிலே கோலமிட்டு, தலையிலே பூவை சூட்டி. இடையிலே புத்துடையணிந்து பொங்கலோ பொங்க லென்று புகலும் அகமகிழ்ச்சித்தான் என்னே! என்னே! இதனுல் இல்லமும் உள்ளமும் மகிழ்ச்சியே யன்றோ பெறுகின்றன?

இத்தகைய பொங்கல் விழாவைத் தமிழர் போகி, பெரும் பொங்கல், மாட்டுப்பொங்கல், காணும் பொங்கல் என்று பெயரிட்டு வழங்கியுள்ளனர். இவற்றின் சிறப்புத் தன்மைகளையும், அவற்றின் இன்றியமையாத தன்மையையும் இனிக் காணலாம்;

போகி: "போகி" என்றது, இந்திரனுடைய பெயர்களில் ஒன்று. அவன் ஏழு மேகங்களின் தலைவன் என்று நூல்கள் கூறும். பயிர்வளர்ச்சிக்கு மழை யின்றியமையாததல்லவா? அம் மழையைத் தந்த கடவுளை வணங்கும் நன்னுளே போகி நன்னுளாகும். மழை தந்த நன்றியைப் பாராட்டும் வாயிலாகவும், இனிவரும் ஆண்டிலும் அவ்வாறே

மழையைப் பெய்விக்கவேண்டும் என்று இந்திரனை வேண்டிக்கொள்ளும் வாயிலாகவும் போகி என்னும் விழா பொங்கல் விழாவில் அமைந்திருக்கிறது.

இப் போகி, கடந்த ஆண்டின் இறுதி நாளாதலின் அதனை விழவு செய்து பழமையை வழியனுப்புகிறோம். இப் பொருளைப் போகி (போக) என்ற சொல் காட்டுகிறது. இதை விளக்கும் சில சடங்குகளைத் தமிழ் மக்கள் கைக்கொண்டுள்ளனர். போகியன்று காலை கடுங்குளிரில் முறம், துடைப்பம், பழைய காகிதங்கள், பழங்கணக்கு ஏட்டுச் சுவடிகள் யாவற்றையும் தீயிலிட்டு எரித்தலும், ஆற்றில் எறிந்தும் செய்து, நீராடி, புத்துடை புனைந்து புதுப்பொங்கல் உண்ணக் காண்கிறோமல்லவா?

## பெரும் பொங்கல்

போகிக்கு மறுநாள் புத்தாண்டின் முதல் நாள்; தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற தைத் திங்களின் முதல் நாள். இந்நாளைத்தான் "பெரும் பொங்கல்" என்கின்றனர் தமிழர். கடந்த ஆண்டின் பொங்கலுக்குப் பிறகு வருகின்ற புதிய பெரிய பொங்கல் இதுதானே. பெரும்பானையிலே அன்று பாற்சோறு பொங்கப்படுகிறது. பொங்கி வழியும் பொங்கலைக் கண்டு பொங்கலோ பொங்கல் என்று கூவி மகிழ்ந்து ஆரவாரம் செய்கின்றனர். போகியை வழியனுப்பிப் பெரும் பொங்கலை வரவேற்கும் நாள் இந்நாளே யன்றோ?

பயிர்கட்கு நீரூட்டி வளர்த்தான் இந்திரன். அதனைப் போகி என்ற அவன் பெயரினாலே பெயரிட்டு

பொங்கலிட்டு வாழ்த்துகின்றனர் தமிழர். அவ்வாறே வெம்மைக் கதிர்களால் பயிர்களை வளர்ச்சியெய்தச் செய்யும் கதிரவனுக்கும் நன்றியறிவிக்க வேண்டு மன்றோ? அதுவே கதிரவனுக்கு இடும் பெரும் பொங்கல் விழா. உலகப்பொருள்களில் பெரிய பொருள் சூரியனே யன்றோ? அதற்கேற்ப, பெரும் பானையில், பொங்கல் இடுகின்றனர்.

## மாட்டுப் பொங்கல்

இத்துடன் பொங்கல் விழாவை நிறுத்திவிட எண்ணவில்லை தமிழ் மக்கள். புத்தாண்டின் இரண்டாம் நாளை **மாட்டுப் பொங்கலாகக்** கொண்டாடு கின்றனர்; ஏன்? ஏரோட்டி, நீர் இறைத்து, நாள், திங்கள், ஆண்டு முழுவதும் வேலை செய்து, நெல் லாக்கித்தந்த எருதுகளாயிற்றே! அவற்றிற்கும் ஓய்வு தேவை. மகிழ்ச்சி தேவை என்று அவை செய்த நன்றியைப் பாராட்டும் பாராட்டே மாட்டுப் பொங்கல். அந்நாளிலே மாடுகளுக்கு நீராட்டிச் சீராட்டிச் சோறூட்டிப் பூசூட்டி, மகிழ்ந்து, அவற்றையும் மகிழ்விக்கின்றனர்.

## காணும் பொங்கல்

தைத் திங்களின் மூன்றும் நாள் கன்றுப் பொங்கலாகும். எதிர்காலச் சிறுர்களின் உழைப்பாளிகளே யன்றோ இளங்கன்றுகள். அதனுல்தான் கன்றுப் பொங்கலையும் கொண்டாடுகின்றனர். ஆனல் மாட்டுப் பொங்கலுக்குச் சிறப்புச் செய்தது போல இதற்குச் செய்வதில்லை. என்ருலும் மாடு விரட்டும், எருது ஆட்டம், கொல்லேறு தழுவுதலும் நிகழ்த்து கின்றனர் சில ஊர்களில்.

மாட்டுப் பொங்கலன்று கன்றுகளுக்கும் சேர்த்துச் சிறப்புச் செய்துவிடுவதால் கன்றுப் பொங்கல் என்ற ஒன்று தேவையில்லை என்று கூறி அச் சொல்லையே காணும் பொங்கல் என்று திருத்தி யுள்ளனர் சில பிற்காலத்தினர். ''அஃதும் ஒராற்ருன் ஏற்புடையதேயாகும்.'' அதற்கு அவர் கூறும் விளக்கம் காண்பாம்; பொங்கலுக்குப் பிறகு பலர் சேர்ந்து தலைப்பாகை சூடி வீடுதோறும் சென்று. பெரியவர்களை வணங்கி, பால் பொங்கிற்ரு? பொங்கல் பொங்கிற்ரு? என்று கேட்கப்பெற்றும், வரும் ஆண்டில் செவ்வனே வாழவேண்டும் என்று ஆசி பெற்றும் வீடு சேர்வராம். இதனுல் இந்த தினத்தைக் காணும் பொங்கல் என்பர். இவை யெல்லாம் தமிழர் கொண்ட நன்னுட்களின் நற் பயனே யன்ருே?

தமிழரின் தைப் பொங்கல் வாழ்க வாழ்க வென்று வாழ்த்துவோமாக.

வாழ்க பொங்கல் விழா.

---

# 16. தமிழ் கேட்ட மன்னன்

## (சிறு நாடகம்)

### காட்சி—1

நடிகர் :—நந்திவர்மன், அமைச்சர்.

**அமைச்சர் :** வாழ்க, வேந்தே! வாழ்க, நும் கொற்றம்!

**நந்திவர்மன் :** அமருங்கள், அமைச்சர்களே! நாட்டில் வறுமை, பிணி, அறியாமை நீங்கச் செய்ய வேண்டும். கலைப்பணியும் செய்ய வேண்டும். இதுவே நமது வேலையாகும்.

**அமைச் :** ஆற்றல் அரசே! உமது முன்னோர்கள் காஞ்சி நகரையும், மாமல்லபுரத்தையும் கற் சிற்பங்களால் அழகு செய்து வைத்தனர். அவை கண்ணையும் கருத்தையும் கவரும் உயிர் ஓவியங்களாகத் திகழ்கின்றன. தமிழர் கலைத் திறனை எந்நாட்டினரும் கண்டு போற்றுகின்றனர். மாமண்டூர், திருச்சி ஆகிய இடங்களில் மலையைக் குடைந்தே செய்யப்பட்ட குகைக் கோயில்களும், சித்தன்ன வாசல் ஓவியங்களும் காண்போரைச் சிந்திக்கச் செய்கின்றன.

**நந்தி :** அமைச்சரே! நாமும் நம் முன்னோர் போல அருங்கலை வளர்க்க வேண்டும். அதிலும் தமிழ் நாட்டுத் தமிழ்க் கலையைப் பெரிதும் வளர்க்க வேண்டும். இனி, எனது தம்பியார் நால்வரின் தொல்லை விட்டது. என் தோள்வலி கண்டு தோற்றோடினர். புலியை எதிர்த்த பூனையாயினர்.

**அமைச் :** வேந்தே! உமது தம்பியர் மந்திரத்தால் மாங்காய் விழும் என்று கருதி மந்திர தந்திரங் களையே கற்றனர். மனவலியும் உடல்வலியும் கற்கவில்லை. அரசியலை அறியவில்லை. உம்மைப் போலத் தமிழ்நூல் அறிவும், ஏழைக்கிரங்கும் பண்பும், மகேஸ்வரன்மீது அன்பும் பெற வில்லை. உமது போர்த்திறமையால் தெள்ளாறு, குறைக் கோட்டை, வெறியலூர் போன்ற ஊர்களை நீங்கள் வென்றீர்கள்.

**நந்தி :** அதிருக்கட்டும், இனி நம்நாட்டு மக்கள்மீது காட்டும் அன்புதான் நமக்கு நன்மை தரும். ஏழைகளின் இன்னல் என்னவென்று நேரில் சென்று பார்த்து வரவேண்டும். இப்போது கோவிலுக்குப் போகும் நேரமானதால் மகேஸ் வரன் கோயிலுக்குச் சென்று கண்ணுரக் கண்டு மகிழ்வோம். பிறந்த பயன்பெறுவோம், வரும் போது ஏழைகளைக் காண்போம். அந்த நடமாடும் தெய்வங்களுக்கு உதவி செய்வோம்.

## காட்சி—2

நடிகர் :— துறவி, செல்வி, குமுதா, அமுதமணி.

**துறவி :** (சுரைக் குடுக்கை யாழுடன் பாடிச் செல்லுதல்)

உலகமே நிலையாத வாழ்வாம்—மனம்
அலைமோதி வாழாதே மனிதா!
பலகலை கற்றே உணர்வாய்—இங்கு
நிலவும் அறம் செய்துமகிழ்வாய்,
யார்க்கும் அன்பு செய்து வாழ்வாய்—இந்த
பார்புகழ் தமிழ்கேட்டு இன்பம் அடைவாய்.

**செல்வி:** அதோ அந்த சாமியாரைப் பார், தோழி! எவ்வளவு நன்ருகப் பாடுகிருர். அந்த அழகு தமிழ்ப்பாட்டில் கலந்த இசைதான் என்ன இனிமை! என் மனத்தை அது இசைக்கின்றதே!

**குமுதா:** ஆமாம் செல்வி, இவரைப் பார்த்தால் பெரிய குடும்பத்தில் பிறந்தவர் போல் இருக்கிருர். ஆனல் ஏனே துறவியாகி விட்டார், பாவம்! தெருவில் பாடிக் கொண்டே போகிருர். நீதிகளைப் பாடி மக்களுக்கு அறிவூட்டுவதே இவர் தொண்டு போலும்! இதோ என் வீட்டுக்குச் சென்று நல்ல உணவு கொண்டு வந்து இவருக்குத் தருகின்றேன்.

**செல்வி:** ஆமாம்; தோழி! நானும் என் வீட்டில் உள்ள பழம் கொண்டுவந்து கொடுத்து வணங்குகிறேன். இவரல்லவா ஆடம்பரமற்ற வணங்கத் தகுந்த துறவி.

**அமுத மொழி:** ஆகா! என்ன இன்பத் தமிழ்ப் பாடல், என்னை மெய்மறக்கச் செய்கின்றதே? ஏழிசை மயமான இறைவனிடம் சேர்க்கின்றதே? இது வன்றே பாடல்; இவரல்லவா உண்மைத் துறவி? சுவாமி! கொஞ்சம் நில்லுங்கள்; தயவு செய்து அப் பாடலை மீண்டும் பாடுங்கள்; எழுதிக் கொள்ளுகிறேன், வாருங்கள் தமிழ் முனிவரே! அன்பு கொண்டு எமது வீட்டில் அறுசுவை உணவு கொள்ள வேண்டுகிறேன்; ஏற்றுக் கொள்ளுங்கள். ஐயனே! உங்கள் தமிழிசைக்கு முன் என் ஆடல் பாடல் கலை எம்மட்டாகும்.

**துறவி :** அம்மையே, அன்பு மணியே! உன் தமிழன்பும் கலையுணர்வும் வளர்வதாக.

## காட்சி—3

நடிகர் :—(ஊர்க்காவலர்) முத்தன், முனியன்.

**முனியன் :** முத்தா!......என்னடா இரவில் இந்த நேரத்தில் நம் அரண்மனை நடனராணி—அமுத மொழியம்மாள் வீட்டில் வீணை மீட்டிப் பாடல் பாடுகிறார்கள்? எவ்வளவு நன்றாக இருக்கிறதடா!

**முத்தன் :** ஆமாமடா! இவர்கள் ஆடும் பரதநாட்டியத்தைவிட இந்தப் பாட்டின் இசை மனத்தையே மயக்குகிறது. ஆமாம்; இந்தப் பாட்டு ஒரு புதுமாதிரியாக இருக்கிறதே; நன்றாகக் கேட்போம்; சற்று நேரம் கேட்டுத் தான் போவோம்.

**முனியன் :** முத்து, பாட்டு நன்றாகத்தா னிருக்கிறது. அந்தப் பாட்டில் இருக்கும் அர்த்தம் என்னவென்று கவனிப்போம்; நம் அரசரைப் பற்றிச் சொல்லுகிறது போல் இருக்கிறது.

**முத்தன் :** அப்படியா—"செந்தழல் அடைந்தது உன் தேகம்" என்று முதல் பாடினார்கள். உடனே "நந்தியே நம் பராபரனே!" என்று முடித்து விட்டார்கள். இதில் நமது அரசர் பெயர் வருவதனாலே ஏதோ கெடுதல் இருப்பது போலவும் தோன்றுகிறது; சரி, எதற்கும் இதனை நம் அரசர் இடம் சொல்வோம்.

**முனியன் :** ஆம்; சொல்வதுதான் நல்லது. நாளை இந்தப் பாட்டைப் பற்றி அரசர் அறிந்தால் நம்மீது குற்றம் ஏற்படும். வா, போகலாம்.

## காட்சி—4

**நடிகர் :**—நந்திவர்மன், காவலர், துறவி, அமுதமொழி.

**இடம் :**—அரண்மனை.

**காவலர் :** அரசர்க்கு அரசே! நேற்றிரவு ஊர்க் காவல் போனேம். நமது அரசாங்க நடனராணி அமுதமொழி அம்மாள் தமது வீட்டில் வீணை மீட்டித் தமிழ்ப்பாடல் பாடிக் கொண்டு இருந்தார்கள். அப்பாட்டில் தங்கள் பெயர் வந்தது. அதில் தங்களுக்கு ஏதோ கெடுதல் இருப்பது போல் எங்களுக்குத் தோன்றியது.

**நந்தி :** ஆ!..... என்ன!......அப்படியா இருந்தது? உடனே கொண்டு வாருங்கள் அந்த ஆட்டக்காரியை; என்ன மமதை அந்த அமுத மொழிக்கு; அரசனுக்குத் தீமையுடைய பாடல் என்பது தெரியாமல் இருக்குமா? ஏதோ மர்மம் இருக்கிறது; கவனிப்போம்; உடனே சென்று அழைத்து வாருங்கள்.

**காவலர் :** இதோ அழைத்து வருகின்ரேம், அரசே! (சற்று நேரத்தில் காவலர் வந்து) அமுதமொழி அம்மாள் வந்து விட்டார்கள், அரசே!

**நந்தி :** வரச்சொல்.

**அமுதமொழி :** வாழ்க, வெற்றி வேந்தே, வாழ்க!

IB
O31(6)
N60

நந்தி : என்ன அமுதா, நின் பரதநாட்டியத்தைக் கண்டு மகிழ்ந்தோம், நடனராணி ஆக்கினேம். அதன் பரிசு என்மீது பிழையான பாடல், அதுவும் நேற்றிரவு, வீணையுடன் பாடினய் அல்லவா ?

அமுதா : இல்லையரசே ! அப் பாடல் யானியற்றிய தன்று; அதில் என்ன பிழை என்பதும் நான் உணரவில்லை; அரசே ! அப்பாடலின் ஓசை இனிமையும், தமிழ்ச் சொல்லழகுமே என்னைக் கவர்ந்தன. அதனுல் வீணை மீட்டி இரவு பாடிக்கொண்டிருந்தேன். அப் பாடலை ஓர் உண்மைத்துறவி மூலம் பெற்றேன், வேந்தே !

நந்தி : அப்படியா ! அந்தத் துறவி யார் ? அவரைக் காண முடியுமா ?

அமுதா : எப்பொழுதாவது தெருவில் பாடிக் கொண்டு செல்லுவார், அரசே !

நந்தி : ஒற்றர்களே ! செல்லுங்கள்; எந்த மூலையில் இருந்தாலும் அந்த முனிவரை அழைத்து வாருங்கள்.

ஒற்றர்கள் : இதோ செல்லுகிறோம் !

86839

(ஒற்றர் செல்லுதல்)

ஓர் ஒற்றன் : அடேய், திம்மய்யா ! அதோ இந்தத் தெருவின் கோடியில் ஒரு சாமியார் வருகின்றுர். என்ன அழகிய தோற்றம் ! கொவ்வைப் பழம் போன்ற உடம்பு ! அதில் வெண்சங்கு போலத் திருநீறு பூசி மலையருவி போல் கண்ணீர் ஒழுக என்ன இனிமையாகக் கடவுளைப் பாடி

வருகின்ருர்! இவர் தான் அந்தச் சாமியார்; வா; போய் அரசரிடம் சொல்வோம்.

**ஒற்றர் :** அரசே! நமது தெருவில் ஒரு துறவி வந்து கொண்டிருக்கிருர்.

**நந்தி :** அப்படியா? அவராகத்தானிருக்க வேண்டும். இதோ நானே வந்து அழைத்து வருகின்றேன்! ( துறவியிடம் சென்று ) தெய்வ முனிவரே! வணக்கம். எமது அரண்மனைக்கு எழுந்தருள வேண்டுகின்ரும். வருக துறவியாரே! அமருங்கள். தாங்கள் யார் எனத் தெரிந்து கொள்ள விரும்புகின்ரும்.

**துறவி :** அதனுல் உமக்கு நன்மை இருக்குமானுல் கேளுங்கள்; சொல்லுகிறேன். காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு, வடமொழியையும், நடனக் கலையையும், கற்கோயில் சிற்பங்களையும் வளர்த்து வந்த பல்லவ வேந்தரின் குலத்தில் பிறந்தவன் நான். தந்திவர்மனுகிய நமது தந்தையின் பட்டத்தரசிக்குப் பிறந்த நால்வரில் மூத்தவன் நான்; அதே தந்திவர்மனுக்கு இழிகுலப் பெண்ணிடம் பிறந்தாய் நீ. ஆனுல் தந்தை இறந்ததும் நீ வயதிலும் அறிவிலும் தோள் வலியிலும் மிக்கிருந்ததால் எங்களால் உன்னைத் தோற்கடிக்க முடியவில்லை. மன முடைந்து போன நான் மிக முயன்று தமிழ் நூல் பயின்றேன். பாடல் பாடவும் வல்லவ ஞனேன். நீ அழிய வேண்டுமென்று கருதி நச்சு எழுத்துப் பாடல் கொண்ட அழகிய நூறு பாடல் கொண்ட "நந்திக் கலம்பகம்" பாடினேன். ஆனுல் என் உள்ளம் மாறிவிட்டது.

அதுதான் தண்டமிழ்ப் படித்ததின் பயன். உடனே உலக வாழ்வை வெறுத்தேன். மக்கள் போர், பொறாமை, துன்பம் இவைகளைவிட வேண்டும். அறம் செய்ய வேண்டும், அன்பு வாழ்வு பெறவேண்டும், அதற்குரிய பணி யிலேயே நான் உயிர்விட வேண்டும். அதை விட பேரின்பம் வேறு இருப்பதாகத் தெரிய வில்லை. எனவே, துறவியானேன்; தெருப் பாடகனாகப் பாடிச் செல்கிறேன் உனக்கும் தீமை எண்ணாது எந்தப் பாட்டையும் பாடிச் செல்வேன். அவ்வளவுதான் என் கதை; வருகிறேன்; அண்ணா.

நந்தி : தம்பீ...(என்று கட்டி அணைத்தல்) அந்த கலம் பகப்பாடலை, உன் கவிதையின் தமிழின்பத்தை, நுகர வேண்டும்; தம்பி! நுகரவேண்டும்; ஒரு முறை பாடு தம்பி...

துறவி : வேண்டாம் அண்ணா! அது உனக்கு துன்பம்.

நந்தி : எதுவரினும் வருக! அந்தத் தமிழ் இன்பப் பாடலைக் கேட்காது விடேன். என் உயிரையே அதற்குப் பணயமாக்கினேன்; நீங்கள் தமிழ் படித்து நாட்டை மறந்தது போல நான் தமிழ் கேட்டு உயிரை மாய்ப்பேன். அந்த அழகுத் தமிழை ஒருமுறை பாடு, தம்பி!

துறவி : அப்படியா! என்ன தமிழார்வம்; நூறு பச்சைப் பந்தல் போடவேண்டும், ஒவ்வொரு பந்தலிலும் ஒவ்வொரு பாடல் பாடுவேன். அரச கோலத்துடன் நீ அப்பாடலைக் கேட்கவேண்டும். கடைசிப் பந்தல் எரியும்போது அங்கு ஈமவிரகின்

மேல் நீ படுக்க வேண்டும். அது எரிந்து உன்னையும் சாம்பலாக்கி விடுமே, அண்ணு !

நந்தி : மகிழ்ந்தான் நந்தி! அதே போல பந்தலிட்டான். அரச கோலத்துடன் கேட்டான். நூருவது பாட்டான,

"வானுறு மதியை அடைந்த துன்வதனம்
......நந்தியே நம்தயா பரனே!"

என்ற பாட்டுடன் தமிழ்ச்சுவை உண்டு, தேக்கி, வானமிழ்து ண்ணச் சென்று விட்டான், நந்தி.

என்னே! தமிழ்ப்பற்று. ஆற்றல் வீரன்; வேற்று மொழி அரசன்; தமிழ் கேட்ட மன்னன்; தன் உயிரையே கொடுத்தான். தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட யாருமே செய்ய முடியாத தியாகத்தைச் செய்தான்.

வாழ்க அந்தத் தெய்வத் தமிழ்.

அருஞ்சொற்கள் :

உணர்வாய் - அறிவாய். பார் - பூமி. அறுசுவை - ஆறு சுவை. அர்த்தம் - பொருள். செந்தழல் – செந்நிறமான நெருப்பு. மர்மம் - இரகசியம்.

**வினுக்கள்**

1. நந்திவர்மன் முன்ஞேர் பெருமையை அமைச்சர்கள் எங்ஙனம் கூறுகின்றனர் ?
2. நந்திவர்மன் போர்த் திறமைகளை அமைச்சர்கள் எவ்வாறு கூறுகின்றனர் ?
3. துறவி, "அன்பு மணியே" என்று யாரை, ஏன் வாழ்த்துகின்ருர் ?
4. முத்தனும் முனியனும் யாது பேசிக்கொண்டனர் ?
5. துறவியை அழைத்து வரும்படி அரசன் ஏன் ஆணையிட்டான் ?
6. தமிழ் கேட்ட மன்னன் என்பது எவ்வாறு பொருந்தும் ?

# 17. காண்ட்லா

(A. அனந்தாச்சாரியார், M. A.,)

1948-ம் வருடத்திற்கு முன்பு கராச்சி இந்தியாவின் முக்கியத் துறைமுகங்களில் ஒன்ருக விளங்கியது. 1948-ல் கராச்சி பாகிஸ்தானைச் சேர்ந்துவிட்டது. ஆதலால், இந்தியாவின் மேற்குக் கடற்கரையிலிருந்த பம்பாய் துறைமுகத்தில் சரக்குகள் ஏற்றுமதி இறக்குமதி மிகுதியாயிற்று. வட இந்தியாவுக்கும் மேற்கு இந்தியாவுக்கும் சரக்குகளின் போக்குவரத்திற்கு அதிக நெருக்கடி பம்பாயில் ஏற்பட்டது. வட மேற்கு இந்தியாவிற்கெனத் தனியாக மற்ருெரு துறைமுகம் வேண்டியதாயிற்று. ஆகையால் வட, மேற்குக் கடற்கரையில் இயற்கையாகவே கட்ச் வளைகுடாவில் வசதி பெற்றிருந்த கரையில் துறைமுகம் அமைக்கக் காண்ட்லா என்ற இடம் தேர்ந்தெடுக்கப் பட்டது. இது கராச்சிக்கும் பம்பாய்க்கும் இடையே உள்ளது.

சிறு கடற்கரையாக இருந்த காண்ட்லா பத்து வருடங்களில் இந்தியாவின் பெரிய துறைமுகங்களில் ஒன்ருக விளங்கும் என்று எவரும் எண்ணியிருக்க முடியாது.

இந்தியாவின் பெரிய துறைமுகங்களில் ஆருவதாக அமைந்த இது மூன்று லட்சம் சதுர மைல்கள் கொண்ட உள்நாட்டுப் பரப்பின் ஏற்றுமதி இறக்குமதிகளைக் கையாளக்கூடியவாறு கட்டப்பட்டுள்ளது. இந்த உள்நாடு ஜம்மு, காஷ்மீர், பஞ்சாப், ஹிமாசல் பிரதேசம், டெல்லி, மேற்கு உத்திரப் பிரதேசம், ராஜஸ்தான், குஜராத் ஆகியவற்றைக் கொண்டது.

காண்ட்லா ஒரு இயற்கைத் துறைமுகம். மிகப் பெரிய கப்பல்கள் தங்குவதற்குத் துறைமுகத்தில்

நீரின் ஆழம் அதிகம் தேவை. காண்ட்லாவில் 24 அடி ஆழம் வேண்டிய பெரிய கப்பல்கள் எளிதாகத் தங்கலாம். மற்றும் 29 அடி, 31 அடி ஆழம் தேவையான கப்பல்களும் மழைக்காலத்தில் தங்கலாம்.

காண்ட்லா இக்காலத்திற்கு வேண்டிய துறைமுக வசதிகள் எல்லாம் கொண்டது. 31 அடி நீரில் ஆழம் தேவையான கப்பல்கள் தங்குவதற்கென்று சில தளங்கள் கட்டப்பட்டுள்ளன மின்சக்தியினுல் இயக்கப்படும் பாரந்தூக்கிகள் (Cranes) இருபத்தொன்று, மூட்டைகளை இறக்கவும் ஏற்றவும், இங்கு பயன்படுத்தப்படுகின்றன. இவை தவிர, மற்றும் பல எந்திரங்கள் மூட்டைகளை இறக்கவும், ஏற்றவும், வெளியே எடுத்துச் செல்லவும் உள்ளே கொண்டு வரவும் உதவுகின்றன.

காண்ட்லாவில் 600 அடி நீளமும் 29 அடி ஆழமும் தேவையான எண்ணெய்க் கப்பல்கள் தங்கி அவற்றிலுள்ள எண்ணெயை, குழாய்கள் மூலம், உள்நாட்டிலுள்ள எண்ணெய்த் தொட்டிகளுக்கு நேராகச் சேர்ப்பிக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது.

இவை தவிர, மூட்டைகளை அடுக்கி வைக்க தக்க வசதி காண்ட்லாவில் உண்டு. அடுக்கிவைக்கப் பட்டிருக்கும் முதல் மாடிகளிலிருந்து கப்பல்களின் மேல் தளங்களுக்கு மூட்டைகளை நேராக எடுத்து வைக்கக்கூடியவாறு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவை தவிர் துறைமுகத்தின் அருகிலுள்ள பரந்த வெளிஇடத்தில் நிறைய மூட்டைகளை அடுக்கி வைக்கலாம். இந்தப் பரந்தவெளி சாலைகளாலும் ரெயில்களாலும் உள்நாட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.

கப்பல்களைச் செலுத்தி உதவக்கூடிய வசதிகளில் 10,000 மைல் வியாபிக்கக்கூடிய ரேடியோ நிலையமும் முப்பது மைல் வியாபிக்யக்கூடிய ராடார் நிலையமும் முக்கியமானவை.

காண்ட்லா, எதிர்பார்த்ததைவிட, அதிக அளவு முன்னேறியுள்ளது. இதில் ஐந்து ஆண்டுகளில் எண்ணூற்று ஐந்து லட்சம் டன்கள் சரக்குகள் போக்குவரத்தை எதிர்பார்த்தனர். ஆனல், மூன்ருவது வருடத்திலேயே பதிஞெரு லட்சம் டன்கள் சரக்குகள் போக்குவரத்து நடந்தேறி யுள்ளது. அத்துடன் இன்னும் அதிகப் போக்கு வரத்துக்கு இடமும் உள்ளது. இதன் வழியாகப் போகும் பொருள்களில் முக்கியமானவை இரும்புத் தாது, உணவுத்தானியங்கள், பருத்தி, உப்பு, கோணி, கந்தகம், எந்திரங்கள் முதலியன.

கடந்த சில ஆண்டுகளாக இந்தத் துறை முகத்தை அடுத்து காந்திதாம் என்ற நகரம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. இதை அமைக்க அமெரிக் காவிலிருந்து நகர அமைப்பில் தேர்ந்தவர்கள் உதவி யுள்ளார்கள். இந் நகரில் மக்களின் தொகை 75,000 அல்லது 1,50,000 வரை வளர்ந்தாலும் நகர் போது மானதாக அமைக்கப்பட்டுள்ளது. இப்பொழுது இந் நகரின் ஜனத்தொகை 35,000; முன்பு பாலைவனமாக இருந்த இந்த இடம் இப்பொழுது ஒரு பெரிய நகரமாக விளங்குகிறது. இதில் . மக்களுக்குத் தேவையான எல்லா வசதிகளுமுண்டு. இன்னும் இவ்விடத்தில் தொழில்கள் வளர்ச்சிக்கான ஏற்பாடு கள் செய்யப்பட்டு வருகின்றன. இங்கு வெளிநாட்டுப் பொருள்களைத் தருவித்து, அவைகளைக்கொண்டு

புதிய உற்பத்திப் பொருள்கள் செய்யத் துறைமுக வரி விலக்கப்பட்டுள்ளது. இதனல் இவ்விடத்தில் பல தொழில்கள் முன்னேற்றம் அடையக்கூடும்.

## அருஞ்சொற்கள்

பாரந்தூக்கி - கனமான பொருள்களை இடம்விட்டு இடம் பெயர்த்து வைக்கும் எந்திரங்கள். துறைமுகம் - கப்பல்கள் தங்குமிடம். நெருக்கடி - கஷ்டம். வியாபிக்கக் கூடிய - பரந்து செல்லக் கூடிய.

## கேள்விகள்

1. காண்ட்லா துறைமுகம் எங்கு அமைந்துள்ளது?
2. அது ஏற்படக் காரணம் யாது?
3. அது எந்தப் பிரதேசங்களுக்குப் பயன்படுகிறது?
4. அதன் மூலம் ஏற்றுமதியாகும் பொருள்கள் யாவை?
5. சரக்குகளை ஏற்றவும் இறக்கவும் அங்கு என்ன வசதிகள் செய்யப்பட்டுள்ளன?
6. அதற்குச் சமீபத்தில் அமைக்கப்பட்டுள்ள நகரம் யாது?
7. அங்கு ஏன் துறைமுக வரி விதிக்கப்படுவதில்லை?
8. துறைமுகத்தில் தங்கும் கப்பல்களிலிருந்து எண்ணெய் எவ்வாறு உள்நாட்டிலுள்ள எண்ணெய்த் தொட்டிகளுக்குக் கொண்டுபோகப் படுகிறது?

# 18. ஆர்க்கிமெடிஸ்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆர்க்கி மெடிஸ் என்னும் பெரியார் சிராகஸ் என்ற நகரில் வாழ்ந்துவந்தார். அவர் கல்வி கேள்விகளிலும் கூர்மையான அறிவிலும் சிறந்தவர். அவர் காலத்தை வீணாகக் கழிப்பதில்லை. எப்பொழுதும் சிறந்த நூல்களைப் படித்துக் கொண்டிருப்பார். நூல் பலவற்றை எழுதுவார். பலவிதமான பொருள்களைப் பற்றிப் பல நூல்கள் படித்திருந்தாலும் கணிதத்தில் அவருக்கு ஆசை மிகுதியாக உண்டு. இளமையிலேயே



ஆர்க்கிமிடிஸ்

கணிதத்தில் விருப்பம் உடையவர் அவர் என்பதை அவருடைய பெற்றோரும் நண்பர்களும் அறிந்திருந்தனர். வயதுவந்த பிறகு கணித நூல்களை மேலும் பயின்று தன் கணித அறிவை உலகிற்குப் பயன் படும்படி செய்ய அவர் அவாக்கொண்டார்.

அக்காலத்தில் கடினமான வேலைகளைச் செய்ய மனிதனுக்கு எந்திர உதவி கிடையாது. கனமான மூட்டைகளை வேலையாட்களே தூக்கிச் செல்வார்கள். கனமான மூட்டைகளையும் பொருள்களையும் மாட்டு வண்டி குதிரைவண்டிகளிலேயே ஏற்றிச் செல்வார்கள். ஆர்க்கிமெடிஸ் இவற்றைக் கூர்ந்து

கவனிப்பார். கனமான மூட்டைகளை எளிதாகத் தூக்கிச் செல்லும் வழியை இவர் கண்டறிந்தார்.

சிராகஸ்ஸை ஆண்டுவந்த மன்னர் பொற்கொல்லன் ஒருவனை அழைத்துத் தனக்குப் புதிதாக ஒரு பொன்முடி செய்து கொடுக்கும்படி கட்டளை இட்டார். அந்த முடி மிகவும் அழகாகவும் உயர்ந்ததாகவும் இருக்கவேண்டும் என்றும் கூறினார். அதற்காக அரசன் பொற்கொல்லனிடம் இருபது அவுன்ஸ் பொன்னையும் கொடுத்தார். ஆடகம், சாம்புநதம், கிளிச்சிறை என்று பொன்னில் பலவகையுண்டு. இவற்றில் ஆடகம் மிகவும் உயர்ந்த பொன் என்று பெரியோர் கூறுவர். அரசர் கொடுத்த பொன்னைப் பொற்கொல்லன் தன் வீட்டிற்கு எடுத்துச் சென்றான். அந்தப் பொன் மிகவும் உயர்ந்ததாக இருந்ததனால் அதில் ஒரு பகுதியைத் தான் எடுத்துக்கொண்டு அதற்குப் பதிலாகப் பித்தளையைப் பொன்னுடன் சேர்த்து ஒரு முடியைச் செய்து அரசனிடம் கொடுத்தான். அரசர் முடியைப் பார்த்தார். வெகு நேர்த்தியாக இருந்ததனால் மகிழ்ச்சியடைந்தார். துலாக்கோல் கொண்டுவந்து நிறுத்துப் பார்த்தார். அது இருபது அவுன்ஸ் இருந்தது. அரசனுக்குத் திருப்தி உண்டாயிற்று.

பொற்கொல்லன் சென்ற பிறகு, அமைச்சர்களும் மற்றும் சில பெரியோர்களும் அரசனிடம் வந்தார்கள். பொன்முடியைப் பார்த்தார்கள். "அரசே! பொற்கொல்லன் தங்களை வஞ்சித்துவிட்டான். இந்த முடியில் பொன்னுக்குப் பதிலாகப் பித்தளையைச் சேர்த்துவிட்டான்," என்று கூறினர். பொற்கொல்லன் சூழ்ச்சியைக் கண்டறிய என்ன செய்வது என அரசர் ஆராய்ந்தார். ஒன்றும் விளங்கவில்லை.

ஒருநாள் ஆர்க்கிமெடிஸ் தன் வீட்டில் ஒரு தொட்டியில் தண்ணீரை நிரப்பிக் குளிக்கச் சென்ருர். தொட்டியில் தண்ணீர் முழுதும் நிரம்பி இருந்தது. அவர் குளிப்பதற்குத் தொட்டியில் இறங்கியவுடன் சிறிது தண்ணீர் வழிந்து கீழே விழுந்தது. இங்ஙனம் வழிந்ததனையே அரசருக் குரிய விடையாக ஆர்க்கிமெடிஸ் கண்டறிந்தார். ஒரே அளவுள்ள பொன்னையும் பித்தளையையும் தண்ணீரில் போட்டால், பொன்னைப் போட்டபோது வழிந்த தண்ணீரின் அளவைவிடப் பித்தளையைப் போட்ட போது வ்ழிந்த தண்ணீரின் அளவு மிகுதியாக இருப்பதை ஆர்க்கிமெடீஸ் கண்டறிந்தார். ஒரு அவுன்ஸ் பொன் எடுத்துக்கொள்ளும் இடத்தை விட ஒரு அவுன்ஸ் பித்தளை எடுத்துக்கொள்ளும் இடம் மிகுதியாக இருந்தது.

இந்தக் கருத்தை ஆர்க்கிமெடிஸ் தொட்டியில் குளித்துக் கொண்டிருக்கும் போது கண்டறிந்தார். புதிதாய்க் கண்டறிந்த இக்கருத்தை நினைந்து நினைந்து மகிழ்ந்தார். குளிக்கும் அறையிலிருந்து வெளியே ஓடிவந்தார். "நான் கண்டறிந்தேன், நான் கண்டறிந்தேன்," என்று உரக்கக் கத்திக்கொண்டே தெருவில் ஓடினர். அந்நகரத்து மாந்தர் அனைவரும் ஆர்க்கிமெடிசுக்குப் பயித்தியம் பிடித்து விட்டதோ என்று நினைத்தார்கள். ஆனல் அவர்கள் நினைத்தபடி அவருக்குப் பயித்தியம் பிடிக்கவில்லை. அவர்கள் அனைவரைக் காட்டிலும் அவர் மிக்க அறிவாளியே.

ஆர்க்கிமெடிஸ் நேரே அரண்மனையை அடைந் தார். அரசனைக்கண்டு முடி பொன்னலேயே செய்யப்பெற்றதா பித்தளை கலந்திருக்கிறதா

வென்று தான் கண்டறிய முடியும் என்று கூறினர். அரசன் மிகுந்த வியப்போடு, "எவ்விதம் கண்டறியக் கூடும்? அதை என் எதிரிலேயே செய்து காட்டுக," என்ருர். ஆர்க்கிமெடிஸ் இருபது அவுன்ஸ் உடைய தூயபொன்னுல் செய்யப்பெற்ற வேறு முடி ஒன்றைக் கொண்டுவரச்செய்து அதனை நீர் நிறைந்த தொட்டியில் இட்டார். சிறிதளவு தண்ணீர் வழிந்து கீழே விழுந்தது. அதனைக் கீழே விழுந்துவிடாமல் ஒரு பாத்திரத்தில் பிடித்து வைத்துக்கொண்டார். பொற்கொல்லன் செய்து கொடுத்த மற்ருெரு முடியை நீர் நிறைந்த தொட்டியில் இட்டார். தண்ணீர் தொட்டியிலிருந்து வழிந்து கீழே விழுந்தது. அதனையும் வேறு ஒரு பாத்திரத்தில் பிடித்து வைத்துக் கொண்டார். அவ்விரண்டு பாத்திரங்களில் உள்ள தண்ணீரை அளந்து பார்த்த போது தூயபொன்முடியினுல் வழிந்த தண்ணீர் அளவில் குறைந்திருந்தது. பித்தளை கலந்த முடியினுல் வழிந்த தண்ணீர் அளவில் மிகுதியாக இருந்தது; இந்த ஆராய்ச்சியினுல் பொற்கொல்லன் செய்துகொடுத்த முடியில் பித்தளை கலந்திருக்கிற தென்று அரசனுக்கு எடுத்துக் காட்டினுர். அரசருக்கு உண்டான மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. சிறந்த பரிசுகள் பலவற்றை ஆர்க்கிமெடிஸுக்கு அரசர் நல்கினுர். பொற்கொல்லனுக்குச் சிறை தண்டனை விதித்தார்.

சிராகஸ் நாட்டில் போர்மூண்டது. ரோமானியர் அந்த நாட்டின்மீது படையெடுத்தனர். ரோமானியர் அந்த நகரை அழிக்கத் தொடங்கினர். கண்ணில் அகப்பட்டவர் அனைவரையும் கொன்று குவித்தனர். அந்தச் சேனைத்தலைவன் தன் படையில் இருந்த

போர்வீரர்களுக்கு, ஆர்க்கிமெடிஸ் அகப்பட்டால் அவரைக் கொல்லக்கூடாது என்று கட்டளை இட்டிருந்தான். ஆர்க்கிமெடிஸ் யார் என்று தெரியாத போர்வீரர் சிலர் அவர் வீட்டினுள் நுழைந்தனர். அவர் அப்பொழுது கணிதநூலை ஊன்றிப் படித்துக் கொண்டிருந்தார். ஆர்கிமெடிஸை அழைத்தார்கள். அவர் கணிதத்தை ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டிருந்தமையால் அவர்கள் கூப்பிட்டதை அவர் கவனிக்கவில்லை. போர் வீரர்களுக்கு கோபம் பொங்கியது. அவரைக் கொன்றுவிட்டனர்.

ஆர்க்கிமெடிஸ் இறந்து பல நூற்றாண்டுகள் ஆயின. ஆயினும், அவர் கண்டுபிடித்த விதி இன்றும் உலகத்திற்கு மிக பயன்பட்டு வருகிறது.

# செய்யுட் பகுதி

## கடவுள் வாழ்த்து

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி ஊனாகி
உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே. 1

—மாணிக்க வாசகர்.

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே!
ஆயர்தம் கொழுந்தே!" என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே. 2

—தொண்டரடிப் பொடி ஆழ்வார்.

## கலைமகள் வாழ்த்து

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாள் என்னுள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர். 3

—கம்பர்.

## ஏசு நாமம்

நன்னெறி புகுத்திடும் நவையின் நீக்கிடும்
இன்னலை அகற்றிடும் இகல்செ குத்திடும்
உன்னதத் துய்த்திடும் ஒருங்கு காத்திடும்
எந்நலத் தையும்தரும் ஏசுநாமமே. 4

—H. H. கிருஷ்ணப்பிள்ளை.

## தமிழ் வாழ்த்து

இன்னிசை யணிந்த பொன்னிளஞ் செல்வி
இனிமையே தன்பெயரானாள்
மன்னுல கெல்லாம் வணங்கிடத் தக்க
பொதுமறை அருளிய வாணி

பன்மொழிக் குயர்ந்த தொன்மொழி யரசி
பரமனின் வரம்பெற்ற புதல்வி
தன்னிக ரற்ற தமிழெனும் அமுதத்
தாய்மல ரடிபணிந் துய்வாம். 5

—சுத்தானந்த பாரதியார்.

## குறிப்புரை

1. இப்பாடலை இயற்றியவர் மாணிக்கவாசகர். இவர் திருவாசகம் என்னும் புனிதமான நூலை அருளிச் செய்துள்ளார். பாண்டிய நாட்டில் திருவாதவூரில் பிறந்தவர். பாண்டியனுக்கு அமைச்சராய் இருந்தவர்.

வளி - காற்று. உண்மையுமாய் - உருவம் உள்ளவராய் இன்மையுமாய் - உருவம் இல்லாதவருமாய்.

2. இப்பாடலை இயற்றியவர் தொண்டரடிப் பொடியாழ்வார். இவர் திருமண்டங்குடியில் தோன்றியவர். இயற்பெயர் விப்பிர நாராயணர். இவர் பாடல்கள் திவ்யப் பிரபந்தத்தில் உள்ளன.

பவளவாய் - சிவந்த வாய். அச்சுதன் - அழிவில்லாதவன் அமரர் - தேவர், ஆயர் - இடையர்.

3. இப்பாடலை இயற்றியவர் கம்பர். இது சரசுவதி யந்தாதி என்னும் நூலில் உள்ளது. கம்பர் சோழ நாட்டில் திருவழுந்தூரில் பிறந்தவர். கவிச் சக்கரவர்த்தி என்று போற்றப் பட்டவர். சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்றவர்.

ஆய - ஆகிய, ஏய - பொருத்தமாக, இருப்பள் - இங்கு, இடர் - துன்பம்.

4. இப்பாடலை இயற்றியவர் H. H. கிருஷ்ணப் பிள்ளை. வைணவராய் இருந்து கிறித்தவரானவர். பாளையங் கோட்டையில் பிறந்தவர். இரட்சணிய யாத்ரிகம் என்னும் நூலை இயற்றியவர்.

நெறி - வழி, நவை - குற்றம், இன்னல் - துன்பம், இகல் - பகைமை, உய்த்திடும் - செலுத்தும்.

5. இப்பாடலை இயற்றியவர் சுத்தானந்த பாரதியார். இளமையிலேயே துறவு பூண்டவர். மொழிப் பணியும், சமயப் பணியும் செய்துவருபவர்.

பொது மறை - திருக்குறள், நிகர் - ஒப்பு, உய்வாம் - கடைத் தேறுவோம்.

## நீதிப் பகுதி

### நீதிநெறிவிளக்கம்

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை. 1

எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந் [தும்
துய்த்துணர் வில்லெனி னில்லாகும்—உய்த்துணர்ந்
சொல்வன்மை யின்றெனி னென்னு மஃதுண்டேற்
பொன் மலர் நாற்ற முடைத்து. 2

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியுங் கல்லார்
அவையஞ்சா வாகுலச் சொல்லும்—நவையஞ்சி
ஈத்துண்ணார் செல்வமு நல்கூர்ந்தா ரின்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று. 3

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும் [செய்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மரவன்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு. 4

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோ ரணிகலம் வேண்டாவாம்—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகுசெய் வார். 5

## குறிப்பு :—

இந்நூலை இயற்றியவர் குமர குருபர சுவாமிகள். ஸ்ரீ வைகுண்டம் என்னும் ஊரில் சண்முக சிகாமணிக் கவிராயருக்கும் சிவகாமி அம்மையாருக்கும் மகனாகத் தோன்றியவர். திருச்செந்தூர் முருகன் அருள் பெற்றவர். காலம் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்.

1. நல்லிசை - நல்ல புகழ், ஊங்கு - மேலான.

2. இடமறிந்து - சமயமறிந்து,

3. அவை - கற்றோர் சபை, ஆகுலச் சொல் - ஆரவாரச் சொல், நல்கூர்ந்தார் - வறுமை அடைந்தவர்.

4. மலரவன் - பிரமன், உடம்பு - செய்யுளாகிய உடம்பு.

5. அணிகலம் - ஆபரணம்.

# திருக்குறள்

## கடவுள் வாழ்த்து

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅர் எனின். 1

## அன்புடைமை

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு 2

## விருந்தோம்பல்

விருந்து புறத்த தாத்தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. 3

## இனியவை கூறல்

அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொல ஞகப் பெறின். 4

## செய்ந் நன்றி அறிதல்

காலத்திஞற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. 5

## அடக்க முடைமை

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 6

## ஒழுக்க முடைமை

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். 7

### பொறையுடைமை

ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். 8

### அழுக்காறாமை

ஒழுக்காறுக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு. 9

### புறங்கூறாமை

ஏதிலார் குற்றம் போல்தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு. 10

### ஈகை

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின். 11

### புகழ்

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல். 12

### அருளுடைமை

அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்
பூரியார் கண்ணும் உள. [செல்வம் 13

### கூடா ஒழுக்கம்

வானுயர் தோற்றம் எவன் செய்யும் தன்நெஞ்சம்
தான்அறி குற்றப் படின். 14

### கள்ளாமை

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன் பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல். 15

### இன்னு செய்யாமை

சிறப்பு ஈனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னு
செய்யாமை மாசற்றுர் கோள். 16

### கல்வி

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. 17

### கல்லாமை

கல்லா ஒருவன் தகைமை தலைபெய்து
சொல்லாடச் சோர்வு படும். 18

### கேள்வி

செல்வத்துள் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை. 19

### அறிவுடைமை

அஞ்சுவ தஞ்சாமை பேதமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில் 20

### குறிப்பு :—

திருக்குறளை எழுதியவர் திருவள்ளுவர், கடைச் சங்க காலத்தில் இருந்தவர். பெற்றேர் ஆதியும் பகவனும் என்பர். குறளுக்குப் பொய்யா மொழி என்ற வேறு பெயரும் உண்டு. 1330 குறட்பாக்களைக் கொண்டது.

1. வாலறிவன் - தூய்மையான அறிவினை உடையவன்.
2. தமக்குரியர் - தமக்கே பயன்படுத்துவர்.
3. சாவா மருந்து - அமிர்தம்.
4. அகனமர்ந்து - மனம் விரும்பி.

5. ஞாலம் - பூமி.
6. சோ - துன்பம்.
7. ஒட்ட - பொருத்தமாக.
8. ஒறுத்தார்க்கு - துன்பம் செய்தவர்களுக்கு.
9. அழுக்காறு - பொறாமை.
10. ஏதிலார் - அயலார்.
11. ஆற்றல் - வன்மை.
12. ஒன்று - உறுதியாக.
13. பூரியா - அற்பர்.
14. எவன் - என்ன?
15. இன்னா - துன்பம்.
16. எண் - கணிதம்.
17. தகைமை - பெருமை.
18. தலை - முதல்.
19. பேதமை - அறியாமை.

## நான்மணிக் கடிகை

### மக்கள் கடமை

எள்ளற்க என்றும் எளியரென்(று) என்பெறினும்
கொள்ளற்க கொள்ளார்கை மேலதா—உள்சுடினும்
சீறற்க சிற்றில் பிறந்தாரைக் கூறற்க
கூறல் லவற்றை விரைந்து. 1

### பாழ் செய்வன

மனைக்குப்பாழ் வாணுதல் இன்மை; தான் செல்லும்
திசைக்குப்பாழ் நட்டோரை இன்மை; இருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை இன்மை; தனக்குப்
கற்றறி வில்லா உடம்பு. [பாழ் 2

### அழிவைச் செய்வன

மொய்சிதைக்கும் ஒற்றுமையின்மை, ஒருவனைப் [பெய்த
பொய்சிதைக்கும் பொன்போலும் மேனியைப்— [கும்
கலஞ்சிதைக்கும் பாலின் சுவையைக் குலஞ்சிதைக்
கூடார்கண் கூடி விடின். 3

### இல்வாழ்க்கையின் சிறப்பு

மழையின்றி மாநிலத்தார்க் (கு) இல்லை ; மழையும்
தவமிலார் இல்வழி இல்லை ; தவமும்
அரசிலார் இல்வழி இல்லை ; அரசனும்
இல்வாழ்வான் இல்வழி இல். 4

### தமக்கென ஒரூர் இல்லாதவர்

நல்லார்க்குத் தம்மூரென்(று) ஊரில்லை ; நன்னெறிச்
செல்வார்க்குந் தம்மூரென்(று) ஊரில்லை;—அல்லாக்
கடைகட்குந் தம்மூரென்(று) ஊரில்லை ; தங்கைத்(து)
உடையார்க்கும் எவ்வூரும் ஊர். 5

குறிப்பு :—

**நான்மணிக் கடிகை :—** நான்கு இரத்தினத் துண்டுகள். ஒவ்வொரு செய்யுளிலும் நான்கு இரத்தினங்கள் போன்ற நீதிகள் கூறப்படுதலின் இந்நூலுக்கு இப்பெயர் இடப்பட்டது. பதினெண்கீழ்க் கணக்கில் ஒன்று. 104 வெண்பாக்களால் ஆகியது.

**விளம்பி நாகனார் :—** இவர் கடைச் சங்க காலப் புலவர், விளம்பி என்ற ஊரினராகக் கருதப்படுகின்றனர். காலம் : கி. பி. 200-க்கு முற்பட்ட தென்பர்.

### அருஞ் சொற்கள்:—

**1.** எள்ளற்க - இகழாதிருக்க, கொள்ளார் - கொள்ளத் தகாதவர், உள்சுடினும் - உள்ளத்தை வருத்தினாலும், சீறற்க- கோபங் கொள்ளாதிருக்க, சிற்றில் பிறந்தார் - எளிய குடியில் பிறந்தவர்.

2. வாணுதல் (வாள் + நுதல்) - ஒளி பொருந்திய நெற்றியையுடைய பெண், மனையாள்; நட்டோர் - நண்பர், மூத்தோர் - கல்வியறிவில் சிறந்தோர்.

**3.** மொய் - வலிமை, கூடார் - சேரத்தகாதவர்.

**4.** இல்வழி - இல்லாத இடத்தில், அரசன் - செங்கோ [லரசன்.

**5.** கடைகள் - கீழ் மக்கள், தம்கைத்து - தமது கையில். உடையவர்க்கும் - பொருளுடையார்க்கும்.

## குசேலோ பாக்கியானம்

"பழியில்உன் குலத்தோர் செய்யப்
படும் தொழில் நன்கி யற்றி
இழிவற உண்டு டுத்த
லின்றி,மிக் கெண்ணங் கொண்டு
வழிநடந் திளைத்தாய்; மெய்யும்
வாடினாய் அந்தோ! வானில்
கழிமதி வருக வென்றுள்
கசிந்தழும் மழவு போன்றாய். 1

ஆதலின் வந்த ஆற்றை
அறிந்துநின் ஊர்க்குப் போதல்
மேதகு கருமம் என்றம்
மடமையோர் விளம்ப லோடும்.

தீதறு குணத்தால் மாண்ட
செழுந்தவக் குசேல மேலோன்
ஏதம்மிக் குறத்தன் னுள்ளத்
திவையிவை எண்ணு வானால். 2

"கந்தையில் பொதிந்த நந்தம்
கையுறை கண்டா ராகில்,
நந்தலில் இகழ்ச்சி பொங்க
நகைப்பரே" என உன் சாம்பி,
அந்தில்நின் றுயங்குங் கால்,அவ்
அடர்மட மையரை நோக்கிச்
சுந்தர அறிவின் மாண்ட
துவாரபா லகர்சொல் வாரால். 3

"யாரென நினைந்தீர் இந்த
இருந்தவத் தலைவன் தன்னை?
சேருறு பொய்ம்மை இல்லன்;
செறிந்தநோன் புழந்த நல்லன்;
வாருறு மறைகன் வல்லன்;
மற்றெங்கும் செல்வா னல்லன்;
ஏருறும் இனிய சொல்லன்;
என்னவே யாம்உட் கோடும்" 4

"தாயது வருகை கேட்ட
தனியிளங் குழவி போன்று
நேயமிக் குடைய னாகி,
நெஞ்சினுள் உவகை பூப்ப,
'போயழைத் திடுமின் இன்னே
போயழைத் திடுமின் இன்னே
போயழைத் திடுமின் இன்னே'
என விரை பொருளில் சொற்றான்" 5

'எண் அனைக் கிலங்கு மார்பம்
ஈந்தருள் பிரானை, நீல
வண்ணனைத் திகிரி சங்கம்
வலம்இடம் உறக்கொண் டானை'
மண்அனைத் தும்பு ரக்கும்
வாசுதே வனைம ணக்கும்
கண்ணனைத் துளவத் தாமக்
கண்ணனைக் கண்ணிற் கண்டான். 6

'நின்னுடைய மனைக்கிழத்தி நிரம்புபெரு சீர்மையளே
மன்னுடைய சொற்காத்துச் சோர்விலா மாண்பினளே,
தன்னுடைய உயிராநின் றனைப்பேணும் தன்மையளே;
உன்னுடைய வருவாய்க்குத் தக்கசெல வுஞற்றுவளே?', 7

"பந்தனை அகன்ற மேலோய்!
பற்பல நாட்குப் பின்பு
வந்தனை; எனக்கென் கொண்டு
வந்தனை? அதனை இன்னே
தந்தனை யாயின் நன்று;
தருசுவைப் பக்க ணத்தென்
சிந்தனை நின்ற" தென்றான்
தெரிவரும் வஞ்சக் கள்வன். 8

"இனியசிற் றுணவே தேனும்
இன்றிநீ வருவாய் கொல்லோ?
இனியநின் உள்ளம் இன்றே
எண்ணியான் அறிதல் வேண்டும்?
இனியநின் மனைவி வாளா
ஏகிவா என்ப ளோ?மற்
றினியஎற் கன்றி யார்க்குக்
கொண்டுவந் திருக்கின் றாயே?" 9

"செறிதரு சுவைத்தீ(து) எனறும்
தேவர்க்கும் அரிய தாகும்.
அறிதரு விருப்பின் இல்லின்
அமைத்ததே; பழைத்தும் அன்று
குறிதரு விலைப்பால் சென்று
கோடல்இவ் வளத்த தோ?" என்(று)
உறிஅளை வாரி உண்டோன்
ஒருபிடி அவல்தின் றுனே. 10

இரசிதக் குவையும் காஞ்சனக் குவையும்
இலகுறு செம்மணிக் குவையும்,
தரளவெண் குவையும், வச்சிரக் குவையும்
சாற்றுற மரகதக் குவையும்,
பரவிய கிரணச் செந்துகர்க் குவையும்,
பாயமே தகப்பெருங் குவையும்,
அரதன வகையில் மற்றுள குவையும்
அறைதொறும் கிடப்பனகண்டான். 11

குறிப்பு:—

நூலைப்பற்றி: குசேலோ பாக்கியானம். குசேலரைப் பற்றிய கிளைக்கதை. [உபாக்கியானம் - கிளைக்கதை]. இது பாகவதத்திலுள்ளது. தமிழில் மொழிபெயர்க்கப் பட்டது கன்னட பாஷையிலுள்ள குசேலோ பாக்கியானமே யாகும். இந் நூலில் எளிய இனிய பாடல்கள் பல உள்ளன.

## அருஞ் சொற் பொருள்.

1. மிக்கு எண்ணம் - (கண்ணனைக் காண வேண்டும் என்ற) உயர்ந்த எண்ணம். வானில் கழிமதி - விண்ணில் செல்லும் சந்திரன், மழவு - குழந்தை.

2. மேதகு - மேன்மை பொருந்திய, ஆறு - வழி. மாண்ட - மாட்சிமையுற்ற, ஏதம் மிக்கு - துன்பம் மிகுந்து,

3. கையுறை - காணிக்கை, நந்தலில் - குறைவில்லாத உள்ளத்தில் உணர்வு அழிந்து, அந்தில் - அவ்விடத்தில், உயங்குங்கால் - வருந்தும்போது, சுந்தரம் - அழகு.

4. நோன்பு உழந்த நல்லன் - தவத்தை வருந்திச் செய்த நல்லவன், உட்கோடும் - எண்ணுவோம், வார்உறு - பெருமை மிக்க, ஏர்உறு - அழகு பொருந்திய. இரும் தவம் - மிக்க தவம்.

5. சொற்றுன் - கூறினுன்.

6. எண் - மதிக்கத் தக்க, அனேக்கு - அன்னேயாகிய திருமகளுக்கு, திகிரி – சக்கரம், துளவம் - துளசி, கண்ணனேத் - துளவத் தாமக் கண்ணனே - தேன் பொருந்திய மொட்டுக்களேயுடைய துளசி மாலேயணிந்த கண்ணனே, தாமம் - மாலே, புரக்கும் - காப்பாற்றும்.

7. உஞற்றுவள் - செய்வாள்.

8. பந்தனே - உலக பாசம், பக்கணம் - பட்சணம்.

9. எற்கு - எனக்கு, எற்கு + அன்றி = எற்கன்றி - எனக்கு அல்லாமல், வாளா – சும்மா.

10. இரசிதம் – வெள்ளி, குவை - குவியல், காஞ்சனம் - பொன். செம்மணி - மாணிக்கம், தரளம் – முத்து, வச்சிரம் - வயிரம், மரகதம் - பச்சை, செந்துகர் - பவளம், மேதகம் - கோமேதகம், அரதனம் - இரத்தினம்.

## ஆசாரக் கோவை

நன்றியறிதல் பொறையுடைமை இன்சொல்லோ(டு)
இன்னுத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோ(டு)
ஒப்புர வாற்ற வறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் இவையெட்டும்
சொல்லிய ஆசார வித்து. 1

பழியார் இழியார் பலருள் ளுறங்கார்
இசையாத நேர்ந்து கரவார் இசைவின்றி
இல்லாரை எள்ளி இகழ்ந்துரையார் தள்ளியும்
தாங்கரும் கேள்வி யவர். 2

படிறும் பயனிலவும் பட்டி யுரையும்
வசையும் புறனும் உரையாரே யென்றும்
அசையாத உள்ளத் தவர். 3

நின்றக்கால் நிற்க அடக்கத்தால் என்றும்
இருந்தக்கால் ஏவாமை ஏகார் பெருந்தக்கார்
சொல்லிற் செவிகொடுத்துக் கேட்டீக மீட்டும்
வினவற்க சொல்லொழிந்தக் கால். 4

எய்தாத வேண்டார் இரங்கார் இகழ்ந்ததற்குக்
கைவாரா வந்த இடுக்கண் மனமழுங்கார்
மெய்யாய காட்சி யவர். 5

## குறிப்பு :—

இது கடைச் சங்க நூல்களில் ஒன்று. இதனை இயற்றியவர் பெருவாயின் முள்ளியார். சைவ சமயத்தைச் சேர்ந்தவர். வண்கயத்தூர் என்னும் ஊரினர்.

1. பொறையுடைமை - பொறுமையுடைமை, இன்னாத - துன்பத்தை, ஒப்புரவு - உதவி.

2. எள்ளி - இகழ்ந்து, கரவார் - மறைக்க மாட்டார்.

3. படிறும் - வஞ்சனை, வசை – பழி.

4. இருந்தக்கால் - உட்கார்ந்தால், ஏவாமை - கட்டளை [இடாவிட்டால்.

5. எய்தாத - அடைய முடியாதவற்றை.

# பல்சுவைப் பகுதி

## மழைக்குறி

ஆற்றுவெள்ளம் நாளைவரத் தோற்றுதே குறி—மலை
யாளமின்னல் ஈழமின்னல் சூழமின்னுதே ;
[கேணி
நேற்றுமின்றும் கொம்புசுற்றிக் காற்றடிக்குதே—
நீர்ப்படு சொறித்தவளை கூப்பிடுகுதே ;
சேற்று நண்டு சேற்றில்வளை ஏற்றடைக்குதே-மழை
தேடியொரு கோடிவானம் பாடியாடுதே ; [சேரிப்
போற்றுதிரு மாலழகர்க் கேற்றமாம் பண்ணைச்—
புள்ளிப்பள்ளர் ஆடிப்பாடித் துள்ளிக்கொள்வோமே.

—முக்கூடற் பள்ளு.

## பண்ணைத் தலைவன்

விக்கலிற் குழறும் நாக்கும், கொக்கிறகு போற்பத்து
வெள்ளை மயிராய் நரைத்துத் துள்ளு மீசையும்
குக்கல்போல் குரைத்திருமல் கக்கியவா யும்சாய்த்த
கொண்டைக் கட்டும் உறுமாலை மண்டைக்
[கட்டுமாய்க்
கைக்குள்ளே புகை சுருட்டும் சக்கிமுக்கியும் பஞ்சும்
கல்லும், வெள்ளைப் பல்லும் குந்தந் தள்ளுங்
கண்ணுமாய்
முக்கண்ணர் சிவசயிலற் பத்தெலாம் பயிரேத்த
மொண்ணைக் காலு மாகவந்தார் பண்ணைக்காரனார்.

## அறுவடை செய்தல்

திருநாள்கதிர் கொண்டார் ; அறுப்
பதுசீக்கிர மென்றார் ;
சிலர்கூறுகள் தெரிந்தார் ; வயல்
சுழியாதுடனரிந்தார் ;

விரிவாய்ப்பரப் பரிகாய்ந்தபின்,
வெகுவாய்ப் புரிமுறுக்கி,
விளைசாலிகட் டிறுக்கிக்கள
மேற்போர்வை தரித்து,
பெரிதாய்ப்பல பிணையல்பிடித்
தடிப்பார் : மறுகளமும்
பேர்ப்பார் ; வைக்கோல் தவிரப்பொலி
குவிப்பார் ; சுள கெடுப்பார்;
பரிவாய்ப்பொலி தூற்றிப்பத
ரோடப் பதர்மாற்றிப்
பக்தியால்பிள்ளை யார்தமைவைத்
தப்பாற்பள்ள னெழுந்தான்.

## குறிப்பு

### பல் சுவை

### 1. தொழிற் பாடல்.

1. குக்கல் - நாய், சக்கி முக்கி - நெருப்பு உண்டாக்க உதவும் கற்கள்.

2. கூறு - பகுதி, அரி - அறுத்த கதிர், புரி - வைக்கோற்புரி, சாலி - நெல், களம் - நெற்களம், பிணையல் - சேர்க்கை, பேர்ப்பார் - மாற்றுவார், சுளகு - முறம், பொலி - நெல்.

## மலைவளம்

[இந்தச் செய்யுள் குற்றாலக் குறவஞ்சி என்னும் நூலில் உள்ளது. இந்த நூலின் ஆசிரியர் திரிகூட ராசப்பக் கவிராயர். மதம்: சைவம்; காலம் 17-ஆம் நூற்றுண்டு]

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழிஎறிந்து வானவரை அழைப்பர்
கவனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பர்.

தேனருவி திசை எழும்பி வானின்வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனல்இளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூடமலே எங்கள் மலேயே.

—திரிகூடராசப்பக்கவிராயர்.

## குறிப்புரை

மந்தி - பெண் குரங்கு, வான்கவி - பெரிய குரங்கு, விழி - பார்வை, எறிந்து - வீசி, சித்தர் - சித்திகள் விளே விப்பவர், காயம் - உடம்பு, கதிரோன் - சூரியன், பரி - குதிரை, தேர்க் கால் - சக்கரம், வழுகும் - வழுக்கும், கூனல் - வளேந்த, வேணியலங்காரர் - அந்தத் தலத்துச் சிவ பெருமான்.

## பறவைகள் கண்ணியில் விழுதல்

பரந்த சிறைப்பெருங் கம்புள் வருகுது
பச்சைப் புறுவிலொரு லெச்சம் வருகுது
கருங்குயில் வருகுது நெருங்கிடும் கவுதாரி
கள்ளத் தனங்கொண்டு மெள்ளப் பதுங்குது.

செந்தமி ழிலக்கணம் தெரியார் கவிசொல்லிச்
சேரு மதன்குற்றம் தெரிந்தோர் வினவுங்கால்
சிந்தை மயங்கி விழித்தல்போற் கண்ணியில்
சிக்கிக் கொண்டிங்கொரு பக்கி விழிக்குது.

ஒருவன் பல்வகைச் சொற்களுரைப்ப தெனப் புட்கள்
ஒலிவகை யெலாங்கூவும் குருவி வருகுது
வருமிக் குருவியைத் தஞ்சைச் சரபோசி
மகராச னுக்கீந்தால் வெகுமானம் வாங்கலாம்.

—சரபேந்திர பூபாலக் குறவஞ்சி.

**நூலைப்பற்றி:** இது தஞ்சை மன்னன் சரபேந்திர ராஜனைக் குறித்துக் குறவஞ்சி என்னும் இலக்கணம் அமையப் பாடப் பட்டது. குறத்தி ஒருத்தி ஒரு பெண்ணின் கைரேகை பார்த்துக் குறி சொல்லுவாள். சொல்லும்போது அக் குறத்தி தன் அரசனுடைய நாடு, மலை இவற்றை எடுத்துக் கூறுவாள். அப்போது அவளைத் தேடி அவளுடைய கணவனான குறவன் அங்கு வருவான். இருவருக்கும் வாக்குவாதம் நடக்கும். அவ்வாதத்தில் அரசனுடைய புகழ், வீரம், கொடை முதலியவை வெளிப்படும். இவையெல்லாம் அமையப் பாடுவதே குறவஞ்சி என்னும் நூலாகும்.

## அருஞ் சொற் பொருள்:

சிறை - சிறகு, கம்புள் - கப்பங் கோழி, லெச்சம் - லட்சம் (நூறாயிரம்), பக்கி - பட்சி.

## ஆசிரியர் பற்றி

சிவக் கொழுந்து தேசிகர். கும்பகோணத்து அருகிலுள்ள திருக் கொட்டையூரில் பிறந்தவர். 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

## வருணனை

### மாலைக்காலம்

[இந்தப் பாடல், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை இயற்றிய ஆசிய ஜோதியில் கருணைக்கடல் என்ற தலைப்பிலிருந்து எடுத்துக் கொள்ளப் பட்டது].

செங்கதிர் வெம்மை தணிந்ததடி—வாசத்
    தென்றல் உலாவி எழுந்ததடி
பொங்கிவரும் சோணை மாநதியும்—ஒரு
    பொன்னிறம் பெற்றுப் பொலியுதடி
முல்லை மலர்ந்து மகிழ்ந்ததடி—ஆம்பல்
    மூடிய வாயுந் திறந்ததடி.

எல்லையிலா மலர்ச் சோலையிலே—வண்டும்
இன்னிசை பாடித் திரிந்ததடி
தாயும் இரங்கி வருகுதடி—கன்றும்
தாவிக் குதித்தோடிச் செல்லுதடி
ஆயும் பொழிலில் பறவைஎல்லாம்—அந்தி
அங்காடி போல ஒலிக்குதடி.

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

## குறிப்புரை

கதிர் - சூரியன், தணிந்தது - அடங்கிற்று, பொலியுது - விளங்குகிறது, எல்லை - அளவு, ஆயும் - ஆராயும், பொழில் - சோலை, அந்தி - மாலை, அங்காடி - கடைத் தெரு.

## மேலாடையின் மேன்மை

[இந்தப் பாடலைப் பாடியவர், நையாண்டிப் புலவர். இவர் சமீபகாலத்திலிருந்தவர்; சொல் நயம், பொருள் நயம் தோன்றப் பாடுந் திறமை வாய்ந்தவர்.]

மேலாடை இன்றிச் சபைபுகுந் தால்இந்த மேதினி
[யோர்
நூலா யிரம்படித் தாலுமெண் ணார்நுவல் பாற்
[கடலோ
மாலா னவர்அணி பொன்னுடை கண்டு மகளைத்
[தந்தே
ஆலாலம் ஈந்தது தோலாடை சுற்றும் அரன்
[தனக்கே.

—நையாண்டிப் புலவர்.

## குறிப்புரை

மேதினியோர் - உலகிலுள்ளோர், எண்ணார் - மதிக்க மாட்டார், நுவல் - சொல்லப்படும், மாலானவர் – திருமால், பொன்னுடை - பீதாம்பரம், ஆலாலம் - விஷம், அரன் - சிவ பெருமான்.

## பழக்கமும் பிறவிக்குணமும்

[ இப் பாடலைப் பாடியவர், ஔவையார் ]

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம்.

### குறிப்புரை

நா - நாக்கு, நித்தம் - தினந்தோறும், நடை - ஒழுக்கம், தயை - கருணை, கொடை - கொடுத்தல்.

## செருப்பின் பயன்

[ இப் பாடலைப் பாடியவர், காளமேகப் புலவர்; 300 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் ]

கல்லும் உறுத்தாது காலில்முள் தைக்காது
எல்லைமார்த் தாண்டன்சூடு ஏறாது—தொல்லைவரும்
மாலை இருளில் வழிநடக்கக் கூசாது
காலில் செருப்பிருந்தக் கால்.

—காளமேகப் புலவர்.

### குறிப்புரை

எல்லை - பகல், மார்த்தாண்டன் - சூரியன், தொல்லை - துன்பம், இருந்தக்கால் - இருந்தால்.

## சிறியோர் தன்மை

[ இச் செய்யுள், தண்டலையார் சதகத்தில் உள்ளது. இதனைப் பாடியவர்: படிக்காசுப் புலவர்; ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். ]

சங்கையறப் படித்தாலும் கேட்டாலும் பிறர்க்குறுதி
தனைச் சொன்னாலும்
அங்கண்உலகில்சிறியோர் தாமடங்கி நடந்து கதி
அடைய மாட்டார்;

[னேன்
திங்கள் அணி சடையாரே! தண்டலையாரே சொன்
சிறிது காலம்
கங்கையிலே படர்ந்தாலும் பேய்ச்சுரைக்காய் நல்ல
சுரக்காயாகாதே.

—படிக்காசுப் புலவர்.

## குறிப்புரை

சங்கை - சந்தேகம், அங்கண் - அழகிய இடம், திங்கள்-சந்திரன், தண்டலை - தண்டலை நீள்நெறி என்னும் ஊர்.

(ஒரு செல்வரிடம் சென்று பலவாறு புகழ்ந்தும் புலவர் பரிசு பெருமல் கூறியது)

கல்லாத ஒருவனைநான் கற்ருய் என்றேன்;
காடறியும் அவனை நா(டு) ஆள்வாய் என்றேன்;
பொல்லாத ஒருவனைநான் நல்லாய் என்றேன்;
போர் முகத்தை அறியானைப் புலியே(று) என்
மல்லாரும் புயம்என்றேன் சூம்பல் தோளை; [றேன்;
வழங்காத கையனைநான் வள்ளல் என்றேன்;
இல்லாது சொன்னேனுக்(கு) இல்லை என்முன்.
யானும் என்றன் குற்றத்தால் ஏகின்றேனே.

—இராமச்சந்திரக் கவிராயர்.

## குறிப்புரை

போர் முகம் - போர்க் களம், புலியேறு - ஆண் புலி, மல்லாரும் - மற்போர் வலிமை நிறைந்த, சூம்பல் - வாடி மெலிந்த, வழங்காத - கொடாத, ஏகின்றேன் - செல்கின்றேன்.

## சங்கொலி

[ இந்தப் பாடலைப் பாடியவர், நாமக்கல். வே. இராமலிங்கம் பிள்ளை அவர்கள். இவர், இப்பொழுது வாழ்ந்து வரும் சிறந்த கவிஞர் ஆவர். ]

சாந்தி காந்தி சத்தியத்தின்
சங்கநாதம் கேட்குது
ஆய்ந்து பார்க்கத் தேவையில்லை
அதிலிருக்கும் நன்மையை
மாந்தருக்குள் சமூக வாழ்வு
மாறுமிந்தப் பொழுதிலே
சோர்ந்திடாமல் நமது நாட்டைத்
துயில் எழுப்பும் ஓசையாம்.

—நாமக்கல் வே. இராமலிங்கம் பிள்ளை.

### குறிப்புரை

சாந்தி - அமைதி, சத்தியம் - உண்மை, சங்கநாதம் - சங்கு ஒலி, மாந்தர் - மக்கள், சமூக வாழ்வு - ஒன்றுபட்ட வாழ்வு, துயில் - தூக்கம்.

TB
031(6)
N60
86839

419